இரண்டாம்பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32 | கதிர் 100 | வள்ளுவர் ஆண்டு 2048 | மாசி 22 திங்கட்கிழமை 06.03.2017

விலை - 20
பக்கங்கள் - 28

## பிலிப்பைன்ஸில் நில நடுக்கம்



மணிலா, மார்ச் 6
பிலிப்பைன்ஸ் நாட்டில் நேற்று சக்தி வாய்ந்த நில அதிர்வு >> 23

## ஐ.நாவில் கால அவகாசத்தைக் கேட்கவில்லை

# கண்காணிப்புடன் கூடிய கால அட்டவணையையே கோருகிறது கூட்டமைப்பு

### வடமராட்சியில் நேற்று சுமந்திரன் எம்.பி. திட்டவட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கூட்டமைப்பு கால அவகாசம் கோரவில்லை. இலங்கை அரசு இணங்கிக்கொண்ட விடயங்களை நிறைவேற்றாமல் தப்பித்துச் செல்வதற்கு இடமளிக்கக் கூடாது என்றே கோரியுள்ளோம். இணங்கிய விடயங்களைச் செயற்படுத்துவதற்கு ஐ.நா.வின் கடுமையான மேற்பார்வையின் கீழ் கால அட்டவணையை வழங்குமாறே கேட்டுள்ளோம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மேலும், ரோம் பிரகடனத்தில் இலங்கை கைச்சாத்திடவில்லை. இலங்கையை நேரடியாக பன்னாட்டு நீதிமன்றுக்குக் கொண்டு செல்ல முடியாது. >> 24

## சிறைச்சாலைக்குள் சிறப்பு நீதிமன்றம்

அச்சுறுத்தலுள்ள கைதிகளின் பாதுகாப்புக் கருதி யோசனை

கொழும்பு, மார்ச் 6

பெருங்குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் தொடர்பிலான வழக்கு விசாரணைகளை முன்னெடுப்பதற்கு சிறைச் சாலைக்குள்ளேயே நீதிமன்றப் பிரிவு' ஒன்றை அமைக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அண்மையில் களுத்துறை சிறைச்சாலையில் இருந்து பாதாள உலகக் குழு >> 23

## அரசமைப்பு மறுசீரமைப்பு என்பதில் மைத்திரி உறுதி

### சுதந்திரக் கட்சி கூறுகிறது

கொழும்பு, மார்ச் 6

அரசமைப்பு மறுசீரமைப்பே மேற்கொள்ளப்படும். புதிய அரசமைப்பு உருவாக்கப்பட மாட்டாது. இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழு மற்றும் மையச் செயற்குழுவிடம் உறுதியளித்துள்ளார் என்று அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்தார்.

அரசமைப்பு உருவாக்கத்துக்காக நியமிக்கப்பட்டுள்ள வழிநடத்தல் குழுவின் கூட்டம் நாளை செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ள நிலையில், இந்தத் தகவல் வெளியாகியுள்ளது. >> 22

## இந்தியப் படகுகளை விடுக்க வடக்கு மீனவர் போர்க்கொடி

### ஏப்ரலில் கொழும்புக்கு வருகிறார் இந்திய மீன்பிடித்துறை அமைச்சர்

கொழும்பு, மார்ச் 6

இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிப்பதற்கு வடக்கு மாகாண மீனவர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

வடக்கு மீனவர்களுடன் பேச்சு நடத்தப்பட்ட பின்னரே இந்த விடயம் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என்று கடற்றொழில் அமைச்சின் ஊடக இணைப்புச் செயலாளர் எம்.டி. வன்னிநாயக்க நேற்று 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார். >> 24

## முச்சந்தி முனி



உடைக்கிறதிலேயே குறியா இருக்கிறார் பாருங்கோ...

## தமிழ் இளைஞர்களைக் காணாமல் ஆக்கிய கட்சியே இப்போது போராட்டம் நடத்துகிறது

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 6

காணாமற்போனோருக்காக வவுனியாவில் அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் போராட்டம் நடத்தியுள்ளார்கள். அந்தக் கட்சியினர்தான் கடந்த காலங்களில் தமிழ் இளைஞர்கள் பலரைக் காணாமல் ஆக்கியிருந்தார்கள்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பருத்தித்துறையில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நா.வின் முன்னாள் பொதுச் செயலர் பான்கீமூன் கடந்த ஆண்டு யாழ்ப்பாணம் வந்திருந்தார். யாழ்ப்பாண பொதுநூலகத்தில் சந்திப்பு நடந்தது. பொது நூலகத்தின் முன்பாக காணாமற்போனோரின் உறவினர்கள் >> 24

## இணையத்தளங்கள் ஊடாக

## கூட்டமைப்பு மீது அவதூறு பரப்பி புலனாய்வாளர்கள் பரப்புரை

### மாவை எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 6

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக-எங்களுக்கு எதிராக அவதூறு பரப்புவதற்காக பொய்ப் பரப்புரை மேற்கொள்வதற்காக இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் இணையத்தளத்தை இயக்குகின்றனர்.

இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் >> 24

## இலங்கைக் கடற்படையைக் கண்டித்து

## கச்சதீவுத் திருவிழாவை புறக்கணிக்க ராமேஸ்வரம் மீனவர்கள் தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் கைது செய்யப்படுவதைக் கண்டித்து கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழாவை புறக்கணிக்கப் போவதாக இராமேஸ்வரம் மீனவர்கள் அறிவித்தனர்.

இராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவர் என். ஜே.போல் தலைமையில் நேற்றைய தினம் இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்தத் >> 24

## புதிய தீர்மான வரைவில் மாற்றங்களைச் செய்ய கொழும்பு கடும் முயற்சி

### கை வைத்தால் கடுமையாகும் என்று அங்கத்துவ நாடுகள் எச்சரிக்கை

ஜெனிவா, மார்ச் 6

இலங்கை தொடர்பில் ஐ.நா.வில் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மான வரைவில் மாற்றங்களை மேற்கொள்வதற்கு இலங்கை அரசு கடும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தாலும், வரைவில் எதுவித மாற்றங்களுமின்றியே நிறைவேற்றப்படும் என்று ஜெனிவா தகவல்கள் தெரிவிக்கின்றன.

தீர்மான வரைவில் மாற்றங்களை மேற்கொள்வதற்கும் நீர்த்துப் போகச் செய்ய >> 24

## பன்றிக் காய்ச்சல் தொற்று அபாயம்

## மருத்துவ ஆய்வுக்குத் தினமும் 2, 000 பேரின் குருதி மாதிரிகள்

கொழும்பு, மார்ச் 6

பன்றிக் காய்ச்சல் உள்ளிட்ட நோய்த் தொற்றுகளுக்கு எவராவது உள்ளாகியிருப்பின் ஒரு மருத்துவமனையிலிருந்து தலா 10 பேரின் குருதி மாதிரிகளை மட்டுமே ஒரு மாதத்தில் பரிசோதிக்க முடியும். அவ்வாறு மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவுக்குத் தினமும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குருதி மாதிரிகள் அனுப்பப்படுகின்றன.

இவ்வாறு அறிவுறுத்தல் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதனால் பன்றிக் காய்ச்சல் உட்பட நோய்த் தொற்றுக்கு உள்ளானவர்களின் மருத்துவ அறிக்கை உடனடியாகக் கிடைக்காது என்று சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

பன்றிக்காய்ச்சல் என்று அழைக்கப்படும் எச்1என்1 என்ற இன்புளுவென்சா வைரஸ் தாக்கம் மற்றும் டெங்கு உள்ளிட்ட நோய்த் தொற்றுகளின் பரிசோதனைக்காக நாட்டின் அனைத்து வைத்தியசாலைகளிலும் இருந்தும் தினமும் 2 ஆயிரத்துக்கும் >> 04



## காணாமற்போனோரின் உறவுகள் திருமலையிலும் அறவழிப்போர்

### நேற்று முதல் சுழற்சி முறை உணவு ஒறுப்பு

திருமலை, மார்ச் 6

தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத்தேடி அலையும் சங்கத்தினர் கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக நேற்று சுழற்சி முறையான உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். உவர்மலையிலுள்ள ஸ்ரீ வழிவிடு விநாயகர் ஆலயத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சமய >> 24

## காலநிலை மாற்றத்தால்

## குடாநாட்டில் விவசாயிகள் பாதிப்பு

அச்சுவேலி, மார்ச் 6

தொடர் மழையாலும் வானம் மப்பும் மந்தாரமுமாக காணப்படும் நிலைமையாலும் வெங்காயம் மற்றும் நெல் அறுவடை முற்றாகப் பாதிக்கப்பட்டிருப்பதோடு விளைந்த பயிர்களை அறுவடை >> 23

## ஐ.நாவுக்கு கடிதம் எழுதிய

# பதினொரு எம்.பிக்களும் சம்பந்தன், சுமந்திரனை விரட்டி அடிக்கவேண்டும்

### இப்படிக் கேட்கிறார் க.குமார்

யாழ்ப்பாணம், மார்ச் 6

"இலங்கைக்கு கால அவகாசம் வழங்கப்படக் கூடாது என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு கடிதம் அனுப்பிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 11 பேரும், கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் சுமந்திரனை தூக்கி எறிய வேண்டும். இல்லாவிடின் இவர்கள் கடிதம் அனுப்பியது மக்களை ஏமாற்றும் செயல். >> 24

# அதிபர் நியமனத்தை இடைநிறுத்தினால் தொடர் போராட்டம்

## கொக்குவில் இந்துக் கல்லூரி சமூகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 6

வடக்கு மாகாண சபையின் கல்விக் கூட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் நியமனத்தை இடை நிறுத்த வேண்டும் என்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அதிபர் நியமனத்தை இடநிறுத்தினால் காலவரையற்ற போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாக பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் அறிவித்தனர்.

இது தொடர்பில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் அ.பஞ்சலிங்கம் தெரிவித்ததாவது:

எமது பாடசாலையில் கடமையாற்றி வந்த முன்னாள் அதிபர் ஓய்வு பெற்றமையைத் தொடர்ந்து, வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளரால் பாடசாலைக்குரிய அதிபர் பதவிக்குரிய வெற்றிடத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

வடக்கு மாகாணத்தில் கடமையாற்றுகின்ற அதிபர் சேவை வகுப்பு 1 மற்றும் 2 ஐச் சேர்ந்த அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டமைக்குஇணங்க எமது பாடசாலைக்குரிய தகுதி அடிப்படையில் வடக்கு மாகாண கல்வியமைச்சால் கடந்த மாதம் 23 ஆம் திகதிபுதிய அதிபராக ப.கணேசன் நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் சிலர், கடமையில் உள்ள அதிபரை மாற்ற வேண்டும் எனக் கூறி, அவரை இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். பாடசாலை அதிபராக ஒருவரை நியமித்துவிட்டு, குறுகிய காலத்துக்குள்ளேயே எந்தக் காரணமும் இல்லாமல் அவரை நீக்க நினைப்பது வேடிக்கையாக இருக்கின்றது. எங்கள் கல்லூரி மீது களங்கம் ஏற்படுத்தும் சம்பவமாகவே இது அமைகின்றது.

அதிபர் தரம் 1இல் இல்லாத ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் எனக் கூறுபவர்கள், அதிபர்களின் தரங்களை மட்டும் கவனத்தில் எடுக்காது, அவர்களின் ஆளுமைகளையும் கவனத்தில் எடுக்க வேண்டும். பல கல்லூரிகளில் அதிபர் தரம் 1 உள்ளவர்கள் இல்லை. அப்படியாயின் எங்கள் கல்லூரி அதிபர் நியமனத்தில் மட்டும்ஏன் வடக்குமாகாண சபை குழப்பங்களை ஏற்படுத்த முனைகின்றது.

எனவே தற்பொழுது எங்கள் பாடசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ள அதிபரை மாணவர்களும் பெற்றோர்களும் வரவேற்றுள்ளனர். ஆகவே இந்த அதிபரை இடமாற்றம் செய்ய முட்படும் வடக்கு மாகாண சபைக்கும்அதன்சிலஉறுப்பினர்களுக்கும் எதிர்ப்பு தெரிவித்து காலவரையற்ற போராட்டத்தில் ஈடுபடப்போவதாக மாணவர்களும் பெற்றோர்களும் தீர்மானித்துள்ளனர். அவர்களின் இந்தப் போராட்துக்கு பழைய மாணவர் சங்கம் முழுமையான ஆதரவை வழங்கும் என்றார். (வ-8)

# வடக்கு, கிழக்கு முழுவதும் ஆதரவு கிடைக்கவேண்டும்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்து



கிளிநொச்சி, மார்ச் 6

கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த மக்கள் மட்டுமல்லாது வடக்கு, கிழக்கு முழுவதுமுள்ள அனைவரும் எமக்கு ஆதரவை வழங்குங்கள் என கேட்டு கொண்ட கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், அனைத்து மக்களும் தமக்கான ரோதரவை வழக்குவார்கள் என்று நம்பிக்கை வெளியிட்டனர்.

கிளிநொச்சி, மற்றும் வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள்நாளுக்கு நாள் விரிவடைந்து செல்கின்றது. மாவட்டங்களினுடைய அனைத்து மக்களும் தினமும் போராட்டக் களத்துக்கு வருகை தந்து தமது ஆதரவுகளை வழங்குகின்றனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடுதலையையும் வெளிப்படுத்தலையும் வலியுறுத்தி கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் 14 ஆவது நாளாக நேற்றும் தொடர் போராட்டத்தை முன்னெடுத் தனர். இந்தப் போராட்டத்துக்கு ஆதவு தெரிவித்து, கிளிநொச்சி, பரந்தன் கிராமத்தை சேர்ந்த மக்கள் ஒன்றிணைந்து போராட்டத்தில் பங்கெடுத்தனர். கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் கிளிநொச்சி பகுதியை சேர்ந்த மக்கள், பொது அமைப்புக்கள், இளைஞர் கழகங்கள், மாணவர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர் என பலரும் இது வரை ஆதரவுகளை வழங்கியிருந்தனர்.

வவுனியா மாவட்டத்தை சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களால் முன்னெடுக்கப்படும் சுழற்சி முறையிலான உணவு ஒறுப்பு போராட்டம் நேற்று 10 ஆவது நாளாகவும் தொடர்ந்தது. இந்த மக்களுடைய போராட்டத்துக்கும் அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள், பல்கலைகழக மாணவர்கள், என பலரும் தமது ஆதரவுகளை வழங்கியிருந்தனர். நேற்று முன்தினம்ஆரம்பிக்கப்பட்டகையெழுத்துவேட்டை நேற்றும் தொடர்ந்தது. (வ-21-35)

# கடற்படை வாகனம் மோதி சிறுவன் பரிதாபச் சாவு

கொழும்பு, மார்ச் 6

கடற்படையினரின் காரும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் 12 வயதுச் சிறுவன் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கஹட்டகஸ்திகிலிய பிரதேசத்தில் நேற்று அதிகாலை விபத்து இடம்பெற்றது. சைக்கிளில் பயணித்த 12 வயது மாணவனே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படையினர் பயணித் கார், சாலையில் மோட்டார் சைக்கிளை முந்திச் செல்ல முற்பட்டபோதே இந்த விபத்து ஏற்பட்டது. சிறுவன் காயமடைந்த நிலையில் தம்மல்னேவ பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர், அனுராதபுர வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும் போது சிறுவன் உயிரிழந்தார் என்று பொலிஸாரால் மேலும் தெரிவிக்கப்பட்டது. (வ-4)

# 6 பவர் செட் ரக தொடருந்துகளை டில்லியிடம் வாங்குகிறது கொழும்பு

கொழும்பு, மார்ச் 6

பவர் செட் ரக 6 தொடருந்துகளைக் கொள்வனவு செய்ய தொடருந்துத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது .

இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட 10 தொடருந்து இயந்திரத் தொகுதிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன என்று கடந்த வாரம் அறிவிக்கப்பட்டது. எனினும் அவற்றுடன் குறித்த பவர் செட் ரக தொடருந்துகளையும் கொள்வனவு செய்து சேவையில் ஈடுபடுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொது மக்களுக்கு போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் இவை கொள்வனவு செய்யப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

10 தொடருந்து இயந்திரத் தொகுதிகளுக்கும், 42 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், 6 "பவர் செட்" தொடருந்துகளுக்கும், 58 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் கொழும்பு அரசு செலவிடவுள்ளது. இந்தத் தொகையை இந்தியா சலுகைக் கடன் அடிப்படையில் வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (வ-4)



# பருத்தித்துறையில் 46 இளையோர் தமிழ் அரசுக் கட்சியில் இணைந்தனர்

யாழ்ப்பாணம், மார்ச் 6

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பருதித்துறைக் கிளையில் 46 இளைஞர்கள் நேற்று இணைந்து கொண்டனர். அவர்களுக்கு அங்கத்துவம் வழங்கப்பட்டது.

பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத் தெருவில் உள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பருதித்துறைக் கிளையில், இளைஞர்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்ட பலர் பங்குபற்றினர்.

கட்சியில் இணைந்து கொள்வதற்கு விண்ணப்பித்த 46 இளைஞர்களுக்கு நேற்று உறுப்புரிமை வழங்கப்பட்டது. (வ-5-26-173)

# ஐஎம்எப் பணிப்பாளரின் கொழும்புப் பயணம் பிற்போடப்பட்டது

கொழும்பு, மார்ச் 6

பன்னாட்டு நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்ரின் லெகாட்டின் கொழும்புக்கு இந்த மாதம் வருகை தரத் திட்டமிட்டிருந்த நிலையில், அந்தப் பயணம் பிற்போடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கிறிஸ்ரின் லெகாட்டின் கால அட்டவணையில் மேற்கொள்ளப்பட்ட எதிர்பாராத மாற்றம் காரணமாக அவரின் பயணம் பிற்போடப்பட்டதாக நாணய நிதியம் அறிவித்தது.

எதிர்காலத்தில் இலங்கைக்குப் பயணம்செய்வதற்குகிறிஸ்ரின்லெகாட் எதிர்பார்த்துள்ளார் என்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் பேச்சாளர் ஹரி ரைய்ஸ் தெரிவித்தார்.

ஆசியாவிலுள்ள மற்றுமொரு நாட்டுக்கான பயணத்தின்போது மரியாதை நிமிர்த்தம் இலங்கைக்குப் பயணம் செய்ய கிறிஸ்ரின் லெகாட் திட்டமிட்டிருந்ததாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க முன்னர் தெரிவித்திருந்தார்.

கடந்த ஆண்டின் நடுப்பகுதியில் இலங்கைக்கு வழங்குவதாக உறுதி அளிக்கப்பட்ட 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் குறித்த மீளாய்வு செயற்பாடுகளை கொழும்புக்குப் பயணம் செய்துள்ள பன்னாட்டு நாணய நிதியக் குழுவினர் மேற்கொண்டுவருகின்றனர். பெருங்கடன் மற்றும் மீள் கொடுப்பனவு அழுத்தங்களால் இலங்கை கடுமையான நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளது.

இந்த நிலையில் நட்டத்தை சந்தித்து வரும் அரச நிறுவனங்களை செயற்றிறன் மிக்கதாக உருவாக்குவதற்கும் பன்னாட்டு நாணய நிதியத்தின் கடன் நிபந்தனைகளை நிறைவு செய்யும் வகையில் அவற்றை மாற்றும் வகையிலும் சில கடுமையான மறுசீரமைப்புக்களை மேற்கொள்ள கடந்த வாரம் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. (வ-4)

# தொடருந்தில் பாய்ந்து உயிரை மாய்க்க முயன்ற முதியவர் காப்பாற்றப்பட்டார்

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ். இந்து மகளிர் கல்லூரி சாலையில் உள்ள தொடருந்துக் கடவையில் நேற்றைய தினம் தொடருந்தில் வீழ்ந்து உயிர் துறக்க முற்பட்டதாக் கூறப்படும் முதியவர் ஒருவர் காப்பாற்றப்பட்டு யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

யாழ். இந்து மகளிர் கல்லூரி சாலையில் உள்ள தொடருந்துக் கடவையில் நேற்றுக் காலை 10 மணியளவில் தொடருந்தில் வீழ்ந்து உயிரை மாய்க்கும் நோக்கினில் 72 வயது முதியவர் ஒருவர் தண்டவாளத்தில் படுத்துள்ளார். அந்த முதியவரை பாதுகாப்புக் கடவைக் காவலாளி அவதானித்துள்ளார். உடனே ஓடிச் சென்று சாலையால் பயணித்தவர்களின் உதவியுடன் முதியவரைக் காவலாளி காப்பாற்றியுள்ளார்.

"முதியவர் இதற்கு முன்னரும் இதே போன்று இரு தடவைகள் இவ்வாறு உயிரை மாய்க்க முயன்றார். நேற்றைய தினம் அதே முயற்சியை மேற்கொண்டார். முதியவரின் உடலில் சில காயங்கள் காணப்பட்டன. அது தொடர்பினில் யாழ்ப்பாணப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது" என்று அவரை காப்பாற்றியவர்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் குறித்த முதியவரை ஏற்றிச் சென்றதோடு, சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளிலும் ஈடுபட்டுள்ளனர். (வ-101)

# மன்னார் மேல் நீதிமன்றுக்கு நீதிபதி மனாப் நியமனம்

கொழும்பு, மார்ச் 6

மாவட்ட நீதிபதி ரி.எல்.ஏ. மனாப், மேல் நீதிமன்ற நீதிபதியாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் பதவி உயர்வு பெற்றார். அவரை இன்று நடைமுறைக்கு வரும் வகையில் மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதியாக நீதிச் சேவை ஆணைக்குழு நியமனம் வழங்கியுள்ளது.

2000ஆம் ஆண்டு நீதிச் சேவைக்குள் இணைந்து கொண்ட நீதிபதி ரி.எல்.எவ். மனாப் வடக்கு, கிழக்கு உள்ளிட்டபிரதேசங்களில் மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றி வந்தார். நீதிச் சேவையில் சிறப்புத் தரத்துக்கு 2013ஆம் ஆண்டு அவர் பதவியுயர்வு பெற்றார்.

வவுனியா மாவட்ட நீதிபதியாக கடமையாற்றிவந்த நீதிபதி ரி.எல்.ஏ. மனாப் மூப்பின் அடிப்படையில் நீதிச் சேவை ஆணைக்குழுவின் பரிந்துரையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் மேல் நீதிமன்ற நீதிபதியாகப் பதவியுயர்வு பெற்றுள்ளார். அவரை இன்று நடைமுறைக்கு வரும் வகையில் மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதியாகக் கடமைகளைப் பொறுப்பேற்குமாறு நீதிச் சேவை ஆணைக்குழுவால் நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. (வ)

# 5 நாள் கடந்து தொடர்கின்றது கேப்பாபிலவு அறவழிப் போர்





முல்லைத்தீவு, மார்ச் 6
இராணுவம் கையகப்படுத்தியுள்ள தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று கோரி கேப்பாப்பிலவு மக்கள் நடத்தி வரும்அறவழிப்போராட்டம்நேற்று ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்தது. அவர்கள் நேற்று மு.ப. 10 மணியளவில் கவனவீர்ப்புப் போராட்டமும் நடத்தினர்.
அருட் சகோதரிகள் நேற்றுப் போராட்டக் களத்துக்குச் சென்று மக்களுக்கு ஆதரவுவழங்கினர். பொதுமக்களுக்கான உள ஆற்றுப்படுத்தல்களையும் மேற்கொண்டனர்.
கேப்பாப்பிலவு மக்கள் நடத்தும் தொடர் அறவழிப் போராட்டத்துக்கு தொடர் அறவழிப் போராட்டத்தின் மூலம் தமது நிலங்களுக்குச் சென்ற பிலக்குடியிருப்புப் பொதுமக்களும் நேரில் சென்று தமது ஆதரவைத் தெரிவித்தனர். போராட்டத்திலும் கலந்து கொண்டனர்.
கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது "இராணுவமே வெளியேறு. எமது நிலம் எமக்கு வேண்டும், எமது நந்திக்கடல் எமக்கு வேண்டும், எமது பாடசாலை எமக்கு வேண்டும், எமது கோயில் எமக்கு வேண்டும்." என்று மக்கள் கோசமிட்டனர்.
"கேப்பாப்பிலவுக் கிராமத்தில் 135 குடும்பங்ளுக்குச் சொந்தமான 450 ஏக்கர் காணிகளை இராணுவம் விடுவிக்க வேண்டும். எமது காணிகளை எங்களிடம் ஒப்படைத்து விட்டு அவர்கள் கேப்பாபிலவில் உள்ள அரச காணிகளில் தமது முகாம்களை அமைத்துக் கொள்ள வேண்டும்." என்று மக்கள் வலியுறுத்தினர். கேப்பாப்பிலவு முகாமுக்கு முன்பாகத் தகரக் கொட்டகை அமைத்து கடந்த ஐந்து நாள்களாகத் தொடர்ச்சியாக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (ற-7)

## சைட்டம் தலைவரிடம் நூறு கோடி ரூபா இழப்பீடு கோருகிறது மருத்துவ சங்கம்

கொழும்பு, மார்ச்.6
சைட்டம் நிறுவனத் தலைவர் மருத்துவர் நெவில் பர்னாந்து வெளியிட்ட கருத்துக்கு இழப்பீடாக அவரிடம் இலங்கை மருத்துவ சங்கம் நூறு கோடி ரூபாவை இழப்பீடாகக் கோரியுள்ளது.
மாலபே, தனியார் மருத்துவக் கல்லூரியின் (சைட்டம்) தலைமை நிறைவேற்று அதிகாரி மருத்துவர் சமீர சேனாரத்னவின் கார் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தின் பின்னணியில் இலங்கை மருத்துவ சங்கமும் இருந்தது என்று சைட்டம் நிறுவனத் தலைவர் மருத்துவர் நெவில் பர்னாந்து கருத்து வெளியிட்டிருந்தார்.
இந்தக் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இலங்கை மருத்துவ சங்கம் அவரிடமிருந்து நூறு கோடி ரூபாவை இழப்பீட்டுத் தொகையாகக் கோரியுள்ளது.
இந்த அர்த்தமற்ற குற்றச்சாட்டால் தங்கள் சங்கத்தின் மீது களங்கம் கற்பிக்க நெவில் பர்னாந்த முயன்றிருப்பதால், இந்த இழப்பீட்டுக்காக விரைவில் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்படவுள்ளது என்று அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது. (ஜ-4)

## பிணைமுறி வர்த்தமானி சட்டபூர்வமானது

### மத்திய வங்கி கூறுகிறது

கொழும்பு, மார்ச் 6
திறைசேரி பிணைமுறிகள் வழங்கப்படுவது தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மத்திய வங்கிக்கான சட்டதிட்டங்களின்படி சட்டபூர்வமானதே என்று இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க சட்டமூலத்தின்படி அரச திறைசேரி பிணைமுறிகளின் விநியோகம் பற்றிய தீர்மானத்தை எடுக்கும் உரிமை மத்திய வங்கிக்கு உள்ளது எனவும், அதன் பிரகாரம் பிணைமுறிகள் விநியோகம் தொடர்பான மத்திய வங்கியின் வர்த்தமானி அறிவித்தல் சட்டபூர்வமானதே எனவும் அந்த அறிக்கையில் விளக்கம் தரப்பட்டுள்ளது. (ற-4)

## பெரும்பான்மையினர் கையில் வவு. வடக்கு செல்லும் அபாயம்

### வவு. பிரஜைகள் குழு ஸ்தாபகர் சுட்டிக்காட்டு

வவுனியா, மார்ச் 6
வவுனியா வெடிவைத்தகல் 221 ஏ தமிழ் கிராமத்தில் 730 சிங்கள வாக்காளர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். எதிர்காலத்தில் வவுனியா வடக்குப் பிரதேச செயலக நிர்வாகம் பெரும்பான்மையினரின் கட்டுப்பாட்டில் செல்லக்கூடிய வாய்ப்பு உள்ளது.
இவ்வாறு வவுனியா பிரஜைகள் குழுவின் ஸ்தாபகர் கே.தேவராஜா தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
வவுனியா வெடிவைத்தகல் 221 ஏ தமிழ் கிராமத்தில் 2016 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் 730 சிங்கள வாக்கஎர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.
இறுதிக்கட்டப்போருக்கு முன்னர் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள தமிழ் மக்கள் மட்டுமே வாழும் பட்டிக்குடியிருப்பு கிராம சேவையாளர் பிரிவின் வாக்காளர் இடாப்பில் 3 ஆயிரம் பெரும்பான்மையினர் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டனர். கடந்த ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட எல்லை நிர்ணயம் தவறு எனக்கூறி தற்போதைய அரசு திருத்தம் செய்தது.
2016 வாக்காளர் இடாப்பில் தனித்து தமிழ் மக்கள் வாழும் கிராமமான வெடி வைத்தகல் கிராம சேவையாளர் பிரிவில் 730 சிங்களவர்களை வாக்காளர்களாக உள்ளடக்கியுள்ளது.
இதன் மூலம் வவுனியா வடக்குப் பகுதி பெரும்பான்மையினர் வசம் செல்லும் நிலை காணப்படும். என்றார். (ற-21)

## மகிந்த அணியின் ஆயுள் ஓகஸ்டுடன் நிறைவுறும்

### அமைச்சர் ராஜித கூறுகிறார்

கொழும்பு, மார்ச்.6
மகிந்த ஆதரவு அணியின் அரசியல் வாழ்க்கைக் காலம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துடன் முடிவடையும் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
மகிந்த ஆதரவு அணி எந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தாலும், அவை அவர்களை நோக்கியே திரும்புகிறது. மகிந்த ஆதரவு அணியின் முக்கிய சில நபர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஊழல் மோசடிகளுக்கு, அடுத்த ஆகஸ்ட் மாதமளவில் தண்டனை வழங்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார். (ஜ-4)

## இந்திய மீனவர் அத்துமீறல் கடந்தாண்டு குறைவு

கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டு குறைந்தளவு இந்திய மீனவர்களே இலங்கை கடற்பரப்பில் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு யாழ். மாவட்ட நீரியல் வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் சுதாகர் தெரிவித்தார்.
2013 ஆம் ஆண்டு 48 இந்தியப் படகுகளுடன் 220 மீனவர்களும், 2014 ஆம் ஆண்டு 100 படகுகளுடன் 477 மீனவர்களும், 2015 ஆம் ஆண்டு 43 படகுகளுடன் 273 மீனவர்களும் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடித்தமைக்காகக் கைது செய்யப்பட்டனர். 2016 ஆம் ஆண்டு 29 படகுகளுடன் 140 மீனவர்கள் மட்டுமே அத்துமீறி மீன் பிடித்தமைக் காகக் கைது செய்யப்பட்டனர். (ற-4)

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன்
தேவஸ்தானம் மஹா சத சண்டியாகம் - 2017
5 ஆவது நாள் உற்சவம்



வந்திப்பவர் உன்னை, வானவர் தானவர் ஆனவர்கள்,
சிந்திப்பவர், நற்றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப்பவர், அழியாப்பர மானந்தர், பாரில் உன்னைச்
சந்திப்பவர்க்கு எளிதாம் - எம்பிராட்டி! நின் தண்ணளியே!
ஐந்தாம் நாள் யாகத்தின் உபயகாரர்கள்.

## மடத்துக்கரை முத்துமாரிக்கு வெள்ளியன்று தேர்

காரைநகர், மார்ச் 6
காரைநகர் மடத்துக்கரை முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத்து டன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 12 தினங்கள் சிறப்பாக இடம்பெற உள்ளது. தேர்த் திருவிழா எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் மாசி மகத் தீர்த்த திருவிழா மறுநாள் சனிக்கிழமையும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-250)

## மெய்வன்மைப் போட்டி

காரைநகர், மார்ச் 6
காரைநகர் வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய முதல்வர் க.நேத்திரானந்தன் தலைமையில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண உடற்கல்வித்துறைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலனும் சிறப்பு விருந்தினர்களாக உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய பிரதி அதிபர் க.கலைக்குமாரும், காரைநகர் இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் ப.செல்வக்குமாரும் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-250)

## காரைநகர் பிரதேச செயலக விளையாட்டு விழா நாளை

காரைநகர், மார்ச் 6
காரைநகர் பிரதேச செயலகத்தால் நடாத்தப்படும் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே யான வருடாந்த விளையாட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச விளையாட்டு மைதானத்தில் காரைநகர் பிரதேச செயலர் ஈ.தயாரூபன் தலைமையில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட மூத்த நில அளவை அத்தியட்சகர் பொ.சிவானந்தன் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-250)

# முகத்தை மறைக்கும் தலைக்கவசம் நீக்கம்

### எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் போராட்டம்

கொழும்பு, மார்ச் 6
முழுமையாக முகத்தை மறைக்கும் தலைக்கவசத்தை நீக்குவது தொடர்பில் அண்மையில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பில் நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்டது.
இந்த விடயம் தொடர்பில் அரச தலைவருடன் கலந்துரையாடல் ஒன்றுக்கு வாய்ப்பளிக்குமாறு கோரி அனைத்து இலங்கை மோட்டார் சைக்கிள் உரிமையாளர் சங்கம், கொழும்பு காலி முகத்திடல் சுற்றுவட்டத்துக்கு முன்னால் உள்ள சாலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
வர்த்தமானி அறிவித்தலில் தலைக்கவசம் தொடர்பிலான ஆறாவது சரத்தின் கீழ் நீதிமன்ற உத்தரவின் பேரில் முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக்கவசத்துக்குத் தடை விதிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-4)

# சாலையில் சென்றவர் திடீரென வீழ்ந்து சாவு



வவுனியா, மார்ச் 6
சாலையில் நடந்து சென்றவர் திடீரென நிலத்தில் வீழ்ந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில், வவுனியா பண்டாரிக்குளம் மாடசாமி கோவிலுக்கும், முனியப்பர் கோவிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் இடம்பெற்றது. இதில் வவுனியா உக்கிளாங்குளத்தைச் சேர்ந்த துரைராசா கணேசலிங்கம் (வயது 43) என்பவரே உயிரிழந்தார்.
"குறித்த பகுதியில் உள்ள கடையொன்றினுள் சென்ற அந்த நபர் அங்கு குடிதண்ணீர் வேண்டிப் பருகிவிட்டு நடந்து சென்ற நிலையிலேயே நிலத்தில் வீழ்ந்து சாவடைந்தார். அவருடைய உடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது. பரிசோதனைகள் முடிவடையவில்லை. சாவுக்கான சரியான காரணமும் தெரியவில்லை" என்று வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-21)



# யோகபுரம் அறநெறிப் பாடசாலைக்கு புதிய கட்டடம் அமைக்க அடிக்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 6
யாழ்ப்பாணம், உரும்பிராய் யோகபுரம் ஆதி பராசக்தி அம்பாள் ஆலயத்துக்கு அருகிலுள்ள அறநெறிப் பாடசாலைக்கு புதிய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
லண்டன் ஈலிங் கனக துர்க்கை அம்மன் ஆலய நம்பிக்கை நிதியத்தினாலும், உரும்பிராயைச் சேர்ந்த லண்டன் வாழ் அபிமானிகளாலும் அறநெறி பாடசாலைக் கட்டடத்தை அமைப்பதற்கான நிதிப் பங்களிப்பு செய்யப்படுகிறது.
லண்டன் ஈலிங் கனக துர்க்கை அம்மன் ஆலய நம்பிக்கை நிதியத் தலைவர் ஆர்.டீ ரட்ணசிங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் ஆலய நிர்வாகிகளின் பங்குபற்றுதலுடன் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடப்பட்டது. (வ)

## ஆபத்தான பணிகளிலுள்ளோருக்கு ஆயுள் காப்புறுதி இனிக் கட்டாயம்

கொழும்பு, மார்ச் 6
ஆபத்தான தொழில்களில் பணியாற்றும் தனியார்துறை ஊழியர்களுக்கு ஆயுள் காப்புறுதியைக் கட்டாயமாக்கப் படுவதற்கான சட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
ஊழியர் இறக்கும் போது செலுத்தப்படும் இழப்பீட்டுத் தொகையை இரண்டு மடங்காக அதிகரிப்பதற்கும் தொழிற்சாலை தொடர்பான சட்டத்தில் திருத்தங்கள் பல கொண்டு வரப்படவுள்ளன என்று தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் டபிள்யு.டி.ஜே.செனவிரத்ன தெரிவித்தார்.
கடந்த சில தினங்களில் கைத்தொழிற்சாலைகளிலும் வேலைத்தளங்களிலும் ஊழியர்கள் சிலர் உயிரிழந்தமை தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய துரிதமான நடவடிக்கைகளை கண்டறிவதற்காக தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இது குறித்து ஆராயப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (வ)

## கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 6
யாழ்ப்பாண வணிகர் கழகத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பி.ப 3 மணிக்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் தலைமையில் நடைபெறவுள்ளது என யாழ்ப்பாண வணிகர் கழகச் செயலர் இ.ஜனக்குமார் தெரிவித்தார்.
யாழ்ப்பாண மாவட்டத்தில் இடைவிலகல் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள வறுமைக் கோட்டுக்குட்பட்ட 500 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படவுள்ளது.
யாழ். வணிகர் கழகத்தின் நிதி அனுசரணையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராசாவும் ஏனைய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ர-10)

## பொலிஸ் அதிகாரி சடலமாக மீட்பு

மருதானை பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் அதிகாரி நேற்று தவறான முடிவு எடுத்து சாவடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
மருதானை பொலிஸ் நிலைய பொலிஸ் சமூக நலப்பிரிவின் பொறுப்பதிகாரியே இவ்வாறு தவறான முடிவு எடுத்து சாவடைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (5)



## மருத்துவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேற்பட்ட குருதி மாதிரிகள் மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவுக்கு அனுப்பப்படுகின்றன. அதனால் அனுப்பப்படும் மாதிரிகளின் அறிக்கை கிடைப்பதற்கு 4 நாள்கள் வரையில் காலதாமதமாகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.
பன்றிக்காய்ச்சல் என்று அழைக்கப்படும் எச்1என்1 என்ற இன்புளுவென்சா வைரஸால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வடக்கில் இதுவரை சுமார் 30 பேர் வரையில்தான் என்று மருத்துவ அதிகாரிகள் தகவல் வெளிப்படுத்துகின்றனர்.
இந்தத் தொற்றுக்கு உள்ளாகியிருப்பார் என்ற சந்தேகத்தில் ஏராளமானவர்கள் வந்தாலும் உறுதிப்படுத்தப்பட்டவர்கள் குறைவுதான் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர். (வ-4)

# விபத்துக்குள்ளானது ஓட்டோ அதில் பயணித்த இருவர் மாயம்

கொழும்பு, மார்ச் 6
பேத்தவ வீதி, ஹுனு கந்தவெல்ல விகாரைக்கு அருகிலுள்ள பாலத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளான முச்சக்கரவண்டியில் பயணித்த இருவர் காணாமல் போயுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை 3 மணியளவில் வெல்லவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்றது.
பெண் ஒருவர் உட்பட ஆண்கள் மூவர் குறித்த முச்சக்கர வண்டியில் பயணித்துள்ளனர். அந்த முச்சக்கர வண்டி, வீதியை விட்டு விலகி தெதுரு ஓயாவில் வீழ்ந்துள்ளது. இதன் போது, இருவர் தங்களது உயிர்களைக் காப்பாற்றி கரை சேர்ந்துள்ளனர். அதில் பயணித்த பெண் ஒருவரும், ஆண் ஒருவரும் காணமல் போயுள்ளனர். போதுமக்களுடன் இணைந்து, குறித்த இருவரையும் தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-10)

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்குக் கௌரவம்

வவுனியா, மார்ச் 6
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுச் சித்தியெய்திய வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் உள்ள ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கான புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு, கடந்த புதன்கிழமை வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.
கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளர், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்வி அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்ட இந்த நிகழ்வில், வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களைச் சேர்ந்த 300 மாணவர்களுக்கு தலா பதினையாயிரம் ரூபா வீதம் நிதி உதவி வழங்கப்பட்டது.
ஆங்கில/சிங்கள அகராதி மற்றும் கற்றல் உபகரணங்களும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. பாடசாலை மாணவர்களின் சிங்கள மற்றும் தமிழ், முஸ்லிம் கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன. (வ-250)

# பிரதேச சபையின் அனுமதியின்றி குடிமனைக்குள் கல்யாண மண்டபம்

## நல்லூர்ப் பிரதேச சபை தொடர்ந்தும் மௌனம்

யாழ்ப்பாணம், மார்ச் 6
நல்லூர்ப் பிரதேச சபைக்குட்பட்ட கோண்டாவில் பகுதியில் பிரதேச சபையின் அனுமதியின்றி கல்யாண மண்டபம் ஒன்று கட்டப்பட்டு வருகின்றது.
இந்த மண்டபம் குடிமனைகள் நெருக்கமாகவுள்ள இடத்தில் அமைக்கப்பட்டு வருவதால், அதனைத் தடை செய்யுமாறு அந்தப் பிரதேச மக்கள் சிலர் நல்லூர் பிரதேசசபைக்கு முறைப்பாடு செய்திருந்தும் பிரதேச சபை பல மாதங்களாக மௌனம் காத்து வருவதாக மக்கள் விசனம் தெரிவித்தனர்.
இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:
"கே.கே.எஸ்.வீதி கோண்டாவில் மேற்கு கோண்டாவில் என்னும் முகவரியில் கட்டப்படும் இந்தக் கட்டடம் தொடர்பில் பிரதேச மக்கள், பிரதேச சபையுடன் பலமுறை தெரிவித்தோம். ஆனால், அந்தக் கட்டடம் தங்களது அனுமதியின்றி கட்டப்பட்டு வருவதாக பொறுப்பற்ற முறையில் பிரதேச சபை அதிகாரிகள் பதிலளித்தனர்.
அத்துமீறிக் கட்டடம் கட்டும் கட்டடச் சொந்தக்காரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முன்வரவில்லை. இந்த நிலையில் இரண்டு மாடிகளைக் கொண்ட இந்தக் கல்யாண மண்டபம் கட்டி முடிக்கப்பட்டு திருமண நிகழ்வும் நடைபெற்றது.
இந்த மண்டபம் கே.கே.எஸ்.வீதியின் மேற்குப் பக்கம் உள்ள சிறுவீதியின் உள்ளே அமைக்கப்பட்டிருப்பதால், திருமண வைபவத்தின் போது உள்வீதியிலும், கே.கே.எஸ்.வீதியிலும் வாகன நெருக்கடிகள் ஏற்பட்டு வருகின்றன.
இது இயல்பான போக்குவரத்துக்கு தடையாக அமைவதுடன், விபத்துக்கள் ஏற்படவும் ஏதுவாகின்றது. மறுபுறம் பலத்த சத்தத்துடனான ஒலிபெருக்கிப் பாவனை காரணமாக குடிமனை நெருக்கமாகவுள்ள அயலவர்கள் பல அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர்.
அத்துடன் கழிவகற்றும் முறையும் சரியாகப் பராமரிக்கப்படாத காரணத்தால், காகங்களின் பெருக்கமும் சுகாதாரச் சீர்கேடும் ஏற்பட்டு வருகிறது - என்றனர்.
இதேவேளை - இந்தச் சட்ட விரோதமான கல்யாண மண்டபம் அமைப்பது தொடர்பில் நல்லூர் பிரதேசசபை நடவடிக்கை எடுக்கத்தவறியதன் காரணமாக, இந்தப் பிரதேச மக்கள் யாழ்ப்பாணம் சுற்றுச்சூழல் அமைச்சின் காரியாலயத்திலும் முறைப்பாடு செய்துள்ளனர்.
எனினும் இதுவரை இந்தப் பிரதேச மக்களின் மேற்படி பிரச்சினை தொடர்பில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.
இதனால் இந்தப் பிரதேச மக்கள் இந்தச் சட்டவிரோதக் கட்டடம் தொடர்பில் லஞ்சம் வழங்கப்பட்டுள்ளதா? என்ற சந்தேகத்தைத் தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பாக நல்லூர் பிரதேச சபை செயலர் சு.சுதர்ஜனன் தெரிவித்ததாவது: குறித்த கல்யாண மண்டப உரிமையாளர், மண்டபம் அமைக்கும் பணிக்காக விண்ணப்பித்த விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்ட விடயங்களுக்கு மேலதிகமாக சில கட்டடங்களை அமைத்துள்ளார்.
இந்த விடயம் தொடர்பாக பொதுமக்கள் தரப்பிலிருந்து முறைபாடுகள் சில கிடைத்தன. அதன் படி அந்தக் கட்டடத்துக்குச் சென்று பார்வையிட்டேன். அப்போது எமக்கு தெரிவிக்காமல் சில கட்டடங்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இது தொடர்பாக மண்டப உரிமையாளரிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது. உரிமையாளருக்கு 14 நாளகள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளன. அதற்குள் அவர் விளக்கமளிக்கா விட்டால், அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். முறையான பதில் கிடைக்கும் வரை அது சட்டவிரோத கட்டடமாகவே பார்க்கப்படும். அத்துடன் மண்டபம் பாவனைக்கு அனுமதிக்கப்பட மாட்டாது - என்றார். (ஐ-8)



# பேடன் பவலின் பிறந்த தினத்தை முன்னிட்டு வவுனியாவில் மாபெரும் குருதித்தான முகாம்

வவுனியா, மார்ச் 6
வவுனியாவில் அரச தலைவர் மற்றும் திரி சாரணர்களின் ஒழுங்கமைப்பில் சாரணர் அமைப்பின் ஸ்தாபகர் பேடன் பவலின் 160 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று வவுனியா இலங்கை திருச்சபை தமிழ் மகா வித்தி யாலயத்தில் மாபெரும் குருதித்தான முகாம் நடைபெற்றது.
நிகழ்வில் அரச தலைவர், சாரணர் மன்றத்தின் உபதலைவர் அ.அனந்தன், அரச தலைவர் சாரணர் மன்றத்தின் பொருளாளரும், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினருமான ஸ்ரீ.கேசவன், அரச தலைவர் சாரணர் மன்றத்தின் உப செயலாளர் வ.பிரதீபன் மற்றும் உறுப்பினர்களான அ.அனோஜன், வி.சஜீவ்நாத், பி.கேர்சோன், திரி சாரணன் கு.நிதர்சன் மற்றும் ஊடகவியலாளர்கள், சாரணர்களுடன் பெருமளவான இளைஞர்களும் குருதித்தான நிகழ்வில் கலந்து கொண்டனர். அரச தலைவர், சாரணர் மன்றத்தின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் த.நிகேதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், சாரண மாவட்ட ஆணையாளர் எம்.எஸ். பத்மநாதன், உதவி மாவட்ட ஆணையாளர்களான கு.கமலகுமார், வ.ஜதீஸ்கரன், உதவி மாவட்ட ஆணையாளரும் அரச தலைவர் சாரணர் மன்றத்தின் செயலாளருமான சு.காண்டீபன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (ஐ-21)

# புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பளை இ.ஆ.வித்தியாலயம் விரைவில் திறக்கப்படும்

கிளிநொச்சி, மார்ச் 6
புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கிளிநொச்சி பளை இந்து ஆரம்ப வித்தியாலயம் வெகு விரைவில் மாணவர்களின் பயன்பாட்டுக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.
கிளிநொச்சி-பளை இந்து ஆரம்ப வித்தியாலயம் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் இதுவரை திறக்கப்படாமல் இருப்பதால், மாணவர்கள் மர நிழலின் கீழ் இருந்து கல்வி கற்று வருகின்றனர் என்று பாதிக்கப்பட்ட பெற்றோர் கவலை தெரிவித்தனர். இந்த நிலையில், கடந்த வாரம் கிளிநொச்சி பதில் வலயக் கல்வி பணிப்பாளர் தலைமையில் கூட்டம் ஒன்று கூடப்பட்டு, பாடசாலை உடனடியாக திறப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. இந்த நிலையில் பாடசாலையில் நீர் நிறைந்துள்ள துரவுகளால் பாதிப்பு ஏற்படும் என்பதால் அவற்றை மூடிய பின்னர், பாடசாலையைத் திறப்பதற்குத் தயாராக இருப்பதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார். அதனை அடுத்து மாணவர்களின் பெற்றோர் இணைந்து நேற்றுக்காலை முதல் குறித்த நீர்த்துரவுகளை மூடும் பணியில் ஈடுபட்டனர். (ஐ-6)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் திருகோணமலையில் தீவிரம்



மூதூர், மார்ச் 6
திருகோணமலை மாவட்டமானது டெங்குநோய் பாதிப்பில் நாட்டில் இரண்டாவது இடத்தில் உள்ளது. அதனால் அங்கு மாவட்டம் தழுவிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.
இதனடிப்படையில் திருகோணமலை நகரசபை எல்லைக்குட்பட்ட அன்புவழிபுரம், காந்திநகர் ஆகிய கிராமங்களில் நேற்று சுகாதாரத் திணைக்களத்தினர், பொலிஸார் மற்றும் அன்புவழிபுரம் சிவில் சமூக அமைப்பினர் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன்போது டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் கண்டறியும் சோதனை நடைபெற்றது. (ஜய-40)

# வவு. தமிழ் விருட்சம் அமைப்பால் இரு மாணவர்களுக்கு சைக்கிள்கள்

வவுனியா, மார்ச்.6

"தமிழ் விருட்சம்" அமைப்பால், வவுனியாவில் பெண் தலைமை தாங்கும் குடும்பத்திலுள்ள மாணவர்கள் இருவருக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன. இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட குடும்பத்திலுள்ள ஆண்டு 8 மற்றும் ஆண்டு 10 இல் கல்வி கற்று வரும் இரு மாணவர்களுக்கும், வவுனியா "தமிழ் விருட்சம்" அமைப்பின் அலுவலகத்தில் வைத்து அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமாரால் கடந்த வியாழக்கிழமை துவிச்சக்கரவண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)

## காணி விற்பனைக்குண்டு

கேரதீவுவீதியில்நாவற்குழிச்சந்திக்கு அண்மையாக நாவற்குழி புத்த விகாரைக்கும் ஐயனார் கோயிலுக்கும் இடையில் 160 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. குடியிருக்கவோ அல்லது சுற்றுலா விடுதிகள் அமைக்கவோ பயன்படுத்தலாம். வடக்குப் பக்கமாக எழில் நிறைந்த கடற்கரையும் உள்ளது. மேற்படி காணியை தொகையாகவோ அல்லது பகுதி பகுதியாகவோ வாங்கலாம் . விலை நேரடியாகப் பேசித் தீர்மானிக்கப்படும்.

**வாங்க விரும்புவோர் 077 615 5443 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்**
(AJA/IN/1000)

## பணிப்பெண் தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து பணிபுரிவதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.
தொடர்பு - 077 262 6944

## ஊர்காவற்றுறை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)
## கிளைக்குழுக்களைத் தெரிவு செய்தல்-12.03.2017 (ஞாயிற்றுக்கிழமை)

ஊர்காவற்றுறை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் 12.03.2017 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கீழ்க் குறிப்பிட்ட விவரப்படி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைய நடைபெறவுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

| தொ. இல | கிளை இல | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் | தவிசாளர் |
|---|---|---|---|---|
| 01 | 94 | ஊர்காவற்றுறை | அண்ணா சனசமூக நிலையம், உப்புக்குள வீதி | த.பிரபாகரன் |
| 02 | 95 | ஒழுவில் | போத்தல் அடைப்பு நிலையம், நாரந்தனை தெற்கு | இ.வேல்குமார் |
| 03 | 96 | நாரந்தனை தெற்கு | நாரந்தனை றோ.க.வித்தியாலயம், நாரந்தனை மத்தி. | க.சசிகரன் |
| 04 | 99 | எழுவைதீவு | பொது மண்டபம், எழுவைதீவு | பா.குருபரன் |
| 05 | 101 | முகாம்வீதி | அண்ணா முன்பள்ளிநிலையம், உப்புக்குள வீதி. | நா.குமணதாசன் |
| 06 | 102 | நாரந்தனை வடக்கு | சங்கப்பணிமனை, ஆஸ்பத்திரிவீதி. | வ.நிதர்சன் |
| 07 | 103 | நாரந்தனை கிழக்கு | நாரந்தனை றோ.க.வித்தியாலயம், நாரந்தனை மத்தி | அ.விமல்ராஜ் |

ஊர்காவற்றுறை ப.தெ.வ.அபி.கூட்டுறவுச் சங்கம்
ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறை. (c/28380)(11,17,18) 06.03.2017
திரு.சி.தெய்வேந்திரம், கௌரவ செயலாளர்.

குருவே துணை
வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



யாழ்.மனவளக்கலை மன்ற அறக்கட்டளை வழங்கும்
சிறப்பு யோகாப் பயிற்சிகள்
பயிற்சிகளின் பயன்கள் சில

**உடற் பயிற்சியின் மூலம்**
•நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்துகின்றது.
•ஆரோக்கியமான உடலையும் நீடித்த ஆயுளையும் உண்டாக்குகின்றது.
•இரத்தத்தை சுத்தப்படுத்தி அதன் ஓட்டத்தை ஒழுங்குபடுத்துகின்றது.


**காயகல்பப் பயிற்சி மூலம்**
1. உடலிலுள்ள நரம்பு மண்டலங்கள் வலுப்பெற்று உடல்கட்டு உண்டாகும்.
2. ஆஸ்துமா, நீரிழிவு, மூக்கில் நீர் வடிதல், மூலநோய், தோல் வியாதிகள் கட்டுப்பாட்டுக்கு வரும். 3.நற்பண்புகள் வளரும்.

**தியானப் பயிற்சியின் மூலம்**
1. நினைவாற்றல் அதிகரிக்கும் 2. நல்ல உறக்கம் கிட்டும்
3. ஆற்றல் மிகு சிந்தனை மேம்படும்.

**இடம்** அறிவுத்திருக்கோவில், யாழ்ப்பாணம்.
**காலம்** - 07.03.2017 தொடக்கம் 11.03.2017 வரை. **நேரம்** - மாலை 05 மணி
**பயிற்சி வழங்குபவர்** - மனவளக்கலை பேராசிரியர் **அருள்நிதி வே.பாஸ்கரன்** அவர்கள்.
அனைவரும் கலந்து நன்மை பெற அழைக்கின்றோம்
அறிவுத்திருக்கோவில், இல.81, பிறவுன்வீதி, யாழ்ப்பாணம்.
யாழ்.மனவளக்கலை மன்ற அறக்கட்டளை.
021 222 2772, 071 440 3268

# நந்தாவில் பாதுகாப்பற்ற ரயில் கடவையில் பாதுகாப்பு ஊழியர்கள் கடமையில் இல்லை

## பிரதேச மக்கள் விசனம்



யாழ்ப்பாணம்,மார்ச் 6

நந்தாவில் புகையிரதக் கடவையில் பாதுகாப்பு ஊழியர்கள் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ள போதிலும், அவர்கள் குறித்த புகையிரதக் கடவையில் கடமையில் ஈடுபடுவதில்லை. அதனால் ரயில் கடவையில் உயிரிழப்புக்கள் ஏற்படும் ஆபத்து உள்ளது என்று கொக்குவில் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இது குறித்து அந்தப் பகுதி மக்கள் தெரிவித்ததாவது:

கொக்குவில் ரயில் நிலையத்துக்கும், கோண்டாவில் ரயில் நிலையத்துக்கும் இடைப்பட்ட பகுதியான சம்பியன் லேன் நந்தாவில் பகுதியில் அமைந்துள்ள பாதுகாப்பு அற்ற ரயில் கடவையில், பாதுகாப்புக் கடமைக்காக 3 பேர் பணிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். எனினும் அவர்களில் ஒருவர் கூட அங்கு பணிபுரிவதில்லை.

எப்போதாவது ஒருநாள் அந்தக் கடவைக்கு வரும் உத்தியோகத்தர்கள், சிறிது நேரம் நின்று விட்டு அந்த இடத்தை விட்டுச் சென்று விடுவர். இந்த நிலையில் நேற்று முன்தினம் மதியம் 1.30 மணியளவில் காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த சொகுசு ரயில் பயணித்த போது, கடவையில் ஒரு ஊழியர் கூட கடமையில் இருக்கவில்லை. அத்துடன் பாதுகாப்புக் கடவையும் மூடப்படவில்லை.

பெரும்பாலும் ரயில்கள் அந்தக் கடவையின் ஊடாக பயணிக்கும் போது, கடவை பூட்டப்படுவதில்லை. அதனால் அந்த வீதியின் ஊடாக பயணிக்கும் பாடசாலை மாணவர்கள், பெண்கள், பெரியோர்கள் என அனைவரும் உயிர் அச்சுறுத்தலுடனேயே பயணிக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இந்தக் கடவைக்கு அண்மையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற விபத்துக்களால் உயிரிழப்புக்களும் இடம்பெற்றன. இந்த நிலையில் இவ்வாறான பொறுப்பற்ற பாதுகாப்பு ஊழியர்களால் குறித்த வீதியைப் பயன்படுத்த முடியாத நிலைமை காணப்படுகின்றது. என்றனர்.

இது தொடர்பாக வடக்கு கிழக்கு ரயில் கடவைக் காப்பாளர் ஒன்றியத்தின் தலைவர் றொகானைத் தொடர்பு கொண்டு கேட்ட போது,

பாதுகாப்பற்ற ரயில் கடவைகளைத் தற்போது பொலிஸார் தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். அங்கு பணியாற்றும் பாதுகாப்பு ஊழியர் ஒருவர் 8 மணிநேரம் கடமையில் ஈடுபடவேண்டும்.

கடமையில் உள்ளவர், மற்றைய ஊழியர் கடமைக்கு வந்த பின்னர் தனது பொறுப்பை மற்றவரிடம் ஒப்படைத்த பின்னரே அங்கிருந்து விலக வேண்டும். இவற்றைக் கண்காணிக்கும் பொறுப்பை முழுமையாக அந்தந்த பிரதேசங்களுக்கு உரிய பொலிஸாரே பொறுப்பெடுத்துள்ளனர். கடமையில் பாதுகாப்பு ஊழியர் ஒருவர் நிற்காத பட்சத்தில், அந்த இடத்துக்குப் பொலிஸாரே வருகை தந்து அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அத்துடன் ஊழியர்களில் பெரும்பாலானோர் 55 தொடக்கம் 60 வயது உடைய வயோதிபர்களே கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்களில்எத்தனை பேருக்கு காது,கண் போன்ற குறைபாடு உள்ளவர்கள் என்ற விவரமும் தெரியவில்லை. இதற்குப் பொலிஸார் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். என்றார்.

(ஜ-8)

## பதினெட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 16 . 04 . 1934



விண்ணில் 24 . 02 . 1999

**அமரர் அன்னலட்சுமி கந்தையா**

அன்பின் உறைவிடமாய் அறிவுக்கு இலக்கணமாய்
பாசத்தின் பிறப்பிடமாய் பாரினில் உத்தமியாய்
வாழ்ந்த அன்னையே! வானுலகம் நீயடைந்து
ஈரொன்பது ஆண்டுகளாகியும் ஆறவில்லை எம்மனம்
ஆராதிக்கின்றோம் தினமும்...

திதி
பூர்வபக்க நவமி
06.03.2017

நீங்கா நினைவுகளுடன்.....

கந்தரோடை, சுன்னாகம்.
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை
செல்வி மரிய அஞ்சலா அவர்களின் சகோதரன்

**சூசைப்பிள்ளை கிளமென்ற் பெர்னான்டோ பிள்ளை** (ஜேர்மன்)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களினைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யா / புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்**
(ஆசிரியர் கழகம்)

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**மகாலிங்கம் மகேந்திரன்**

ஆண்டுகள் ஒன்பது ஓடிப்போனது ஆறாததுயர் மட்டும்
இன்றும் ஓய்ந்ததில்லை மாறாத பந்தமும்
நீங்காத நினைவுகளும் அலைகொண்டு போனாலும்
அப்பா எங்களோடுதான் வாழ்ந்திடுவாய்
வருடங்கள் பலவானாலும்

சுதுமலைச் சந்தி,
மானிப்பாய்.
(AJA CS 001541) (13.18)

என்றும் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி செல்வராணி சின்னராசா**



தோற்றம் 24.09.1957
மறைவு 10.03.2014

அன்பென்ற சொல்லின்
அர்த்தமாய் இருந்தே
நல்லதொரு மனையாளாய்
போற்றிடும் அன்னையாய்
மிளிர்ந்த ஒளி மங்கியதோ
ஆறாத துயருடன் தொழுகிறோம்
ஆத்ம சாந்திக்காய்

**குடும்பத்தினர்.**
கருணாநிதி சனசமூக நிலையம் அருகில்,
வல்வெட்டி.

## நெஞ்சைவிட்டகலாத 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 18 . 11 . 1975



ஆண்டவன் அடியில் 27 . 02 . 2015

**அமரர் நடராசா சிவரூபன்**

அன்பின் திருவுருவாய் பண்பின் இலக்கணமாய்
பாசத்தின் உறைவிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
திகழ்ந்தாய் எம் செல்வமகனே தவமிருந்து உமை நாம் பெற்றோம்
எமையெல்லாம் தவிக்க வைத்து காலனவன் அழைத்தது ஏனோ ?
பிரித்தானியாவில் உமது உயிரற்ற உடலை பத்து மாதங்கள் பாதுகாப்பாக
வைத்திருந்து கடமையைச் செய்தார்கள் ஆனால் உங்களுக்கு என்று
ஒரு கடமை கூட செய்யாத பாவியானேன் உன் தங்கை
நித்தமும் நம்வீட்டில் ஒளிர்கின்ற தீபத்தில் ஒளியில்லை
நம் வீட்டிற்கு மீண்டும் வந்து தீபத்தினை ஒளிரச்செய்திடுவாய்
ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்
தாங்கொணாத வேதனையுடன் கண்ணீராய்ப் பெருகுதையா


**உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

கேணியடி, குப்பிளான் தெற்கு,
ஏழாலை.

உங்கள் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**செல்லத்துரை திலகநாதன்**



யாழ். உடுவிலைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை திலகநாதன் 02.03.2017 வியாழக்கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை யோகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் பரமேஸ்வரி(ராணி) அவர்களின்அன்புக்கணவரும்ஹனுஷா, உஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கணநாதன்(சுவீடன்), சத்தியவதி (நியூசிலாந்து), ரகுநாதன்(கனடா) காலஞ்சென்றவர்களான பத்மநாதன், ஜெகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரவிதரன், அன்பழகன் ஆகியோரின் மாமனாரும் வித்தகன், நீலேஷ், விகிர்தன், கைலேஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.03.2017 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு St Marylebone Crematorium, East End Road, East Finchley N2 ORZ, UK இல் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குமாரசாமி வீதி,
திருநெல்வேலி.

தகவல்
குடும்பத்தினர்.

**கனுஷா +447 741 406 670**
**உஷா +447 956 533 505**

# திருநகரில் சிறப்பாக இடம்பெற்ற கலைக்கதம்பம் 2017 நிகழ்வு

கிளிநொச்சி, மார்ச் 6





யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதரகமும், கிளிநொச்சி கல்விப் பண்பாட்டு அபிவிருத்தி மன்றமும் இணைந்து நடத்திய கலைக்கதம்பம் 2017 நிகழ்வு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி திருநகர் கல்விப் பண்பாட்டு அபிவிருத்தி மன்றத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினர்கள் தமிழ் இன்னிய அணியிசையுடன் அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.

பாடசாலை மாணவர்கள், கலாமன்ற கலைஞர்கள் உள்ளிட்ட பலரின் சிறந்த இசை நடன நிகழ்வுகள் இதன்போது இடம்பெற்றன.

வருடந்தோறும் கல்வி பண்பாட்டு அபிவிருத்தி மன்றத்தினரால் நடத்தப்படும் நிகழ்வை, இந்த முறை இந்திய துணைத் தூதரகமும் இணைந்து நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கல்வி பண்பாட்டு அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் ம. பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் இந்தியத் துணைதூதர் ஆ.நடராஜன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், ஓய்வுபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் க. முருகவேல், யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி, காவேரி கலாமன்ற அருட்தந்தை கலாநிதி யோசுவா, கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் வாழ்நாள் தலைவர் இறைபிள்ளை, ஓய்வுபெற்ற மின் பொறியியலாளரும் தமிழ்ச் சங்கத் தலைவருமான குமரிவேந்தன் மற்றும் மூத்த கலைஞர்களான 'வல்லிபுரம், நடராஜா, பார்வதி சிவபாதம், வேலாயுதம் உள்ளிட்ட கலைஞர்கள், பெருமளவான பொது மக்களும் கலந்து கொண்டனர். (ஐ-21-35)

# வன்னேரிக்குளம் சுற்றுலா மையம் விரைவில் மக்களது பாவனைக்கு



கிளிநொச்சி, மார்ச் 6

வடமாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதி மூலம் கரைச்சி பிரதேச சபையால் ரூபா ஆறு மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டு வரும், வன்னேரிக்குளம் சுற்றுலா மையம் மிக விரைவில் மக்களது பாவணைக்குத் திறந்து வைக்கப்படும் என்று கரைச்சி பிரதேச சபை செயலாளர் கம்சநாதன் தெரிவித்தார்.

"இந்தச் சுற்றுலா மையத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் ஊடான வேலைகள் அனைத்தும் தற்போது நிறைவடைந்துள்ளன.

கடந்த மாதம் இதனைத் திறக்க எதிர்பார்த்தோம். ஆனால் தவிர்க்க முடியாத காரணத்தால் அது நடைபெறவில்லை. எனினும் தற்போது திறந்து வைப்பதற்குத் தயாராக உள்ளோம். மக்களது பாவனைக்காக விரைவில் இந்த மையம் திறந்து வைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ -21)

## மரணஅறிவித்தல்கள்

### திருமதி வக்சலா தேவராசா



தோற்றம் 1956.02.29 மறைவு 2017.03.04

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வக்சலா தேவராசா 04.03.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைராசா - சிவமலர் தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான கணவதிப்பிள்ளை - கண்ணம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் தேவராசாவின் பாசமிகு மனைவியும் திருமதி ஜீவனா கௌரி சங்கர்(கனடா), ஜீவாகரன், சிவாகரன் ஆகியோரின் பாசமிகு தாயும் சனகனின் பாசமிகு பேர்த்தியும் வசந்தகுமாரி(லண்டன்), வனிதா (ஜேர்மன்), வதனா (ஜேர்மன்), சாரதா(ஜேர்மன்), ஜெகதீஸ்வரன் (ஜேர்மன்), வனஜா (வவுனியா), ஜெயராணி (கொழும்பு), ஜெயரூபன் (உடுவில்), காலஞ்சென்றவர்களான சிவனேஸ்வரன், ரமேஸ்வரன், விக்கினேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (08.03.2017) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மருதனார்மடம் பூவோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**டச்சுவீதி,**
**உடுவில்மேற்கு, சுன்னாகம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

**077 880 9239**



மண்ணில் 14 . 11 . 1933

விண்ணில் 04 . 03 . 2017

### திருமதி இராசசுந்தரம் பாலசிங்கம்

யாழ். இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசசுந்தரம் பாலசிங்கம் 04.03.2017 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அன்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு (விதானையார்) - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாலசிங்கத்தின் (Chief Clerk, Labour Department ) அவர்களின் அன்பு மனைவியும், ஜீவானந்தன் (ஐக்கிய அமெரிக்கா), வானதி (இலங்கை), மாதினி (இலங்கை), பாமதி (பிரான்ஸ்), சிவானந்தன் (பிரான்ஸ்), தயானந்தன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சர்வானந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்கரத்தினம் (இலங்கை), குலநாயகம் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் குகதாசன் (இலங்கை), சிவநேசலிங்கம் (பிரான்ஸ்), தயானந்தி (ஐக்கிய அமெரிக்கா), நளினி (பிரான்ஸ்), ஜீவா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, இராசரத்தினம், துரைசிங்கம் மற்றும் விசாலாட்சி (பிரான்ஸ்), இராமநாதன், காலஞ்சென்ற கயிலாயபிள்ளை மற்றும் இந்திராணி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிவசுதன், பிரசாத், சிவாசினி, பிரசன்னா, அபிராமி, மயுரன், ஆதவி, பாலோசனன், மயூரன், சணா, சங்கீர்த்தனன், குமாரி, சாதனா, விதுசன், சாருஜன் (Mickael ), சாருஜா, கீத்தன், அச்சுதன், அஸ்வேதா, தட்சாயினி, விஷ்னுயன், அட்சயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிரணவி, துவாரிகா, மோகிஷன், யர்ஸ்வின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.03.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"சிவபதீ",**
**இணுவில் மேற்கு, இணுவில்.**


**தகவல்**
**பிள்ளைகள்.**

(C3/1754)(11.17.18)

077 390 4732, 077 524 7444

## மரண அறிவித்தல்கள்

### முருகன் கணபதி



நாவற்காடு, வரணியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முருகன் கணபதி 04.03.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், பூமணியின் அன்புக் கணவரும், ஜெகதீஸ்வரன், ஜெகநேசன், ஜெயறவிலா, ஜெயசுவீந்திரன், ஜெசிந்தா, ஜெயதர்சினி, ஜெயவனிதா ஜெனோசா ஆகியோரின் பாசமிகு தந்தையும், மனோகரன், மதிவதனி ஆகியோரின் அன்பு மாமனும், கிருஷன், கிருஷாந்தன், சுகன்யா, சயந்தினி, சோபிதன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2017) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குடமியன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாவற்காடு,வரணி.**

**தகவல்: குடும்பத்தினர்.**

### திருமதி பரமேஸ்வரி கதிரமலை



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி கதிரமலை 03.03.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துலிங்கம் - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கதிரமலையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், கணேஸ், திலகவதி மற்றும் பகவதி, காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் சிவஞானம், சுவர்ணரட்ணம், புனிதவதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற சண்முகநாதன்(சுவிஸ்), சரஸ்வதிதேவி, காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் இரத்தினவேல் (கனடா), சிங்காரவேல் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், புவனேஸ்வரி (சுவிஸ்), சபாரத்தினம், மனோகரமூர்த்தி, சசிரேகா (கனடா), திலகராணி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜீவசுமன் (மேரி சலுஜா), சிந்துரா (அமலதாஸ் -டுர்ஜா நகைப்பூங்கா), திவ்யா, தினுஷன், பிரதிகா, வினோதினி, அனோஜன் ஆகியோரின் பேர்த்தியும், கரிஷ்காந்தின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2017) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தெல்லிப்பழை கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பார்மணியம் லேன்,**
**தெல்லிப்பழை.**

(J/8199)(11.18)

**தகவல்**
**குடும்பத்தினர்.**

021 561 8001



பிறப்பு 29 . 05 . 1984

இறப்பு 03 . 03 . 2017

### திருமதி லக்ஷி நந்தகுமார்

ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லக்ஷி நந்தகுமார் 03.03.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் நந்தகுமாரின் (சின்னத்துரை சிற்பாலயம்) அன்பு மனைவியும் கணேசலிங்கம் - மல்லிகாதேவி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் அன்னதேவி தம்பதியரின் அன்பு மருமகளும் யோதீஷன் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), ரெஸ்மி ஆகியோரின் அன்புத் தாயும் சஜீத், திலக், டெய்சி ஆகியோரின் சகோதரியும் நிருஜா, சரண்ஜா, சுதர்சன், ஜெயக்குமார், ஜெயா, வரதா, கௌரி ஆகியோரின் மைத்துனியும் கிரிகரன், சயந்தன், சுரேன், தயாழினி ஆகியோரின் உடன்பிறவாத சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2017) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காககோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.**
**077 616 8761 , 077 677 9314**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## கொழும்பு அதிகாரிகள் குழு பச்சிலைப்பள்ளியில் ஆராய்வு

பளை.மார்ச் 6

வடக்கு மாகாணத்தில் 5 மாவட்டங்களிலும் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் தற்போதைய நிலமைகள் தொடர்பாக மீள்குடியேற்ற அமைச்சின் உயர் அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

அந்த வகையில் பச்சிலைப் பள்ளிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 4 கிராம அலுவலர் பிரிவுகளில் மக்களின் மீள்குடியமர்வு மற்றும் அவர்களுக்கான உதவித் திட்டங்கள் தொடர்பாகவும் மீள்குடியேற்ற அமைச்சின் உயர்அதிகாரிகள்நேற்றுமுன் தினம் சனிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டனர். வேம்படுகேணி, இத்தாவில், முகமாலை, தம்பகாமம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட மீள்குடியமர்வின் பின்னரானசெயற்றிட்டங்களானவீடமைப்பு, மலகூட வசதி மற்றும் வாழ்வாதார உதவிகள் தொடர்பாக ஆராய்வதற்கு குறித்தஅதிகாரிகள்அங்குநேரில் சென்று மக்களைச் சந்தித்தனர். பிரதேசசெயலர் திருமதி ஜெ.பரமோதயன் தலைமையில் சென்ற குழுவினருடன், பிரதேச செயலக அதிகாரிகளும்சென்றிருந்தனர்.

கடந்த டிசெம்பர் மாத முற்பகுதியில் குறித்த பகுதிகளில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டனர். (ஐ)

## யாழ்.வணிகர் கழகத்தால் 500 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

யாழ்ப்பாணம்.மார்ச் 6

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் மாவட்டச் செயலர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டத்தில் பாடசாலைகளில் இடை விலகல் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள வறுமைக் கோட்டுக்குட்பட்ட 500 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

யாழ் வணிகர் கழகத்தின் நிதி அனுசரணையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் மாவை சேனாதிராசாவும், ஏனைய தமிழ் நாடாளு மன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்வர் என்று யாழ்ப்பாண வணிகர்கழகச்செயலர் இ.ஜனக்குமார் அறிவித்துள்ளார். (ஐ-10)

# ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்ட குடியிருப்புகளில் தொடரும் களவுகள்

### தடுக்க முடியாமைக்கு வருந்துகிறார் பொலிஸ் அதிகாரி

வவுனியா, மார்ச் 6

"வவுனியா ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டக் குடியிருப்புகளில் களவு போவதைத் தடுக்க முடியாமல் உள்ளது. இது எமது இயலாமை. அதற்காக நாம் வருந்து கின்றோம்." இவ்வாறு ஓமந்தை கிராமங்களுக்கான பொலிஸ் அதிகாரி ரஞ்சித் தெரிவித்தார்.

ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டக் குடியிருப்புகளில் பிரதேசசெயலாளர் சி.குணபாலன் வீட்டில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற களவுச் சம்பவம் தொடர்பாக, நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் ஓமந்தை கிராமஅலுவலர் காரியாலத்தில் ஓமந்தை கிராமஅலுவலர் திருமதி செ.அனுசியா தலைமையில் அவசரமாக இடம்பெற்ற சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டத்தின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் தெரிவித்ததாவது:

களவுகளைத் தடுக்கும் பொறுப்பு பொலிஸாருக்குள்ளது. அதனை நான் உணர்கிறேன். அதேவேளை களவுக்கு இடம்கொடுக்காதவகையில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். இந்த வீட்டுத்திட்டத்துக்கு அருகில் உள்ள கிராமங்களில் இது போன்ற களவுகள் இடம்பெற்றதாக நான் அறியவில்லை. இங்குதான் அதிகமாக இடம் பெறுகிறது. இது எமக்கு அவமானமாகவுள்ளது. இந்தக் களவுகளுக்கும், பொலிஸாருக்கும் தொடர்பு உள்ளது என்ற குற்றச்சாட்டை மக்கள் முன் வைக்கிறார்கள்.

> “
> களவுகளைத் தடுக்கும் பொறுப்பு பொலிஸாருக்குள்ளது. அதனை நான் உணர்கிறேன். அதே வேளை களவுக்கு இடம்கொடுக்காத வகையில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். இந்த வீட்டுத் திட்டத்துக்கு அருகில் உள்ள கிராமங்களில் இது போன்ற களவுகள் இடம்பெற்றதாக நான் அறியவில்லை. இங்கு தான் அதிகமாக இடம்பெறுகிறது.

அவற்றை உறுதிப்படுத்துவதற்கு மக்கள் தகவலைத் தரவேண்டும். குறிப்பிட்ட ஒரு சில பொலிஸாரை வைத்துக்கொண்டு முழு இடங்களையும் காவல் காத்து நிற்க முடியாது. அரச ஊழியர் வீட்டுத்திட்டத்தில் பல வீடுகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளன. அங்கு அரச ஊழியர்கள் இல்லை. அரச ஊழியர்கள் வீட்டை எவ்வாறு வாடகைக்கு விடலாம். அங்கு இருப்பவர்கள் ஏதாவது குற்றச்செயல்களுடன் தொடர்பு பட்டவர்களாக இருக்கலாம். அந்த விவரங்களை கிராம அபிவிருத்திச் சங்கம் எமக்குத் தரவில்லை: அரச ஊழியர் வீட்டுத்திட்டம் என்ற பெயர் தான். ஆனால் அங்கு சில வீடுகளில் அரச ஊழியர்கள் இல்லை. இது எமக்கு வேடிக்கையாகவுள்ளது. பல வீடுகள் இன்னமும் பல வருடங்களாக கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன. கிராம அபிவிருத்திச்சங்கம் வீடுகட்டாத காணிகளை இனம் கண்டு, வீடுகளைக் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். உரிய அதிகாரிக்கு தெரியப்படுத்தி நடவடிக்கையை காலம் தாழ்த்தாது எடுக்க வேண்டும். இல்லையேல் அந்தக் காணியை வேறு அரச உத்தியோகத்தருக்கு கொடுக்க வீடமைப்பு அதிகாரசபையை நாட வேண்டும்.

களவு நடந்த இடத்துக்கு அருகில் ஒரு இடத்தில் கண்காணிப்பு கமரா ஒன்று பொருத்தப்பட்டிருந்தது. ஆனால் அந்தக் கமராவில் களவு நடந்த வீட்டுக்கு அருகில் பற்றைகள் இருந்தமையால் அந்தக் காட்சி பிடிபடவில்லை. எனவே நாங்கள் முதலில் பொலிஸ்குழு, கிராம அலுவலர், சிவில் பாதுகாப்பு குழு, சுகாதாரப் பரிசோதகர் அடங்கிய குழுவினர் அரச ஊழியர் வீட்டுத்திட்ட வீடுகளுக்குச் செல்லவுள்ளோம். அங்கு நாம் பதிவுகளை மேற்கொள்வோம். அருகில் உள்ள காணிகளில் பற்றைகள் உள்ள காணி உரிமையாளர்களின் பெயர்களை பெற்று அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். காணிகளில் எந்த வேலையும் செய்யாமல் உள்ள காணிகளை வேறு அரச ஊழியர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்போம். அதற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். வீட்டுத்திட்டத்துக்கு அருகில் சந்தேக நபர்கள் இருப்பின், அவர்கள் விவரங்களைப் பொது மக்கள் எமக்குத் தரவேண்டும் . தொடர்ந்து பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இந்தப் பகுதியில் சகல இடங்களிலும் மின்விளக்குகள் பொருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றார். (ஐ21,402)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 641 ஆசிரிய மாணவர்கள் பயிற்சி நிறைவு

### சனியன்று சான்றிதழ்கள் வழங்கி வைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்.6

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 2014-2016 ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் பயிற்சி பெற்று, இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த 641 ஆசிரிய மாணவர்களுக்கு பயிற்சிச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் காலை,மாலை என இரு அமர்வுகளாக நடைபெற்றன.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அதிபர் வீ.கருணலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கொழும்பு கல்வி அமைச்சின் ஆசிரிய கல்வி நிர்வாகப்பிரிவுக்கான முதன்மைஆணையாளர் கே.எம்.எச்.பண்டார, வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா ஆகியோர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டனர். கலாசாலையின் ஆலயத்தில் இடம்பெற்ற சிறப்பு வழிபாடுகளைத் தொடர்ந்து, சான்றிதழ் பெறும் ஆசிரிய மாணவர்கள், விரிவுரையாளர்கள், விருந்தினர்கள் ஆகியோர் ஊர்வலமாக மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர். அதனைத் தொடர்ந்து விருந்தினர்களால் ஆசிரியர்களுக்கு சான்றிதழ்களும், பதக்கங்களும் வழங்கப்பட்டன. (ஐ-21-9)












## நீரிழிவு வாரம் பிரகடனப்படுத்த கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 6
நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் வகையில் உலக நீரிழிவு தினமான நவம்பர் 14ஆம் திகதி முதல் ஒரு வாரத்தை வருடாந்தம் நீரிழிவு வாரமாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறி சேனவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.
நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வருகை தந்த அரச தலைவரிடம் யாழ்ப்பாணம் நீரிழிவுக் கழகத் தலைவர் தி. மைக்கல் மற்றும் செயலாளர் க. கணபதி ஆகியோர் இந்தக் கோரிக்கை அடங்கிய மனுவைக் கையளித்தனர்.
மனுவில் உள்ளதாவது:
உலக அளவில் 450 மில்லியன் மக்கள் நீரிழிவால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த தொகை 2020ஆம் ஆண்டு 600 மில்லியனாக அதிகரிக்க கூடும் என எதிர்வு கூறப்படுகின்றது. இந்த ஆண்டு 'நீரிழிவை வெற்றி கொள்வோம்' என்ற தொனிப் பொருளில், மக்களை விழிப்பூட்டுமாறு உலக சுகாதர நிறுவனம் வேண்டுகோள் விடுத்து உள்ளது.
இலங்கையிலும் 15 வீதமான மக்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது அதிகரிக்காதிருக்க வருடாந்தம் நீரிழிவு தினமாக நவம்பர் 14 ஆம் திகதி முதல் ஒரு வாரத்தை நீரிழிவு வாரமாக பிரகடனப்படுத்தவேண்டும்என்று தங்களைத் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.
நீரிழிவு வாரத்தில், பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் அலுவலங்களில் நீரிழிவு விழிப்பூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், நீரிழிவுப் பரிசோதனைகளையும் மேற்கொள்ள ஏற்ற ஒழுங்குகளைச் செய்ய வேண்டும் என்று கோருகின்றோம் -என்றுள்ளது. (ற-21)

### மீள்குடியமர்வு வாக்குறுதிகள் பொய்த்ததால்

# போராட்டத்துக்கு தயாராகின்றனர் இரணைதீவு மக்கள்

கிளிநொச்சி, மார்ச் 6
"இரணைதீவை அபகரித்துள்ள கடற்படையினர் நாம் மீள்குடியமர்வதையும், தங்கி நின்று தொழில் செய்வதையும் தொடர்ச்சியாகத் தடுக்கின்றனர். அரசியல்வாதிகள் எமது மீள்குடியமர்வு தொடர்பாக வழங்கிய வாக்குறுதிகளும்இதுவரைநிறைவேற்றப்படவில்லை. நாம் எமது பூர்வீக நிலங்களை விடுவிக்கத் தொடர்ச்சியான போராட்டம் நடத்தத் தயராகின்றறோம்."
இவ்வாறு இரணைதீவு மக்கள் தெரிவித்தனர்.
1992ஆம் ஆண்டு இரணைதீவுமக்கள் அங்கிருந்து இடம் பெயர்ந்தனர். அவர்கள் முழங்காவிலில் இரணைமாதா நகரில் குடியமர்ந்துள்ளனர். இரணைதீவில் தங்களை மீள் குடியமர்த்த வேண்டும் என்றும், அங்கு தங்கி நின்று தொழில் செய்ய அனுமதிக்க வேண்டும்என்றும்அவர்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்துவருகின்றனர்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களிலும் இந்த விடயம் பேசப்பட்டது. பலவாறான முடிவுகளும், தீர்மானங்க ளும் எட்டப்பட்டன. எனினும் இதுவரை இரணைதீவு மக்கள் அவர்களது பூர்வீக இடத்தில் குடியமர்த்தப் படவில்லை.



கடந்த 3 ஆம் திகதி இரணைதீவு புனித செபமாதா ஆலயத்தில் வழிபாடு செய்ய இரணைதீவு மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் இவ்வாறு அனுமதி வழங்கப்படுவது இது மூன்றாவது தடவையாகும். கடந்த 2ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்குஇரணைதீவைச்சேர்ந்த 336குடும்பங்கள் படகுகளில் இரணைதீவுக்குச்சென்று வழிபாடுகளில் பங்கேற்றனர். வழிபாடுகள் முடிந்ததும் அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். அனுமதித்த நேரத்தை விட கூடுதலான நேரம்செலவிடக்கடற்படையினர்அனுமதிக்க வில்லை என்று மக்களால் தெரிவிக்கப் பட்டது. "நாம் 1992 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தோம். இப்போது இரணைமாதாநகரில் தங்கியுள்ளோம். எம்மை எமது பூர்வீக நிலங்களில் குடியமர அனுமதிக்க வேண்டும். இரணைதீவில் தங்கி நின்று தொழில் செய்ய அனுமதிக்க வேண்டும். அதற்கான அனுமதி இதுவரை மறுக்கப்பட்டே உள்ளது.
கிளிநொச்சிமாவட்டச்செயலகத்திலும், பூநகரி பிரதேசசெயலகத்திலும்நடைபெற்றஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் இது தொடர்பாகப் பேசப்பட்டது. எம்மை இரணை தீவில் மீள்குடியமர்த்தவேண்டும் என்றும், தங்கி நின்று தொழில் செய்ய அனுமதிக்க வேண்டும் என்றும்மக்கள்பிரதிநிதிகளால் விடுக்கப்பட்ட கோரிக்கை நிறைவேற்றப்பட வில்லை.
இரணைதீவுக்குநேரடியாகச் சென்று நிலைமைகளை ஆராய்வோம்என்றுஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர்கள் தெரிவித்திருந்தனர்.அதுவும்நடைமுறைப்படுத்தப்படவில்லை. அரசியல்செல்வாக்குமிக்கஅரசியல்வாதிகள் இரணைதீவுக்குச் சென்றனர். மக்கள் மீள்குடியமர்த்தப்படுவார்கள் என்று அறிக்கை விட்டனர். அவையும் பொய்த்துப் போயின.
எமதுபூர்வீகநிலங்களைவிடுவிக்கப்போராட்டம் நடத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. நாம்தொடர்போராட்டம்நடத்துவதற்குத் தயராகி வருகின்றோம். போராட்டத்தைத் தாமதப்படுத்துமாறு சில அரசியல் வாதிகள் கூறுகின்றனர்.ஆனாலும்நாம்போராட்டம்நடத்துவது எனத் தீர்மானித்துள்ளோம் " என்று இரணைதீவு மக்கள் தெரிவித்தனர்.
(ற-21-35)

# முல்லைத்தீவு வாசி கொழும்பில் கைது

### எந்தத் தகவலும் இல்லாது தடுமாற்றத்தில் குடும்பத்தினர்

யாழ்ப்பாணம், மார்ச் 6
"முல்லைத்தீவைச் சேர்ந்த குடும்பத் தலைவர் ஒருவர் கொழும்பில்குற்றத்தடுப்புப்பிரிவினரால்சுற்றிவளைக் கப்பட்டார். அவர் கன்னியாஸ்திரிகள் முன்னிலையில் பொலிஸாரிடம்ஒப்படைக்கப்பட்டார். அவருக்கு என்ன நடந்தது என்று இதுவரை தெரியவில்லை."
இவ்வாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அவரது குடும்பத்தினரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
இருபிள்ளைகளின்தந்தையான அவர் கடந்த முதலாம் திகதி புதன்கிழமை முல்லைத்தீவி லிருந்து கொழும்பு சென்றார். அங்குள்ள சுவிஸ்தூதரகத்தில் விண்ணப்பப் படிவம் பெறவே அவர் சென்றார். விண்ணப்பப்படிவம் பெற்றுத் தூதரகத்தில் இருந்து வெளியே வந்தபோது குற்றப்புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 7 பேர் குடும்பத் தலைவரைச் சுற்றிவளைத்தனர்.
அவர்களிடம் இருந்து தப்பிய குடும்பத்தலைவர், அருகில் உள்ள கன்னியாஸ்திரிகள் தங்குமிடத்துக்குள் சென்றார். அங்கிருந்தவர்களிடம் நடந்த சம்பவத்தைத் தெரியப்படுத்தினார். அவர்கள் மன்னார் ஆயர் கிங்சிலி சுவாம்பிள்ளை அடிகளாருக்கு அறிவித்தனர்.
மன்னார் ஆயர் இந்த விடயத்தை பொலிஸாருக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று தெரிவித்ததுடன், தானே 119 இலக்கத்தின் ஊடாக பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்.
சிறப்பு பொலிஸ் குழுவினர் கன்னியாஸ்திரிகள் தங்குமிடத்துக்குச் சென்று விசாரணை நடத்தினர். பின்னர் வேறு பொலிஸ் குழுவுக்குத் தகவல் தெரிவித்தனர். அங்குவந்தபொலிஸ்குழு குடும்பத்தலைவரைத்தமது வாகனத்தில் ஏற்றிச்சென்றது என்று தெரிவிக்கப்பட்டது.
பொலிஸாரால் அழைத்துச்செல்லப்பட்ட குடும்பத்தலைவர் பற்றி இதுவரை குடும்பத்தினருக்கு எந்தத்தகவலும் கிடைக்கவில்லை. அவரை யார் கைது செய்தார்கள் என்ற விவரம் தெரியாது குடும்பத்தினர் தடுமாற்றத்துடன் உள்ளனர்.
இது தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அது தொடர்பாக தாம் விசாரணைகள் மேற்கொள்ள முடியாது என்றும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைமையகத்தில் முறைப்பாடு செய்தால் மேலகதிக விசாரணைகளைச் செய்ய முடியும் என்றும் வவுனியா அலுவலகத்தில் உறவினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கைதுசெய்யப்பட்டவர்தொடர்பாக எந்தத்தகவலையும் இதுவரை பொலிஸார் குடும்பத்தினருக்கு வழங்கவில்லை. சட்டத்தரணி ஊடாக நடவடிக்கைகளை எடுப்பதற்கு குடும்பத்தினர் முயன்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-106)

## புற்றுநோய் விழிப்புணர்வு 5

புற்றுநோய் தவிர்ப்போம்! மகிழ்வாக வாழ்வோம்!!
- இன்றைய விவசாயத்தில் பாவிக்கப்படும், அபரிமித அசேதனக் களை கொல்லிகள், அசேதனப் பசளைகள், இரசாயனப் பூச்சி கொல்லிகள், இரசாயன ஊக்கிகள் பாவிப்பதைக் குறைத்திடுவோம்.
- சேதன விவசாயத்தைத் (Organic farming) தொடங்கிடுவோம்.

### பொது அறிவுப் பரீட்சை விவகாரம் தொடர்பில்

# உயர்கலைக் கல்லூரி மாணவர்கள் அரச தலைவரிடம் மனு கையளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 6
கண்டி பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைமாணி பட்டத்துக்கான விரிவுரைகளை வழங்கும் யாழ்ப்பாணம் உயர்கலைக் கல்லூரியின்மாணவர்கள்அண்மையில் எழுதிய பரீட்சை தொடர்பாக உள்ள பிரச்சினைக்குத் தீர்வு வழங்க வேண்டும் என்று அரச தலைவரிடம் நேற்றுமுன்தினம் மனுக் கையளித்தனர்.
2015ஆம் ஆண்டு கலைமாணி பட்டப் படிப்புக்காக யாழ்ப்பாணம் உயர்கலைக் கல்லூரிக்கு மாணவர்கள்உள்வாங்கப்பட்டனர்.அவர்களின்ஒருவருடகாலகற்கைநெறிகள் நிறைவடைந்த நிலையில் 2016ஆம்ஆண்டு பொது அறிவுப் பரீட்சைக்காக கண்டி பேராதனிய பல்கலைக்கழகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பரீட்சையில் யாழ். உயர்கலைக் கல்லூரியில் இருந்து300க்கும்மேற்பட்டமாணவர்கள் தோற்றினர்.
பரீட்சைகள்நிறைவடைந்துஅண்மையில்பரீட்சை முடிவுகள் வெளியாகியநிலையில்,மாணவர்களின் பெறுபேற்றில் திருப்தி அற்ற தன்மைகாணப்படுகின்றதுஎன்று மாணவர்கள்யாழ். உயர்கலைக் கல்லூரியின் பணிப்பாளருக்குத் தெரியப்படுத்தியிருந்தனர். 300க்கும்மேற்பட்டமாணவர்கள் தோற்றிய குறித்த பரீட்சையில் 30க்கும் குறைவான மாணவர்களே சித்தியடைந்துள்ளனர். மன உளைச்சலுக்கு உள்ளான மாணவர்கள்,பரீட்சையின் பெறுபேறுகளில் நம்பகத் தன்மை இல்லை என கல்லூரியின் பணிப்பாளருக்குத் தெரிவித்தனர்.
"பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட பரீட்சை, கலைமானிபட்டப்படிப்புக்காகமாணவர்களை உள்வாங்க நடத்தப்பட்ட தெரிவுப் பரீட்சை நாடு முழுவதும் இவ்வாறே தெரிவுப் பரீட்சைகள் நடத்தப்பட்டு மாணவர்கள் கலைமாணி பட்டப் படிப்புக்காக தெரிவு செய்யும் படி சுற்றறிக்கை தமக்கு வழங்கப்பட்டுள்ளது. பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மாத்திரமே கலைமாணி பட்டப் படிப்பைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியும்"என்றுகல்லூரியின்பணிப்பாளர் பதிலளித்தார் என்று மாணவர்கள் தெரிவித்தனர்.
பாதிக்கப்பட்ட மாணவர்கள் தமது ஒரு வருடப் படிப்பை நிறைவு செய்த நிலையில் தமது பட்டப்படிப்பைத்தொடர முடியாத நிலையிலுள்ளனர். தமதுபிரச்சினைபற்றி நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன்ராமநாதனிடம்தெரிவித்திருந்தமைக்கு அமைய நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் மாணவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இணைந்து மனு ஒன்றைக் கையளித்தனர்.
களனிபல்கலைக்கழகத்தில் இதே போன்ற குழப்ப நிலைகள் இடம் பெற்ற போது மாணவர்களின் நன்மை கருதி தொடர்ந்தும் அவர்களது கலைமாணிபட்டப்படிப்பை மேற்கொள்ள அனுமதி அளிக்கப் பட்டது. யாழ். மாணவர்களுக்கும் இவ்வாறான சந்தர்ப்பம் ஒன்றை வழங்க வேண்டும் என்று அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.
(ற-21)

# மாணவருக்கு நிதியுதவி

வடமராட்சி, மார்ச் 6
நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் கற்றுவரும் வறிய மாணவர்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமம் தொடர்ந்து நிதி உதவிகளை வழங்குகின்றது.
இந்த வருடம் முதல் 50 க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு நிதி உதவி வழங்குவதற்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை தெரிவித்தது.
கடந்த சில ஆண்டுகளாக 40 பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டன என்று சந்நிதியான் ஆச்சிரம த்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-173)

# நாட்டை நிர்வகிக்கும் தகுதிகள் மைத்திரிபாலவுக்கு இல்லை

### இப்படிச் சொல்கிறார் மகிந்த



கொழும்பு, மார்ச் 6
நாட்டை நிர்வகிப்பதற்குப் பொருத்தமான தகுதிகள் தற்போதைய அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேனவுக்கு இல்லை. எனவே அவர் நாட்டை நிர்வகிப்பது தொடர்பான சகல விடயங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

பொரலஸ்கமுவயில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நாட்டுக்குள் நடைபெறும் சகல விடயங்களையும் உடனுக்குடன் அரசதலைவராக இருப்பவர் தெரிந்திருக்க வேண்டியது அவசியம். ஆனால் தற்போதைய அரச தலைவருக்கு அந்த விடயங்கள் தெரியவில்லை. நாட்டுக்குள் ஒரு விடயம் நடந்து முடிந்த பின்னர் பத்திரிகைகளைப் பார்த்த பின்னரே அறிந்து கொள்ளும் நிலையில் அரச தலைவர் உள்ளார்.

இது நாட்டை நிர்வகிக்கும் பொறுப்புடைய அரச தலைவருக்குப் பொருத்தமற்ற பண்பாகும். பாதாள உலகத் தலைவர்களுக்கும் அரசை அமைக்கும் செல்வாக்கு உள்ளது. கொலை செய்யப்பட்ட பாதாள உலகக் குழுத்தலைவர் சமயங் அவ்வாறான அதிகாரத்துடன் செயற்பட்டார்-என்றார். (ஐ-10)

# எல்லை நிர்ணய அறிவிப்பால் முஸ்லிம் மக்களுக்குப் பாதிப்பு

### அமைச்சர் ரிசாத் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 6
எல்லை மீள் நிர்ணய வர்த்தமானி அறிவித்தல் முஸ்லிம் மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. எனவே அது தொடர்பில் உயர் நீதி மன்றத்தின் துணையை நாடவுள்ளேன். இவ்வாறு கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியிலான விடயங்கள் தொடர்பில் நேற்று முன்தினம் மட்டக்களப்பில் இடம்பெற்ற கலந்துரையாடலில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

சமூகப்பிரச்சினைகளைக் கையாள்வதிலும் சமூகத்தின் தேவைகளை நிவர்த்தி செய்வதிலும் தெளிவான பார்வையும் திட்டங்களும் அவசியம். அம்பாறை மாவட்ட முஸ்லிம் அரசியல்வாதிகள் மேற்கொண்ட தவறான முடிவுகளால் இன்று முஸ்லிம் மக்கள் சமூக பொருளாதார ரீதியில் நலிவடைந்துள்ளனர்.

முஸ்லிம் காங்கிரஸ் தவறான பாதையில் பயணித்ததால், கட்சிக்குள் இருந்து கொண்டு தலைமையைத் தட்டிக்கேட்டதாலும், தலைமையின் பிழைகளைச் சுட்டிக்காட்டியதன் வெளிப்பாடாகவும் கட்சியிலிருந்து பலர் வெளியேற்றப்பட்டனர். அரசியல் அமைப்பு மாற்றம், தேர்தல் முறை மாற்றம், எல்லை நிர்ணயம் என்பன அரசியல் கட்சிகளுக்கென்ற தெளிவான பாதையை வகுத்துள்ளது- என்றார். (ஐ-10)

# மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் பகிரப்பட்டால் நாட்டுக்கு பெரும் ஆபத்து

### அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 6
மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்கள் பகிரப்பட்டால் நாட்டில் வன்முறைகளை ஏற்படுத்தும் குழுக்களின் மீள் உருவாக்கத்துக்கு சாதகமாக அமையும். குறிப்பாக பாதாள உலகக் குழு மற்றும் ஆவா குழுக்கள் மேலும் வலுவடையும். இந்தக் குழுக்கள் நாட்டுக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தும். இவ்வாறு மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்வது தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது. மாறாக யாழ்ப்பாணத்தைத் தளமாக கொண்ட ஆவா குழுக்கள், கொழும்பைத் தளமாகக் கொண்ட பாதாள உலக குழுவைச் சேர்ந்த சமன் போன்றவர்களின் மீள் உருவாக்கத்துக்கு மேலும் வித்திடும். இலங்கையில் தொடர்ச்சியாக வன்முறையான கலவரங்கள் கடந்த காலங்களில் ஏற்பட்டன. மொத்த சனத்தொகையில் 2 தொடக்கம் மூன்று வீதமானவர்கள் அடையாளம் தெரியாத குழுக்கள் மற்றும் வீதியோர குண்டுத் தாக்குதல்களால் கொல்லப்பட்டனர்.

சில அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு நிதியில் தங்கியிருக்கும் சில பிரிவினரே பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிருமாறு கோருகின்றனர். ஆனால் தமிழ் கலாசாரங்கள் பற்றிய அறிவுள்ள தமிழ் பேசும் அதிகாரிகளைப் பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்வதே இதற்குச் சிறந்த தீர்வாகும். புதிய அரசு அவ்வாறான அதிகாரிகளை அதிகளவில் பொலிஸ் சேவையில் தற்போது இணைத்துள்ளது.

இந்தியாவால் அறிமுகப்படுத்தப்பட்ட 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் பொலிஸ் அதிகாரங்கள் மாகாணங்களுக்கு பகிரப்பட்டிருந்தன. இந்தியாவில் தற்போது என்ன நடக்கின்றது. மாகாண்ங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களால் வந்த வினையால் பல வன்முறைகள் இடம்பெற்றன. அங்கு குறைந்தது 14 மாநிலங்களிலாவது பயங்கரவாதக் குழுக்கள் செயற்படுகின்றன. என்றார். (ஐ-10)

# சு.கவுடன் நிபந்தனைகளின்றி பேச கூட்டு எதிரணியினருக்கு அழைப்பு


கொழும்பு, மார்ச் 6
சிறி லங்கா சுதந்திரக் கட்சியுடன், கூட்டு எதிர்க் கட்சியினர் நிபந்தனைகள் எதுவுமின்றி பேசுவதற்கு முன்வர வேண்டும் என்று அமைச்சர் டபிள்யு.டி.ஜே. செனவிரத்ன தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்ஜித் சொய்ஷா நேற்றுமுன்தினம் தனியார் ஊடகமொன்றின் நிகழ்வில் கலந்துகொண்டு விடுத்த அறிவித்தல் தொடர்பில் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய அரசில் வகிக்கும் அமைச்சுப் பதவிகளை துறந்தாலும், சிறி லங்கா சுதந்திரக் கட்சியால் தனியாக ஆட்சியமைக்க முடியாது. இதுபோன்ற நிலைமையில் நாம் செய்ய வேண்டியது கட்சியைப் பலப்படுத்துவதாகும். அதற்காகச் சகலரும் ஒன்றிணைய வேண்டும். சிறி லங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டு எதிர்க்கட்சி கலந்துரையாடலில் கலந்துகொள்வதாயின் நிபந்தனைகளின்றி பேசுவதற்கு முன்வர வேண்டும் என்வும் தெரிவித்தார். (ஐ-10)

# புதிய அரசமைப்பு தேவையற்றது

### அத்துரலிய ரத்ன தேரர் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 6
தற்போதைய சூழ்நிலையில் நாட்டுக்குப் புதிய அரசமைப்பு தேவையற்றது. மக்கள் எதிர்பார்ப்பது தேசிய அபிவிருத்தித் திட்டத்தையே. இவ்வாறு இலங்கை தேசிய மகா சபையின் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பொருளாதாரத்தைச் சீனாவினதும், இந்தியாவினதும் தேவைக்கு ஏற்ப மாற்றுவதற்கு இடமளிக்க முடியாது. நாட்டின் காணிகளை நினைத்தவாறு வெளிநாட்டவருக்கு வழங்காமல் இருப்பதற்கு, தேசிய காணிக் கொள்கையொன்று வகுக்கப்பட்டு அதன்படி முன்னெடுக்கப்பட வேண்டும்.

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன ஒரு சிலரின் தேவைக்கு ஏற்ப செயற்படக் கூடியவர் அல்ல. அரச தலைவர் தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்மானம் எடுக்கத் தாமதிக்கும் ஒவ்வொரு பொழுதும் நாட்டுக்கு ஆபத்தானது-என்றார். (ஐ10)

# கல்கிஸை நீதிமன்றுக்கு துப்பாக்கி கொண்டு சென்றவர் கைது

கொழும்பு, மார்ச் 6
கல்கிஸை நீதிமன்றத்துக்கு இரு துப்பாக்கிகளையும், பத்து ரவைகளையும் கொண்டு சென்றவர், கொல்லப்பட்ட சமயங்கவின் சகோதரரே என்றும் அவர் கைது செய்யப்பட்டார் எனவும் வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

லொக்கு மையா என அழைக்கப்படும் இவர் கடந்த முதலாம் திகதி கொலைக்குத் திட்டம் தீட்டியவர்களுக்கு உதவி செய்வதற்காக, வெளியார் இருபது பேருக்கு தலா 2 ஆயிரம் ரூபா வீதம் வழங்கி, கல்கிஸை நீதிமன்றத்துக்கு அழைத்து வந்துள்ளார். அவர்களின் நோக்கம் அன்றைய தினம் நீதிமன்றுக்குக் கொண்டு வரப்படவிருந்த கொனகோவிலே ரொஹா எனும் பாதாள உலகக் குழுக் கோஷ்டியைச் சுட்டுக் கொல்வதே எனவும் விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது என்றும் வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

ரொஹாவுக்கு எதிராகச் செயற்படும் பாதாள உலகக் கும்பலில் இவர் ஓர் உறுப்பினர் எனவும், கிரிக்கெட் போட்டியொன்றைப் பார்ப்பதற்காகவே செல்வதாகக் கூறி, அந்த இருபது பேரையும் ஆயத்தப்படுத்தினார் எனவும் தெரியவருகின்றது.

இவருக்கு இந்த ஒப்பந்தத்தைக் கொடுத்தவர் களுத்துறை துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த சமயங்கவின் உறவு முறை சகோதரர் ஒருவரே எனவும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதாக வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-4)

# சட்டவிரோத ஆயுதங்களைக் கைப்பற்ற நாடு முழுவதும் பொலிஸார் சோதனை

கொழும்பு, மார்ச் 6
சட்டவிரோத ஆயுதங்களைக் கண்டுபிடிக்கவும் அவற்றை வைத்திருப்பவர்களைக் கைது செய்யவும் நாடு முழுவதும் தீவிர சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

பொலிஸ்மா அதிபரின் உத்தரவின் கீழ் நாடு முழுவதிலுமுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

களுத்துறையில் சிறைச்சாலை பேருந்துகள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் கல்கிஸை நீதிமன்றத்திலிருந்து இரு துப்பாக்கிகள் மீட்கப்பட்ட சம்பவம் ஆகியவை தொடர்பாக பொலிஸ்மா அதிபரின் கவனம் திரும்பியுள்ளதையடுத்தே இந்தச் சோதனை நடவடிக்கை கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது. (ஐ-4)

# மனமாற்றம் உருமாற்றம்

நேர்மையாளர்களை அல்ல பாவிகளையே மனமாற அழைக்க வந்தேன். (லூக் 5.32)

**இயேசுவின் போதனைகளும், அருங்குறிகளும், செயற்பாடுகளும் மனமாற்றத்தையே மக்களிடமிருந்து எதிர்பார்ப்பதாக அமைந்திருந்தது.** ஏனெனில் தனது சாயலான மனிதன் பாவத்தில் அமிழ்ந்திருப்பதை இயேசு விரும்பவில்லை. அவரது மீட்புத் திட்டத்தின் நோக்கமே பாவத்துக்கு பரிகாரமாக தன்னையே அர்ப்பணிப்பதாகும் மன்னிக்க காத்திருக்கும் இயேசுவின் அழைப்புக்கு ஒத்துப்போக நாம் தயாரா? எல்லாவற்றையும் விட்டுவிட்டு இயேசுவைப் பின்தொடர்ந்த வரிவசூலிப்பாளரான லேவியைப் போன்று எம்மிடமுள்ள பகைமை பழிவாங்கல், காமம், கொலைவெறி, தறிகெட்டநெறிமுறைகள், பாவச்செயல்களை விட்டுவிட ஆயத்தமா? சிந்திப்போம் உணர்ந்து, வருந்தி, திருந்தி மனமாறும் போது உளமருத்துவரான இயேசு மன்னித்து அரவணைக்க காத்திருக்கின்றார். எனவே இந்தத் தவக்காலத்தில் புதிய இயல்பையும் உள்ளத்தையும் அணிந்தவர்களாக புதியபாதையில் பயணிப்போம் அந்த மனமாற்றம் எம்மை உருமாற்றும்.




எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை

# சௌத்பார் கடலில் மன்னார் மீனவருக்கு கடற்படை இடையூறு

*சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. குற்றச்சாட்டு*

மன்னார், மார்ச் 6

மன்னார், சௌத்பார் கடலில் தொழிலில் ஈடுபடும் மன்னார் மீனவர்களுக்குப் படகுச் சோதனை எனும் பெயரில் கடற்படையினர் இடையூறு விளைவிக்கின்றனர். அதே பகுதியில் தொழில் செய்யும் தென்னிலங்கை மீனவர்களிடம் எதையும் கேட்பது கிடையாது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் குற்றஞ்சாட்டினார்.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மன்னார் மாவட்டம் சவுத்பார் கடற்பரப்பில் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களும் தென்னிலங்கை மீனவர்களும் கடற்றொழிலில் ஈடுபடுகின்றனர். இங்கே மன்னார் மீனவர்களின் படகை மட்டும் தினமும் சோதனை என்னும் பெயரில் தாமதங்களையும் இடையூறுகளையும் கடற்படையினர் ஏற்படுத்துகின்றனர். தென்னிலங்கையைச் சேர்ந்த மீனவர்களிடம் எதனையும் கேட்பதே கிடையாது.

அனைவரது படகுகளையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்வையிட்டு அனைவரின் படகுகளும் சோதனையிட்டால் கடற்படையினர் தமது கடமையை செய்கின்றனர் என ஏற்றுக்கொள்ள முடியும். ஒரு இனத்தவரை மட்டும் சோதனை என்னும் பெயரில் தாமதப்படுத்துவதும் சந்தேகக் கண் கொண்டு பார்ப்பதும் வீணான மனக் கசப்பை உண்டு பண்ணுகின்றது.

கடற்படையினரின் பணிக்கு நாம் இடையூறாக இருக்கவில்லை. அதுதான உங்கள் பணி என்றால் அனைவரையும் ஒரே மாதிரியான நடைமுறையின் கீழ் கொண்டு வரவேண்டும் என்று கோருகின்றேன்-என்றார். (ற-101)

# காத்தான்குடி கடற்கரையில் வயோதிபரின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, மார்ச் 6

மட்டக்களப்பு காத்தான்குடி, நாவலடி கடற்கரைப் பகுதியில் நேற்றுக்காலை கரை ஒதுங்கிய வயோதிபரொருவரின் சடலம் கரையொதுங்கியது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஞாயிறு அதிகாலை கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் சடலம் கரையொதுங்கிக் கிடப்பதைக் கண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

பொலிஸார் சடலத்தை மீட்டு உடற் கூற்றுப் பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு கொண்டு சேர்ப்பித்தனர்.

மீட்கப்பட்ட சடலம் சுமார் 55 தொடக்கம் 60 வயதுக்குரியது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-ய-46)

# ஆக்கத்திறன் போட்டிகள்

யாழ்ப்பாணம். மார்ச் 6

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கலை, இலக்கிய, நாடக மன்றங்களிடையேயான மாகாண கலை ஆக்கத்திறன் போட்டிகள் நடைபெறவுள்ளன.

போட்டிகள் கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு, திறந்த பிரிவு போன்ற பிரிவுகளில் பாடலாக்கம், கவிதை, ஓவியம், தனிநடனம், நாடகம், நாட்டிய நாடகம், வில்லுப்பாட்டு, புகைப்படம், குழுநடனம் என நடைபெறவுள்ளன. போட்டிக்கான விண்ணப்பங்கள் அனைத்தும் இந்த மாதம் 20ஆம் திகதிக்குள் கிடைக்கக் கூடியதாக பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தர்களிடம் கையளிக்கப்பட வேண்டும்.

பிரதேச மட்டத்தில் முறைப்பாடுகள் பரிசீலிக்கப்பட்ட பின்னர் முதலாவது இடத்தைப் பெறும் படைப்பை மட்டும் மாவட்ட மட்டப் போட்டிக்காக எதிர்வரும் மே மாதம் 8ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்க வேண்டும். மாவட்ட மட்டத்தில் முறைப்பாடுகள் பரிசீலிக்கப்பட்ட பின்னர் முதல் இரண்டு இடங்களையும் பெற்றுக்கொள்ளும் போட்டிகளை மட்டும் மாகாண மட்டப் போட்டிக்காக மே மாதம் 12ஆம் திகதி கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

மாகாண மட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக்கொள்ளும் வெற்றியாளர்களுக்கு மாகாண இலக்கிய விழாவில் பரிசில்கள் வழங்கப்படும் என வடமாகாண பண்பாட்டலுவல்கள்திணைக்களத்தின்உதவிப்பணிப்பாளர் செ.வனஜா தெரிவித்தார். (ற-ரி)

# வடக்கு, கிழக்கு மக்களுக்காக 1,785 சிறு தொழில் முயற்சிகள்

கொழும்பு, மார்ச் 6

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கு ஆயிரத்து 785 சிறிய தொழில் முயற்சிகள் அரச தலைவரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலர் வே.சிவஞானசோதி தெரிவித்தார். தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சினால் அனுப்பப்பட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது:

போரால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்களினது சமூக பொருளாதார மட்டத்தை உயர்த்தி வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் பிரதேச ரீதியாக பின்தங்கிய பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் பிரதேசவேறுபாடுகளைக் குறைப்பதே சிறிய தொழில் முயற்சிகள் கருத்திட்டத்தின் நோக்கமாகும்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அமைச்சர் என்ற அடிப்படையில் 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைவாக போரால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆயிரத்து 785 சிறிய தொழில் முயற்சிகளை, கிராமங்களைமையமாகக்கொண்ட தொழில்முயற்சிகளை முன்னெடுக்கும் திட்டத்தின் கீழ் நடைமுறைபடுத்துவதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் சிறு தொழில் முயற்சிகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள 113 கிராமங்களில் முன்னெடுக்கப்படுகின்றது. அதற்கான நிதியின் ஒருபகுதி சலுகை அடிப்படையிலான கடனாக பிராந்திய வங்கி மற்றும் சனச வங்கியூடாக வழங்கப்படும். கருத் திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 446 மில்லியன் ரூபாவாகும். ஒவ்வொரு தொழில் முயற்சிக்கும் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்படாத நிதியைப் பெறுவதற்கு வசதி செய்து கொடுக்கப்படும். ஒவ்வொரு சிறுதொழில் முயற்சியினதும் மதிப்பிடப்பட்ட உதவுதொகையில் 25வீதம் நன்கொடையாக வழங்கப்படுவதுடன் எஞ்சிய 75 வீதமும் சலுகைக் கடனாக வழங்கப்படும். கடனுக்கான வட்டித் தொகை அரசால் பொறுப்பேற்கப்படும்.

முன்னாள் அரச தலைவர் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவால் தலைமை வகிக்கப்படும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தால் இந்தக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்-என்றுள்ளது. (ற-10)

# ஐ.நா. அழுத்தத்தை சமாளிக்க மாற்று யோசனை அவசியம்

*பிரதிபா மஹானாமஹேவா கூறுகின்றார்*

கொழும்பு, மார்ச் 6

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையால் முன்வைக்கப்படும் அழுத்தங்களுக்கு முகம்கொடுக்க இலங்கை மாற்று யோசனையொன்றை நோக்கி தயாராக வேண்டும்.

இவ்வாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் கலாநிதி பிரதிபா மஹானாமஹேவா தெரிவித்தார்.

இலங்கை முன்னெடுக்கும் நடவடிக்கைகள் மந்தகெதியில் உள்ளது என்று ஐ.நா. மனித உரிமைகள் சபை இலங்கை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

இலங்கை மீது ஏற்கனவே விதித்திருந்த நிபந்தனைகளை ஒழுங்கான முறையில் நிறைவேற்றப்படாமை குறித்து ஐ.நா. இந்த முறை அழுத்தங்களை பிரயோகித்துள்ளது. ஐ.நா.வின் இந்த யோசனைகளை மீண்டும் நிறைவேற்ற காலம் கேட்டிருப்பது பொருத்தமான தீர்வு அல்ல. என்றார். (ற-10)

# இராணுவம் பிடித்துச் சென்ற மகனின் படம் பத்திரிகையில்

*பதில் கூற வேண்டும் அரசு எனத் தாயார் மன்றாட்டம்*

யாழ்ப்பாணம், மார்ச் 6

நல்லூர், அரசடி ஊடாக வீதியால் சென்ற எனது மகனை இராணுவத்தினர் கைது செய்தனர். இது 2006ஆம் ஆண்டு 10ஆம் மாதம் 25ஆம் திகதி நடந்தது. 2007ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வெளிவந்த கொழும்புத் தினசரி பத்திரிகையில் மகனின் படத்தைக் கண்டேன். ஆனால் தற்போது எதுவும் தெரியாது எனக் கைவிரிக்கின்றனர்.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடி வரும் அருணகிரிநாதன் ஜெயகலா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணம் வந்தார். அவரிடம் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக சந்திக்கக் கூடியிருந்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் கூறியதாவது:

அரசடிப் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் எனது மகனைக் கைது செய்து கொண்டு சென்றனர். அப்போது அவனுக்கு 22 வயது. எனது மகன் தொடர்பில் பல இடங்களில் முறையிட்டேன். நானும் தினமும் தேடி அலைந்தேன். மகன் விடுவிக்கப்படவில்லை. மகன் இருக்கும் இடத்தைக்கூட படையினர் தெரிவிக்கவில்லை.

> "படத்தில் உள்ள ஒரு சிலரில் எனது மகன் நிற்பதனை நான் கண்டேன். அதை ஆதாரமாக வைத்து பல இடங்களையும் தொடர்பு கொண்டேன். இன்றுவரைக்கும் எனது மகனைக் காட்டவும் இல்லை, விடுவிக்கவும் இல்லை.

2007ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் கொழும்பில் இருந்து வெளிவரும் தினசரி பத்திரிகையில் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினரும் தற்போது அமைச்சருமான ஒருவர் சென்று கைதிகளுடன் உரையாடினார். அவர் சில கைதிகள் உரையாடும் படம் மிகத் தெளிவாக வர்ணப் படமாக பத்திரிகையின் முகப்பில் போடப்பட்டிருந்த்து.

படத்தில் உள்ள ஒரு சிலரில் எனது மகன் நிற்பதனை நான் கண்டேன். அதை ஆதாரமாக வைத்து பல இடங்களையும் தொடர்பு கொண்டேன். இன்றுவரைக்கும் எனது மகனைக் காட்டவும் இல்லை, விடுவிக்கவும் இல்லை.

சோதனைச் சாவடியில் வைத்து கடத்தப்பட்டு பூசா தடுப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருந்தமைக்கான ஆதாரம் உள்ள எனது மகனான அரிணகிரிநாதன் சுதன் தொடர்பில் இந்த அரசு பதில் கூறவேண்டும். அன்று சிறை சென்று பார்வையிட்ட தற்போதைய கல்வி இராஜாங்க அமைச்சரான இராதாகிருஸ்ணன் அது தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால் தெரிவிக்க வேண்டும்-என்றார். (ற-101)

# பன்னங்கண்டி மக்களின் போராட்டம் இரண்டாவது நாளாகவும் தொடர்கிறது

கிளிநொச்சி, மார்ச்.6
கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பன்னங்கண்டி கிராம மக்கள், காணி உரிமம் மற்றும் வீட்டுத்திட்டம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கோரி நேற்று இரண்டாவது நாளாகவும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காலை 9 மணி தொடக்கம் 5 மணிவரை நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தாம் குடியிருக்கும் மத்திய வகுப்புக் காணிகளுக்கான உறுதிப்பத்திரங்களைப் பெற்றுத்தருமாறும், உறுதிப்பத்திரங்கள் இல்லாத காரணத்தால் வீட்டு வசதிகளின்றி மழைக்காலங்களில் அவதிப்படுவதாகவும் தெரிவித்ததுடன் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதகைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர்.

சுமார் 25 வருடங்களுக்கு மேலாக இந்தக் காணிகளில் குடியிருக்கும் தமக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமையால் வீட்டுத்திட்டம் உள்ளிட்ட அனைத்து அரச சலுகைகளையும் இழப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதுதொடர்பாக பன்னங்கண்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் சுப்பையா புவனேந்திரன் தெரிவித்ததாவது-

"இந்தக் கிராமத்தில் சிவாபசுபதி, ஜொனி மற்றும் சரஸ்வதி ஆகிய மூன்று குடியிருப்புகளில் வாழும் சுமார் 196 குடும்பங்கள் வீட்டுத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு அரச உதவித்திட்டங்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கின்றனர். காணிகளுக்கு உறுதிப்பத்திரங்கள் இல்லாமையே இதற்கு காரணமாகும்.

இந்தக்காணிகள் தொடர்பான விவகாரம் மிகவும் இழுபறி நிலையிலேயே காணப்படுகிறது. உரிமையாளர்கள் எனக் கூறிக்கொண்டு வருபவர்கள் இந்தக் காணிகளுக்கு பெருந்தொகை விலையைக் கூறுகின்றனர். அவ்வளவு பெரிய தொகையைக் கொடுத்து வாங்குமளவுக்கு மக்களால் முடியாது. இது தொடர்பாக அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளிடமும் பலமுறை சுட்டிக்காட்டினோம். எனினும், இதுவரை எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. இதனால் நாளுக்கு நாள் மக்கள் தமக்கான சலுகைகளை இழந்து பெரும் அசௌகரியங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். எனவே, இதற்கொரு தீர்வு கிட்டும் வரை தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடுவதெனத் தீர்மானித்துள்ளனர்." -என்றார். (ஐ-ய-6)





## கின்னியா மருத்துவமனைக்கு சீனக்குழு வருகை

மூதூர், மார்ச் 6
திருகோணமலை கிண்ணியா மருத்துவமனையில் நிலவி வரும் பௌதிக வளப்பற்றாக் குறை தொடர்பான கள ஆய்வுகளை மேற்கொண்டு நோயாளர்களுக்கான விடுதி வசதி நிர்மாணித்துக் கொடுப்பதற்காக சீன நாட்டின் குழு ஒன்று நேற்றுமுன்தினம் குறித்த மருத்துவமனைக்கு வருகை தந்தது.

கொழும்பு சுகாதார பிரதி அமைச்சால் அனுப்பி வைக்கப்பட்ட இந்தக் குழு, பிரதி அமைச்சரின் இணைப்புச் செயலாளர் எச்.எம்.எம். பாயிஸின் வழிகாட்டலின் கீழ், மருத்துவமனையின் தேவைகளை அடையாளம் காண்பதற்காக நோயாளர் விடுதி உட்பட பெரும்பாலான இடங்களைச் சுற்றிப் பார்வையிட்டது.

பின்னர் மருத்துவமனையின் தேவைகள் குறித்து கலந்துரையாடல் இடம் பெற்றது.

இதில் மாவட்ட மருத்துவ அதிகாரி எச்.எம். சமீம், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐய40)

## சைட்டம் விவகாரம் பல்கலை. மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கோப் குழு அழைப்பு

கொழும்பு, மார்ச் 6
மாலபே, தனியார் மருத்துவக் கல்லூரியின் மருத்துவக் கல்விக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளமை தொடர்பில் விளக்கமளிக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கோப் குழு அழைப்பு விடுத்துள்ளது.

மானியங்கள் ஆணைக் குழு நாளை கோப் குழுவின் முன்பாக முன்னிலையாக வேண்டும். அதுமட்டுமன்றி இந்த விடயம் தொடர்பான சகல விவரங்களும் அடங்கிய அறிக்கையொன்றை இரு வாரங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது" என்று கோப் குழுவின் தலைவரும் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார். (ஐ-4)



திருகோணமலை மாவட்ட வேலையில்லா பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில், நான்காவது நாளாகவும் திருகோணமலை ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக நேற்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதேவேளை, நாளைய தினம் கிழக்கு மாகாண சபைக்கு முன் தமது ஆர்ப்பாட்டத்தை தொடரவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் திட்டமிட்டுள்ளனர். (ஐ-ய-40-45)

## போராடும் பட்டதாரிகளுடன் அமைச்சர் ஹக்கீம் சந்திப்பு



எருவில், மார்ச் 6
வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்கான மூலங்களை கண்டறியும் பொருட்டு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை கையளிக்கப்பட்ட பின்னர், சாதகமான தீர்வு கிடைக்குமென்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அம்பாறை காரைதீவில் கடந்த பல நாளகளாக பேராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற அம்பாறை மாவட்டப் பட்டதாரிகளை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தலைமை அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை கையளிக்கப்பட்ட பின்னர், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு கூடிய விரைவில் வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கான சாதக சூழல் ஏற்படும் என்றும் அமைச்சர் இதன் போது தெரிவித்தார். (ஐய)

## குப்பைகள் அகற்றப்படாததால் பெரும் சுகாதாரச் சீர்கேடுகள்

வேப்பம்குளம் மக்கள் விசனம்

வவுனியா, மார்ச் 6
"கடந்த இரண்டு மாதங்களாக வவுனியா நகரசபையால் அகற்றப்படாது உள்ள குப்பைகளால் பெரும் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன. குப்பைகளை அகற்ற உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்"
இவ்வாறு மன்னார் வீதி, வேப்பங்குளம் பகுதியை சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்தனர்.
அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:
வவுனியா வேப்பங்குளம் 6ஆவது ஒழுங்கையிலுள்ள கழிவுகளை நகரசபையினர் கடந்த இரண்டு மாதங்களாக அகற்றவில்லை. இது தொடர்பாக வவுனியா நகரசபையினருக்கு அறிவிக்கப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. குப்பைகளை அகற்ற வரும் நகரசபை ஊழியர்கள் எமது பகுதியைக்கடந்து சென்று வேறுபகுதிகளில் குப்பைகளை அகற்றிச் செல்கின்றனர். எமது பகுதியில் மாத்திரம் குப்பைகள் அகற்றப்படுவதில்லை.
டெங்குத் தொற்று மற்றும் பன்றிக்காய்ச்சல் ஏற்படும் நிலையில் குப்பைகளை அகற்றுவதற்கு நகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றனர்.
"நகரசபைக்கு குறித்த பகுதி மக்கள் எழுத்து மூலமான அறிவிப்பு விடுக்கப்படவில்லை. ஊழியர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதற்கு எழுத்து மூலமான அறிவிப்பு விடுக்கப்பட வேண்டும். அவ்வாறு விடுத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என வவுனியா நகரசபைச் செயலாளர் ஆர்.தயாபரன் தெரிவித்தார். (ற21)



# தமிழர், முஸ்லிம்கள் இணைந்ததே கிழக்கில் அடுத்த ஆட்சி

கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 6
"கிழக்கு மாகாண சபையின் அடுத்த ஆட்சியும் தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்து கோலோச்சும் நல்லாட்சியாகத் தான் இருக்கும்"
இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.
மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவிலுள்ள ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் மகப்பேற்றுப் பிரிவுக் கட்டடத் தொகுதி என்பன திறந்துவைக்கும் நிகழ்வு சனிக்கிழமை நடைபெற்றது.
அதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கல்முனை மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுடன் மு.கா. தலைவரும் அமைச்சருமான றவூப் ஹக்கீம் தலைமையில் நாம் புரிந்துணர்வுக் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினோம்.
தமது பிரதேசங்களுக்குள் பல்வேறு வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் இருப்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள்.
இன ஐக்கியத்துக்கும் பரஸ்பர ஒத்துழைப்புக்கும் விட்டுக் கொடுப்புடன் மனம்விட்டுத் தங்களது பிரச்சினைகளையும் தேவைகளையும் கண்டறிந்து கொள்வதற்கு முன்வந்ததையிட்டு இருசாராரும் திருப்திப் பட்டுக்கொள்ளும் அளவுக்கு நகர்வுகள் இடம்பெற்றன.
கல்முனைப் பிரதேச தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மாநகரசபை உறுப்பினர்கள் குறிப்பிட்டுக்காட்டிய தமது பிரதேசத்தின் தேவைகள் அபிவிருத்திகள் உடனடியாக நிறைவேற்றிக் கொடுக்கப்பட வேண்டும் என்று நான் கல்முனை மாநகர ஆணையாளருக்கு உத்தரவிட்டேன்.
அமைச்சர் ஹக்கீமும் அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகளைச் செய்வதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுத்தார்.
தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் நாங்கள் கிழக்கு மாகாண சபையிலே ஏற்படுத்தியிருக்கின்ற நல்லாட்சியின் பயன்கள் மாகாண சபையோடு மட்டும் நின்றுவிடாது. கிழக்கு மாகாணத்திலே தமிழ் முஸ்லிம் சிங்கள மக்கள் இணைந்துள்ள இந்த நல்லாட்சி அடுத்த மாகாணசபை யிலும் தொடரும் -என்றார். (றய46)



## தேக்கு மரக் கடத்தல் முறியடிப்பு சந்தேகநபர்கள் தப்பியோட்டம்

எருவில், மார்ச் 6
மட்டக்களப்பு வாழைச்சேனை, ஓட்டமாவடியில் உள்ள மர ஆலைக்கு அருகில் வைத்து தேக்கு மரங்களுடன் வாகனம் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது ஏன்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தார்.
சட்டவிரோத செயல்களைத் தடுக்கும் வகையில் பிரதேசத்தில் உள்ள அனைத்து வீதிகளுக்கும் சுழற்சி முறையில் இரவு நேரக் கடமையில் பொலிஸார் நியமிக் கப்பட்டுள்ளனர். இரவுநேரக் கடமையில் ஈடுபட்ட பொலிஸாரைக் கண்டதும் தேக்கு மரங்களை ஏற்றி வந்த வாகனத்தின் சாரதியும் அதன் உதவியாளரும் வாகனத்தைவிட்டுவிட்டுத் தப்பியோடினர் என்று தெரிவிக்கப்பட்டது.
வாகனத்தில் இருந்து ஆறு தொடக்கம் எட்டு அடி நீளமுடைய 18 தேக்கு மரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.
சந்தேகநபர்கள் தொடர்பான விசாரணை முடுக்கி விடப்பட்டுள்ளது என்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (றய)

## வாகனம் கவிழ்ந்து கர்ப்பிணி சாவு

கொழும்பு, மார்ச் 6
மேல் மாடியில் கொங்றீட் தளத்தில் மோட்டார் வாகனத்தை நிறுத்த முற்பட்ட போது, மோட்டார் வாகனம் கவிழ்ந்து இடம்பெற்ற விபத்தில் கர்ப்பிணிப் பெண்ணொருவர் சாவடைந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் பண்டாரவளை ஏத்தலம்பிட்டிய பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நேற்றுக் காலை இடம்பெற்றது.
இந்தச் சம்பவத்தில் 31 வயதுடைய கர்ப்பிணிப் பெண்ணொருவரே சாவடைந்துள்ளார். விபத்தின்போது சாவடைந்தவரின் மகளும் மோட்டார் வாகனத்தில் இருந்துள்ளார். ஆயினும் அவருக்கு எந்தவித பாதிப்பும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற10)

# யாழ். கலாலயா பயிற்சியகத்தின் 32 ஆவது ஆண்டு விழாவும் சான்றிதழ் வழங்கல் நிகழ்வின் மேலும் சில பதிவுகள்.....



யாழ்ப்பாணம் விக்ரோரியா வீதியில் அமைந்துள்ள யாழ் கலாலயா பயிற்சியகத்தின் 32 ஆவது ஆண்டு விழா மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் லண்டன் ஜுடி என்ரபிறைசஸ் அழகு சாதனப் பொருள்கள் கேக் உள்ளீடுகள் விநியோக நிறுவன இயக்குநர் திரு. ஜீ.எம் ராஜ்குமார் அவர்கள் உரையாற்றுவதையும் கேக் ஐசிங்.உணவு தயாரித்தல் . கூந்தல் அலங்காரம் பயிற்சிகளில் அதி கூடிய புள்ளிகள் பெற்று $2016^{C}$ பிரிவின் சிறந்த மாணவியாக தெரிவு செய்யப்பட்ட செல்வி கலியுகவரதன் கபிலயா அவர்களுக்கு பயிற்சி நிலைய இயக்குநர் மா.சுதர்சன் அவர்கள் நினைவுப் பரிசில் வழங்குவதையும் அருகில் பயிற்சி நிலைய ஆசிரியைகள் நிற்பதனையும் பயிற்சியை நிறைவு செய்த கேக் ஐசிங். உணவு தயாரித்தல் Facial. கூந்தல் அலங்காரம் உடை தயாரித்தல் பயிற்சிகளைப் பயின்று சான்றிதழைப் பெற்றுக் கொண்ட மாணவிகளையும் இயக்குநர் அவர்களால் ஆண்டு விழாக் கேக் ஆசிரியைகளுக்கு பரிமாறப்படுவதனையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.




வடக்கு கென்யாவில் தற்போது கடும் வறட்சி நிலவுகிறது. குறிப்பாக மொஜாலே நகரம் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான நீர்நிலைகளில் குடிதண்ணீர் வற்றியுள்ளன. சில நீர் நிலைகளில் சொற்பமான அளவு குடிதண்ணீரே கையிருப்பில் உள்ளன. கால்நடைகள் வறட்சி காரணமாக சாவடைகின்றன. மக்கள் பெரும் அல்லல்களை எதிர்கொள்ளுகின்றனர். அவர்களுக்கு வழங்கப்படும் குடிதண்ணீரின் அளவு அவர்களின் தேவையுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைந்தளவே என்று குறிப்பிடுகிறது. இந்தத் துன்பியல் நிலையை ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரி ஸ்ரீபன் ஓ பிரையன் தலைமையிலான குழு நேரில் சென்று பார்வையிட்டது. (ம)

## ஜோர்தானில் ஆயுததாரிகள் 15 பேருக்கு தூக்கு

அம்மான், மார்ச் 6
15 ஆயுததாரிகளுக்கு தூக்குத் தண்டனையை நிறைவேற்றியது ஜோர்தான் அரசு.
2006ஆம் ஆண்டு அம்மான் நகரில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைகுறிவைத்துநடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதல், நாட்டின் வடபகுதியில் ஜோர்தான் உளவுத்துறை அதிகாரிகள் ஐந்துபேர் கொல்லப்பட்ட தாக்குதல், இஸ்லாமிய கொள்கைக்கு மாறாக எழுதி வந்தார் என கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர் நஹித்ஹத்தாரின்படுகொலை ஆகிய வழக்குகளில் தொடர்புடையை பத்து குற்றவாளிகள், கொடும் குற்றவாளி களாகத் தண்டிக்கப்பட்டிருந்த மேலும் ஐந்து பேர் என மொத்தம் 15 பேருக்கு ஜோர்தான் தலைநகரான அம்மான் நகரின் தெற்கு பகுதியில்உள்ளசுகாசிறையில் நேற்றுமுன்தினம் அதிகாலை தூக்குத்தண்டனைநிறைவேற்றப்பட்டது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



# நீண்டு செல்கிறது நெடுவாசல் போர்



சென்னை, மார்ச் கூ
இயற்கைஎரிவாயுஎடுப்பதற்குதமிழ்நாடு புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசல் கிராமத்தில் இந்திய அரசு வழங்கிய அனுமதியை திரும்பப் பெறவேண்டும் என்று வலியுறுத்தி, பல்லாயிரக் கணக்கான மக்கள் இணைந்து 18 ஆவது நாளாக நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
தமிழகம் புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசல்கிராமத்தில்இயற்கைஎரிவாயு எடுப்பதற்கு இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் நெடுவாசல் கிராமத்தின் நீர்வளம், விவசாய நிலங்கள் ஆகியன பாழாகும் என்ற அச்சம் உள்ளதால், திட்டத்தை திரும்பப் பெறவேண்டும் என்று வலியுறுத்தி பல்லாயிரக் கணக்கான மக்கள் இணைந்து - தொடர்ந்து இரவு பகலாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். சுழற்சிமுறையில்உணவு ஒறுப்பும் நடைபெற்று வருகிறது.
விவசாயிகள் கலப்பைகள், மண் வெட்டிகள், மாட்டுவண்டில்கள் ஆகியவற்றுடன் போராட்டத்தில் கலந்து கொண்டு வருகின்றனர். பல்கலைக் கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள் ஆகியோரும் களமிறங்கியுள்ளனர். தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி போராட்டத்தைக் கைவிடுமாறு இரு முறை அழைப்பு விடுத்தார். எரிவாயு பெரும்திட்டம்கைவிடப்பட்டாலேயே போராட்டம் கைவிடப்படும் என்று நெடுவாசல் மக்கள் திட்டவட்டமாகத் தெரிவித்தனர்.
நெடுவாசல்இயற்கைஎரிவாயுபெறும் திட்டத்துக்குவித்திட்டது தி.மு.கழகமே என்று முதல்வர் எடப்பாடி குற்றஞ் சுமத்தியுள்ளார். (ம)

## இரசாயன ஆயுதங்களை பயன்படுத்துகிறது ஐ.எஸ்.ஐ.எஸ்.

பக்தாத், மார்ச் 6
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கும் ஈராக்அரசபடைக்கும்இடையே ஈராக்கின் மோசூல்நகரின் மேற்குப் பகுதியில் கடந்த இரு வாரங்களுக்கும் அதிகமாக போர் நடைபெற்றுவரும் நிலையில் தன்னிடமுள்ள இரசாய ஆயதங்களை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பயன்படுத்த ஆரம்பித்துள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன.
ஈராக், சிரியா நாடுகளின் சிலபகு



திகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் இருந்த பல நகர்கள் மீட்கப்பட்டுவிட்டன. ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான மோசூல் ஐ.எஸ்ஸின் பிடியிலேயே இருந்தது. இதன் கிழக்குப்பகுதி முழுவதுமாக மீட்கப்பட்டு விட்டது. மேற்குப் பகுதியைக் கைப்பற்றும் போரேதற்போது நடைபெற்று வருகிறது. இதுவரை 35 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் மீட்கப்பட்டு விட்டனர். தனது அமைப்பின் பின்னடைவை ஐ.எஸ்.எஸ்ஸின் தலைவர் அல் பக்தாதி ஏற்றுக்கொண்டுள்ளார். இந்தநிலையிலேயே இரசாயன ஆயுதங்களை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பயன்படுத்த ஆரம்பித்துள்ளது. இரசாயன ஆயுதத்தைப் பயன்படுத்தி நேற்றுமுனதினம் நடத்தப்பட்ட தாககுதலில் 15 பேர் காயமடைந்தனர். நூற்றுக்கும் அதிகமானவர்கள்மூச்சுத்திணறலால் பாதிக்கப்பட்டனர் என்று ஈராக் ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)

## சோமாலியாவில் கடும் வறட்சி: 110 பேர் சாவு

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சோமாலியாவில் கடந்த மூன்று தினங்களில் மட்டும் வறட்சி காரணமாக 110 பேர் சாவடைந்தனர்.
அவ்டின்லே நகரிலேயே இந்தத் துயரம் பதிவானது. மேலும் 30 லட்சம் பேர் வறட்சி காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. கொலரா நோயும் பரவி வருவதால் உயிரிழப்புக்கள்மேலும்அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது.
வறட்சி தொடர்பில் அவசர நிலையை அந்த நாட்டு அதிபர் முகமட் அப்துல்லாகி பிரகடனம் செய்துள்ளார். உதவி செய்ய முன்வரும்படி அமெரிக்காவில் உள்ள 13 நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.
சோமாலியாவில், கடந்த 1992 ஆம் ஆண்டு ஏற்பட்டவறட்சிகாரணமாக 2 லட்சத்து 20 ஆயிரம் பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



# கடும் விளைவை சந்திக்கும் அமெ.

## வடகொரியா எச்சரிக்கை


கிம் ஜோங் உன்
கிம் ஜோங் நாம்

வடகொரிய அதிபர் கிம்ஜோங் உன்னின்சகோதரர்கிம் ஜோங்நாம்கொலை விவகாரத்தில் அமெரிக்க தலையிட எத்தனிக்கும் நிலையில், வடகொரியா கடுமையான எச்சரிக்கையைக் கொடுத்துள்ளது.

மலேசியாவின் கோலாலம்பூர் விமானநிலையத்தில், கடந்த 13 ஆம் திகதி திங்கட்கிழமை கிம் ஜோங் நாம் சடலமாக மீட்கப்பட்டார். தடயவியல்சோதனையில், ஐக்கியநாடுகள்சபையால்தடைசெய்யப்பட்ட இரசாயனத்தைப்பயன்படுத்தியே நாம் கொலைசெய்யப்பட்டார் என்று உறுதிப்படுத்தப்பட்டது. இந்தக் கொலையின் பின்னணியில் இந்தோனேசியப் பெண் சிட்டி ஆய்சா, அவரது மலேசியக்காதலர், வியட்நாம் பெண் டொன் தி ஹுவாங், வடகொரியாவைச்சேர்ந்தரிஜாங் சோல் நால்வரும் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டனர். வடகொரியத் தூதுவர் ஒருவருக்கும்தொடர்புள்ளதுஎன்றுதெரிவிக்கப்பட்டது. இவர்களைவிட இன்னும்7பேர்மீதுதமக்குசந்தேகம்உள்ளதுஎன்றுமலேசியாவின் தரப்பில்வெளிப்படுத்தப்பட்டது.

முன்னதாக, நாமைக்கொன்றவர் உன்னே. இதற்காக 3 குழுக்களைதென்கொரியஅதிபர் கிம் ஜோங் உன் அமைத்திருந்தார். இரு குழுக்கள் நாமைக் கொல்வதற்கும் ஓர் குழுஏனையஇருகுழுக்களுக்கும் உதவிசெய்வதற்கும் என அவற்றைஅவர்நியமித்திருந்தார் என்று தென்கொரியா பகிரங்கமாகத் தெரிவித்தது.

இந்தக் கொலையின் பின்னணியில் இந்தோனேசியப் பெண் சிட்டி ஆய்சா, அவரது மலேசியக் காதலர், வியட்நாம் பெண் டொன் தி ஹுவாங், வடகொரியாவைச் சேர்ந்த ரி ஜாங் சோல் நால்வரும் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டனர். வடகொரியத் தூதுவர் ஒருவருக்கும் தொடர்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இவர்களை விட இன்னும் 7 பேர் மீது தமக்கு சந்தேகம் உள்ளது என்று மலேசியாவின் தரப்பில் வெளிப்படுத்தப்பட்டது.

இவை எல்லாவற்றையும் வைத்து வடகொரியாவைதீவிரவாத நாடுகளின் பட்டியலில் சேர்க்க அமெரிக்கா பரிசீலிக்கிறது என்று தென்கொரிய மற்றும் ஜப்பான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இந்தநிலையில் அவ்வாறு பயங்கரவாத நாடுகளின் பட்டியலில் சேர்த்தால் அதற்குஅமெரிக்காகடும்விலை கொடுக்கவேண்டிவரும்என்று வடகொரியா எச்சரித்தது.

வடகொரியாவின் அயலுறவுத் துறை செய்தித் தொடர்பாளரே இந்தக் கருத்தைத் தெரிவித்தார். வடகொரியா அனைத்து வடிவத்திலான தீவிர வாதத்தையும் எதிர்த்து வருகிறது. ஆனால், அமெரிக்கா எங்கள் புகழுக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சிக்கிறது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ம)

## அமெரிக்காவுக்கு போட்டியாக இராணுவச் செலவினத்தை அதிகரித்தது சீனா

அமெரிக்காவின் பாதுகாப்பு செலவினங்களை அதிகரிக்கும் வரைவுத்திட்டம் குறித்து அந்த நாட்டு அதிபர் ட்ரம்ப், சில தினங்களுக்குமுன் அறிவித்திருந்த நிலையில், இந்த ஆண்டு இராணுவத்துக்கான செலவினங்களை 7 சதவீதம் அதிகரிக்கப்போவதாக சீனா அறிவித்துள்ளது. பீஜிங்கில் ஆண்டு தோறும் நடைபெறும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு முன்னதாக இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. சமீப ஆண்டுகளில் சீனாவின் பொருளாதாரம் விரிவடைந்துவரும் நிலையில், அதன் ஆயுதக் கையிருப்புக்களையும் வேகமாக நவீனமாக்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



## தாமிரபரணிக்குள் இறங்கி போராட்டம் தொடர்கிறது

சென்னை, மார்ச் கூ

தமிழகம் தாமிரபரணி ஆற்றில் இருந்து குளிர்பான ஆலைகள் தண்ணீர் எடுக்க விதிக்கப்பட்டிருந்தஇடைக்காலத்தடையைநீக்கப்பட்டதை அடுத்து ஆற்றுக்குள் இறங்கி விவசாயிகளும், இளைஞர்களும் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

திருநெல்வேலியைச் சேர்ந்த பிரபாகர் என்பவர குளிர்பான ஆலைகள் தாமிரபரணி ஆற்றில்இருந்துதண்ணீர்எடுக்க தடை விதிக்க வேண்டும் என்றுஉயர்நீதிமன்றமதுரை கிளையில் பொதுநல வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கைவிசாரித்தஉயர்நீதிமன்ற மதுரை கிளை, கடந்த நவம்பர் மாதம் முதல் தண்ணீர் எடுக்க குளிர்பான ஆலைகளுக்குஇடைக்காலத் தடை விதித்தது. அதனை எதிர்த்து குளிர்பான ஆலைகள்சார்பில்முறையிடப்பட்டது. அதில், தாமிரபரணியில் இருந்து வெளியேறும் மேலதிக நீரைத்தான் பயன்படுத்துகிறோம் என்றும், இதனால் தண்ணீர் எடுக்க விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டும் என்று கேட்கப்பட்டது. இதை ஏற்று கடந்தவாரம் தடை நீக்கப்பட்டது. தடை நீக்கப்பட்டமையைக்கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. (ம)



## தனது தேர்வு தொடர்பில் சின்னம்மா நாளை பதில்

சென்னை, மார்ச் 6

தனது தெரிவு தொடர்பில் அ.தி.மு. கழகத்தின்பொதுச்செயலாளர் சசிகலா நாளை பதில் வழங்குவார் என்று அவரது சட்டத்தரணி தெரிவித்தார்.

அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளராக சசிகலா தெரிந்தெடுக்கப்பட்டமை கழக விதிகளின்படிமுரணானதுஎன்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தரப்பினர் தேர்தல் ஆணையத்தில் முறையிட்டனர். இந்த முறைப்பாடு தொடர்பில் சசிகலா பதில் வழங்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் குறிப்பிட்டது. கடந்தமாதம்28ஆம் திகதிவரை காலக்கெடுவும் விதித்திருந்தது.

சசிகலா பதில் வழங்காமல் அவருக்கு பதில் அ.தி.மு. கழகத்தின்துணைப்பொதுச்செயலாளர்தினகரன்பதில்வழங்கியிருந்தார்.

ஆனால், அதை தேர்தல் ஆணையம் ஏற்கவில்லை. இந்த விடயத்தில் சசிகலாவே பதில் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியது. எதிர்வரும் 10 ஆம் திகதி வரை இரண்டாவது காலக்கெடு விதித்தது. இதனையடுத்து நாளை சசிகலா பதில்வழங்கவுள்ளார் என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)

## ஒட்டுக்கேட்டார் ஒபாமா

*ட்ரம்ப் குற்றச்சாட்டு*

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா, ட்ரம்ப்ரவரில் உள்ள தனது அலுவலக தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்டார் என்று தற்போதைய அதிபர் ட்ரம்ப் குற்றச்சாட்டை முன்வைத்தார். தனது ருவிற்றர் பதிவிலேயே அவர் இந்தக்கருத்தைவெளிப்படுத்தினார். இது கொடிய செயல் என்றும் ட்ரம்ப் கோடிட்டுக் காட்டினார். (ம)



## சவூதி மன்னர் சல்மான் பின் அப்துல் அஜீஸின் ஆடம்பர சுற்றுப் பயணம்

ஜகர்தா, மார்ச் 6

சவூதி மன்னர் சல்மான் பின் அப்துல் அஜீஸ், இந்தோனேசியாவுக்கு ஆடம்பரச் சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டுள்ளார்.

சவூதி அரேபிய நாட்டின் மன்னர் மற்றும் அரச குடும்பத்தினர் மிகவும் ஆடம்பரமாக நடந்து கொள்வது வழக்கமான ஒன்றுதான். அதிலும் தற்போதைய மன்னர் சல்மான் பின் அப்துல் அஜீஸ் எல்லோரையும்மிஞ்சும்அளவுக்கு மிகவும் ஆடம்பரமாக நடந்து கொள்கிறார். அவர் தற்போது இந்தோனேசியா, மலேசியா, சீனா, மலைதீவு, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

முதலாவதாக 9 நாள்கள் பயணமாக இந்தோனேசியாவுக்குகடந்தவியாழக்கிழமை சென்றார். அதிநவீனசொகுசு விமானத்தில் அவர் தலைநகர் ஜகர்தா சென்றடைந்தார். மன்னரின் சுற்றுப்பயணத்துக்காக ஏராளமான ஆடம்பரப் பொருட்கள் சவூதி அரேபியாவில் இருந்து கொண்டு செல்லப்பட்டன. அவர் பயணம்செய்வதற்காகஅவருடனேயே 2 மிகவும் விலை உயர்ந்தகார்கள்வந்துஇறங்கின. இத்துடன் ஏராளமான அதிநவீனகருவிகளும்வந்து இறங்கின. மன்னருக்காக மட்டும் 459 தொன் பொருள்கள் சவூதி அரேபியாவில் இருந்து கொண்டு செல்லப்பட்டன.

மன்னருடன் 36 இளவரசர்கள் மற்றும் இளவரசிகள், 10 மந்திரிகள், 800 பிரதிநிதிகள் சென்றுள்ளனர். அது மட்டுமல்லாமல், மன்னருக்கும், மன்னரின் குடும்பத்தினருக்கும் பணிவிடைகள் செய்வதற்காக 572 பணியாள்கள் வந்துள்ளனர். பிரதிநிதிகள், பணியாட்கள் என அனைவரையும் சேர்த்த மொத்தம் ஆயிரத்து500பேர்மன்னருடன்இந்தோனேசியாசென்றடைந்தனர்.

அவருடன் வந்தவர்கள் மற்றும் கொண்டு வரப்பட்ட பொருள்கள் ஆகியவற்றை ஏற்றி வருவதற்காக மட்டும் 36விமானங்கள்பயன்படுத்தப்பட்டன.

பாலித்தீவில் உள்ள மிக ஆடம்பர நட்சத்திர விடுதயானி புல்காரியிலேயே அவர் தங்கியுள்ளார். இந்த விடுதியின்; ஒரு அறையின் ஒரு நாள் வாடகை மட்டுமே இலங்கை மதிப்பில் 9 லட்சம் ரூபா். அந்தவிடுதிமுழுவதும் ஒன்பது நாள்களுக்கு மன்னருக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. (ம)






# தொலைக்காட்சி நிகழ்வுகளைப் போன்று முகநூலிலும் காண்பியம் செய்யத் தீர்மானம்

உலகின் தொழில்நுட்ப ஆளுகையாக திகழும் சமூக வலைத்தளமான முகநூல் விரைவில் தொலைக்காட்சிகளைப் போன்றே நிகழ்ச்சிகளை வழங்கவுள்ளதான தகவல்கள் வெளியாகியுள்ளது.

இதன்பிரகாரம் பிரபல சமூக வலைத்தளமான முகநூல் முன்னதாக, நேரடிக் காணொலி எனும் பெயரில் பயனாளர்கள் தங்களது காணொலிகளை நேரலையாக ஒளிபரப்புசெய்யக்கூடியதான முறைமையை அறிமுகப்படுத்தியுள்ளது.

அந்தச் செயல்நிலைகளுக்கு கிடைத்துள்ளதான அதீத வரவேற்பைத்தொடர்ந்துதற்போதுதொலைக்காட்சிகளில் வருவதைப்போன்றே நிகழ்ச்சிகளை வழங்க முகநூல் முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக விளையாட்டு தொடங்கி அறிவியல் வரையிலானபல்வேறுபட்டவகையிலானநிகழ்வுகளைஒளிபரப்ப ஏற்பாடுகள் நடந்து வருவதாகச் சொல்லப்படுகிறது. அத்துடன், இவை அனைத்தும் வாரம் ஒரு முறை அரை மணி நேர காலவரையறையில் ஒளிபரப்பாகும் வகையில் வடிவமைக்கப்படவுள்ளதாகவும், நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்குவோருக்கு கணிசமான அளவில் பணம் வழங்கவும்முகநூல்நிர்வாகம்தயாராகவுள்ளதாகக்கூறப்படுகிறது.

# வணிக நிறுவனங்களுக்கான பாதுகாப்புச் சேவைகள் அறிமுகம்

உலகளாவிய ரீதியிலே இணையப் பாதுகாப்புத் தீர்வுகளை வழங்கும் போட்டிநெற் மற்றும் வணிகங்கள், செல்லின சந்தைப் பிரிவுகளுக்கான டி.டி.ஓ.எஸ். பாதுகாப்பில் முன்னணியிலுள்ள நெற் ஸ்கவுட் இன் பாதுகாப்பு பிரிவான அர்பர் நெற்வேக்ஸ் ஆகியவற்றுடன் இணைந்துசிறிலங்காரெலிகொம்வணிகநிறுவனங்களுக்கான பாதுகாப்புச் சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதன்படி ரெலிகொம் நிறுவனத்தின் நிர்வகிக்கப்பட்ட பாதுகாப்புச் சேவைகள் இலங்கையிலுள்ள பெரிய, நடுத்தர மற்றும் சிறிய வணிக நிறுவனங்களுக்கான பல் செயற்பாட்டுத் தீர்வுகளை வழங்கவுள்ளது.

இதுகுறித்துகருத்துரைத்துள்ளசிறிலங்காரெலிகொம் இன் வணிகதீர்வுகள் பிரிவின் பொது முகாமையாளரான எம். ஐ. டீன்.

"தகவல்பாதுகாப்புக்குஏற்பட்டுள்ள ஆபத்துக்கள் முன்னெப்போதுமில்லாத வகையில் குறிப்பாக வணிகச் செயற்பாடுகள் மீதாக அதிகரித்து வருவதால், ஒரு பல் செயற்பாட்டு வலையமைப்புப் பாதுகாப்பு கட்டமைப்பின் தேவை மிகவும் அவசியமாகிறது. தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான ரெலிகொம் செலவுப்பயனுறுதியுள்ளதும் பாதுகாப்பானதுமான ஆரம்பம்முதல்இறுதிவரையான இணைய இணைப்பை வாடிக்கையாளருக்கு வழங்குவதில் கவனத்தைச் செலுத்துகிறது. நிர்வகிக்கப்பட்ட பயர்வோல்சேவையும்டி.டி.ஓ.எஸ்பாதுகாப்புச்சேவையும் பழைய புதிய வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கவுள்ளது.அத்துடன்,மின்னஞ்சல்பாதுகாப்பானதுகணிணி முகில் சேவையை அடிப்படையாகக்கொண்டு வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. வாடிக்கையாளர், இச்சேவையைப் பதிவு செய்ததும், தொடர்ந்து தனது பயர்வோலினை நிர்வகித்துக்கொள்ளமுடியும்" -என்றார்.

மேலும் ரெலிகொம் இன் நிர்வகிக்கப்பட்ட பாதுகாப்புச் சேவையில் அடங்கியுள்ளதான மூன்று உற்பத்திப் பொருள்களாக வணிகங்களின் வலையமைப்புக்களுக்கான பாதுகாப்பை வழங்கும் மனேஜ்ட் பயர்வோல், வணிகங்களின்வலையமைப்புக்களுக்கான கேற்வே மின்னஞ்சல் பாதுகாப்பை வழங்கும் 'ஈ-மெயில் செக்குறுட்டி', வணிகங்களின் வலையமைப்புக்களை 'டி.டி.ஓ.எஸ் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கும் டி.டி.ஓ.எஸ் புறொற்றெக்சன் சேவிஸ்' என்பன விளங்குகின்றமை நோக்கத்தக்கது. வாடிக்கையாளரின்இடத்தில்இருக்கும்இணையஇணைப்புமூலமாக மேற்போந்தஒவ்வொருஉற்பத்திப்பொருள்களையும் கண்காணிக்க முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

SLT




# 2015ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் 10.5 பில். ரூபா ஏலத்தைப் பெற்றுக்கொள்வதற்கு விலை மனுக்குழு தீர்மானித்ததாக தகவல்

## பிணைமுறி விநியோகம் தொடர்பான முரண்பாட்டை எழுத்துமூலம் முன்வைக்குமாறு ஜனாதிபதி ஆணைக்குழு உத்தரவு

சர்ச்சைக்குரியமுறிகள்விநியோகம்இடம்பெற்றதாகக்கூறப்படும் 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி மாலை வேளையில் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் மீண்டும் அரச கடன் திணைக்களத்திற்கு வருகைதந்ததாகஜனாதிபதிஆணைக்குழுமுன்னிலையில் சாட்சியங்கள் தகவல் அளித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதன்படி ஆளுநரின் ஆலோசனைக்கிணங்க பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி 10.5 பில்லியன் ரூபா ஏலத்தைப் பெற்றுக்கொள்வதற்குதீர்மானிக்கப்பட்டதாகவும்அதனை இறுதி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் விலைமனு சபைக்கு ஏற்பட்டதாகவும் ஆ. ஞு. ஆ. அசீம் சுட்டிக்காட்டியுள்ளார்.

மத்திய வங்கி முறிகள் விநியோகம் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் அரச கடன் திணைக்களத்தின் முன்னாள் உதவி அத்தியட்சகர் ஆ. ஞு. ஆ. அசீம் மூன்றாவது நாளாக சாட்சியம் அளித்தபோதே இந்த விடயங்களை அவர் தெரியப்படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

"ஏலத்தில் பெறப்பட்ட முறிகளின் பெறுமதி தொடர்பில் தீர்மானிக்கும் விலைமனுகுழுவின் கூட்டத்திற்கு முன்பாக அர்ஜுன் மகேந்திரன் வருகை தந்திருந்தார். ஏலத்தின் பின்பாக பிற்பகல் 12.30 மணி அளவில் அரச கடன் திணைக்களத்திற்கு வருகை தந்த ஆளுநர் அத்தியட்சகரிடம்ஏலம்தொடர்பானதகவல்களைக் கேட்டறிந்து கொண்டார். அதன்போது கிடைத்திருந்த அனைத்து விலைமனுக்களையும் பெற்றுக்கொள்ளு மாறு அவர் எங்களுக்கு ஆலோசனை வழங்கினார். இருந்தபோதும் அதனைப் பெற்றுக்கொள்ள நாங்கள் மறுத்தோம். இந்தசெயற்பாடுகள் பெரியவிளைவுகளை ஏற்படுத்தும்நிலை எனவும் இதனால் வட்டிவீதம்அதிகரிக்கக்கூடும்எனவும்ஆளுநருக்குஅறிவுறுத்தினோம். பின்னர் விலைமனு குழு கூடியதுடன் ஆளுநரின் பரிந்துரைகள் அங்கு கலந்துரையாடப்பட்டது. விலைமனு அடங்கிய முதல் ஆவணத்திற்குப் பதிலீடான இரண்டாவது மாற்றுஆவணம்விலைமனுகுழுவிடம்முன்வைக்கப்பட்டது. அத்துடன், விலைமனுகுழுவின்அப்போதையதலைவரான பீ.சமரசிங்க கூட்டம் நடைபெற்ற சந்தர்ப்பத்திலேயே சுமார் 45நிமிடங்கள்வரைதொலைபேசியில்ஆளுநரிடம்ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டார். ஆளுநரின் ஆலோசனை என்பதால் இறுதியில் அதனைப் பின்பற்ற வேண்டிய நிலை விலைமனு சபைக்கு ஏற்பட்டது. அதன்பிரகாரமே பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி 10.5 பில்லியன் ரூபா ஏலத்தைப்பெற்றுக்கொள்வதற்குதீர்மானிக்கப்பட்டது" -என்றார்.




இதேவேளை - கோப் குழு மற்றும்ஜனாதிபதிஆணைக்குழு ஆகியன முன்னிலையில் ஆ. ஞு. ஆ. அசீம் வழங்கிய சாட்சியங்களுக்குஇடையே முரண்பாடு காணப்படுவதாக பேர்ப்பச்சுவல் ட்ரஷரீஸ்நிறுவனத்தின் சட்டத்தரணிகள்விவாதித்துள்ளதாகக் கூறப்படுகிறது. அத்துடன் இந்த முரண்பாடுகளை எழுத்துமூலம்முன்வைக்குமாறு ஜனாதிபதி ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளமை நோக்கத்தக்கது.

> அரசகடன் வழங்கும் செயலாளரினால் 2015 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்படும் காலகட்டங்களுக்குரியதாக வெவ்வேறு வட்டி வீதங்களின் கீழ் 31 தடவைகள் முறை திறைசேரி உண்டியல்கள் விநியோகிக்கப்பட்டு கடன் பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கி வைக்கப்பட்டுள்ளதான சுட்டிக்காட்டல் பொறுப்புவாய்ந்த அதிகாரியொருவரின் கையொப்பம் இன்றி 2015 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி அவ்வேளையில் நிதி அமைச்சராக செயற்பட்ட மகிந்த ராஜபக்சவால் வெளியிடப்பட்ட 1895.19 என்பதான அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் அடங்கியுள்ளதாக நிதி அமைச்சு



# செய்யும் தொழிலே தெய்வம்

மதுரகவி
காரை எம்.பி. அருளானந்தன்

"ஓர் உண்மை ஊழியன் எந்தத் தொழிலைச் செய்தாலும் ஈடுபாட்டோடும், மகிழ்வோடும் பரோபகாரச் சிந்தையுடனும் தான் செய்வான், அத்தகைய மனோபாவத்தில் சாலையைப் பெருக்கினாலும், குப்பையைக் கூட்டினாலும், புல்லை வெட்டினாலும், பிறருக்காக உணவு சமைத்தாலும் அதில் மன மகிழ்ச்சியும், தெய்வத்துக்காகச் செய்யும் திருப்பணி என்ற மனோபாவமும் நிச்சயம் இருக்கும்."

புராதன காலத்தில் ஆன்மிகத்துக்கும் ஒழுக்கத்துக்கும் உலகத்துக்கே வழி காட்டியாக திகழ்ந்தவர்கள் சைவத் தமிழ்மக்கள். ஆனால், இன்று நம் வாழ்க்கை வழிமுறை மாறி விட்டது. இதற்கு எம்மில் பலர் எமது ஆன்மிக சக்தியையும், கலாசாரப் பெருமையையும் மறந்து விட்டதுதான் காரணம். கர்மம், பக்தி, ஞானம் இந்த மூன்றுமே கடவுளை அடையும் மார்க்கம். நாம் கர்ம யோகத்தையும், பக்தி யோகத்தையும், ஞான யோகத்தையும் மறந்துவிட்டு சுய நலத்தையும் சுயதேவைகளைப் நிறைவு செய்யும் ஆசைகளையும் பொருளீட்டும் விருப்பத்தையும் வளர்த்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதனால் இடர்களும் துன்பங்களும், நிம்மதியின்மையும்தான் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றன.

பொதுவாக அமைதியையும் பேரானந்தத்தையும், நிலையான மகிழ்ச்சியையும்தான் அனைவரும் விரும்புவோம். அது கிடைக்க வேண்டுமானால், சுயநலத்தை மறந்து, தியாக உணர்வை வளர்த்துக் கொண்டு, தன்னலமற்ற சேவை மனப்பான்மையினாலும், மனித நேயம் எனும் முழுமையான அன்பினாலும் எம் நாட்டின் பழங்கால பெருமையை மீண்டும் நிலை நாட்டச் செய்ய வேண்டும். பூமி சூரியனைச் சுற்றிவருவதுபோல, இன்றைய மனிதர்கள் பணத்தையும், செல்வத்தையும் சுற்றி வருகிறார்கள். இப்படிச் சுழலும்போது நாம் பிறந்ததன் நோக்கத்தையே மறந்து வாழ்கிறோம்.

"பரோபகாரம் இதம் சரீரம்" என்பது வேதவாக்கு. பிறருக்கு உதவி செய்வதற்காகத்தான் இந்த மானிடப் பிறப்பு நமக்குக் கிடைத்திருக்கிறது என்பது இதன் பொருள். எனவே பிறர் நன்மைக்காக சேவை செய்வதிலேயே உழைத்துக்கொண்டிருக்க வேண்டும். சோம்பேறித்தனம் என்பது துருப்பிடித்த இரும்புக்கும் தூசிக்கும் சமமானது. உழைப்பு என்பது எல்லாவற்றிலும் உயர்ந்தது. "வேலை அல்லது தொழில் என்று சொன்னால் அது இறைவனுக்குச் செய்யும் தொண்டாகும் (workisworship) அத்தகைய பணிகளில் ஒன்று உயர்ந்தது, மற்றது தாழ்ந்தது என்ற பேதமில்லை. எல்லாத் தொழில்களும் எல்லாப் பணிகளும் இறைவனின் சித்தத்தில் உருவானவைதான். அவற்றைப் நிறைவு செய்வது கடவுளின் ஆணைக்கு கீழ்ப்படிவது போலாகும்.

இறைவன் முழுமையானவன், இப்பரந்த உலகிலே சூரியனையும் நட்சத்திரத்தையும், கிரகங்களையும், மலைகளையும், நதிகளையும் மற்றும் புல், பூச்சி, பறவை, விலங்கு மனிதர்கள் ஆகிய உயிரினங்களையும் நாம் பல்வேறு பரிமாணங்களில் பார்த்தாலும் அவை அனைத்தும் ஒன்றே. அதில் நிறைந்திருப்பவன் இறைவன் ஒருவனே. இதையே" சர்வம் பிரம்மமயம். அதாவது எல்லாமே பிரம்மன் எனும் இறைவன் என்று குறிப்பிடுகின்றோம். சத்சித் ஆனந்தம் ஆகிய மூன்றின் மொத்த வடிவமே சத்தியம். அந்த நிலையான சத்தியமே இறைவன். இந்தத் தத்துவத்தைப் முழுமையாக நாம் உணரும் போதுதான் நாம் செய்யும் தொழிலே தெய்வம் என்ற தத்துவம் விளங்குகிறது.



செய்யும் தொழிலையே தெய்வமாகப் பாவிக்கும் மனப்பக்குவம் அடைவது எப்படி? என்ற கேள்வி எழலாம். ஓர் உண்மை ஊழியன் எந்தத் தொழிலைச் செய்தாலும் ஈடுபாட்டோடும், மகிழ்வோடும் பரோபகாரச் சிந்தையுடனும் தான் செய்வான், அத்தகைய மனோபாவத்தில் சாலையைப் பெருக்கினாலும், குப்பையைக் கூட்டினாலும், புல்லை வெட்டினாலும், பிறருக்காக உணவு சமைத்தாலும் அதில் மன மகிழ்ச்சியும், தெய்வத்துக்காகச் செய்யும் திருப்பணி என்ற மனோபாவமும் நிச்சயம் இருக்கும்.

பிரார்த்தனை வழிபாடு என்பது இறைவனிடத்திலும் அவன் படைத்த உயர் சக்திகளிடத்திலும் காட்டுகின்ற தூய்மையான அன்பாகும். இந்த அன்பு இல்லாவிட்டால், நாம் செய்யும் வழிபாடுகளும் வெறும் சடங்காகிவிடும். கடவுளிடத்தில் அன்பு செலுத்துவது வெகு சுலபம், அதனால் பிறருக்காகச் சேவை செய்வதை கடவுளுக்குச் செய்யும் திருப்பணியாகக் கருதுவதற்கு சிறந்த ஆன்மிகப்பலமும்,, வைராக்கியமும் வேண்டும்.

நீ விரும்புகின்ற தொழிலை செய்து, அதனால் மகிழ்ச்சியடைவது பெரிதல்ல. உனக்கு விதிக்கப்பட்ட தொழில் எதுவானாலும் அதனைச் செய்யும் பொழுது மன நிறைவும் மகிழ்ச்சியும் அடையவேண்டும். அப்பொழுது நீ செய்யும் தொழிலே தெய்வம் என்று உணர்வாய்

"சத்தியமே தெய்வம்" அன்பே தெய்வம் கடமையே தெய்வம், செய்யும் தொழிலே தெய்வம். கடவுளைக் காண முடியவில்லையே என்று நாம் ஏங்க வேண்டியதில்லை. சத்தியத்திலும், தூய அன்பிலும் நமது கடமைகளை நிறைவேற்றி நமக்கென விதிக்கப்பட்ட செயலை செய்து முடித்தால் கடவுளை நாம் காண முடியும்.

தொழிற்சாலைகள், வியர்வை சிந்த பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்யும் தொழிற்கூடங்களிலெல்லாம் இறைவன் இருக்கின்றான் என்று எண்ணுங்கள். அப்போது பார்க்குமிடங்களிலெல்லாம் செய்யும் தொழில்களிலெல்லாம் நோக்கும் திசைகளிலெல்லாம் தெய்வம் இருக்கும் எனபதை பிரத்யட்சமாகக் காணலாம்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அவமாகிவிடுமாமனிதஉரிமை ஆணையாளரின் பரிந்துரை?

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் சையிட் அல் ஹுசைன் இலங்கையில் நடந்துமுடிந்த போரின் இறுதிக்கட்டத்தில்இடம்பெற்றதாகக்கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு பன்னாட்டுநீதிபதிகளையும்உள்ளடக்கியகலப்புநீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்ற பரிந்துரையை மீண்டும் ஒரு முறை வலியுறுத்தியிருக்கிறார். 2015ஆம் ஆண்டு இலங்கை தொடர்பாகமனிதஉரிமைகள்சபையில்நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பரிந்துரைகள் முழுமையாக இலங்கையினால் செயற்படுத்தப்படாமையைக் கருத்திற் கொண்டே ஆணையாளரினால்இந்தப்பரிந்துரைமீண்டும்வலியுறுத்தப்பட்டுள்ளது.

அன்றைய தீர்மானமானது இலங்கையின் இணை அனுசரணையுடன் மனித உரிமைகள் சபையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட போது அரச தலைவராக மைத்திரிபால சிறிசேனதான் பதவியில் இருந்தார். ரணில் விக்கிரமசிங்கதான் தலைமை அமைச்சராக இருந்தார். அரசின் முக்கிய இவ்விரு தலைவர்களுக்கும் தெரியாமல் அல்லது அவர்களை ஓரங்கட்டி விட்டு அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை. ஆனால் தீர்மானத்தை இணைந்து நிறைவேற்றிவிட்டு, அதனை நிறைவேற்றப் பின்னடிப்பதானது இலங்கை மீதான பன்னாட்டின் மதிப்பை உயர்த்துவதாய் இருக்கும் என்று சொல்ல முடியாது.

கலப்பு நீதிமன்றம் ஒன்றை நிறுவ வேண்டும் என்ற ஆணையாளரின் பரிந்துரையைத் தாம் நிராகரித்ததன் மூலம் பன்னாட்டுச் சமூகத்துக்கு தமது முதுகெலும்பைக் காட்டியிருப்பதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அண்மையில் நடைபெற்றசிறிலங்காசுதந்திரக்கட்சியின்நிறைவேற்றுக்குழுவில் தெரிவித்துப் பெருமைப்பட்டிருக்கிறார். ஆனால், இது நடந்த அடுத்த கட்டமாக ஆணையாளரின் அதே பரிந்துரை மீண்டும்வெளியாகியிருப்பதுகுறிப்பிடத்தக்கது. முன்னைய தீர்மானத்தில் பரிந்துரைக்கப்பட்ட அனைத்து விடயங்களோடு வேறு சில பரிந்துரைகளையும் அவர் இந்த முறைதமது பரிந்துரைகளில்இணைத்திருப்பது கவனத்துக்குரியது. ஐ.நா.மனித உரிமைகள் சபையின் அலுவலகம் ஒன்றை இலங்கையில் அமைத்து மனித உரிமைகள் நிலைமையைக் கண்காணிப்பதற்கு இலங்கை வழி செய்ய வேண்டும் என்பது அதில்ஒன்று. இதுவும்கூட இலங்கையின்உள்விவகாரங்களில் பன்னாட்டுச் சமூகம் தலையிடும் முயற்சி என்று கூறப்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வெளிநாட்டு நீதிபதிகளை விசாரணைகளில் இணைத்துக் கொள்வதற்குஇலங்கைச்சட்டங்களில்இடமில்லையென்று கூறப்படுவதைக் கவனத்தில் கொண்டுள்ள ஆணையாளர், மனித உரிமை மீறல்கள் தொடர்பாகக் கலப்பு நீதிமன்றப் பொறி முறையின் ஊடாக வெளிநாட்டு நீதிபதிகள், விசாரணையாளர்கள், வழக்குரைஞர்களைஉள்ளடக்கிவிசாரணை நடத்தப்படுவதற்காகச் சட்டங்களை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும் என்று யோசனை முன்வைத்துள்ளார்.

அடுத்துவரும் நாள்களில் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான விவாதம் காரசாரமாக இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. வழங்கப்பட்ட இரண்டு வருட அவகாசத்தில் இலங்கை அரசு தீர்மானத்தை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டவில்லையென்ற விடயம் பெரிதாக அலசப்படும் என்று எதிர்பார்க்கலாம். அந்த நிலமையையே ஆணையாளரின் அறிக்கையும் விரிவாக எடுத்துக் காட்டியுள்ளது. இந்த நிலையில் மேலும் அவகாசம் அளிக்கப்படுமானால் ஏற்படக் கூடிய பாதகமான நிலமை பற்றி ஆராயப்படுவது அவசியம். ஏற்கனவே வழங்கப்பட்ட அவகாசத்தில் கலப்பு நீதிமன்றப் பரிந்துரையை நிராகரிப்பதற்காகவே இலங்கை அரசு அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்து வந்துள்ளது என்பது வெளிப்படை. இனிமேலும் அவகாசம் வழங்கப்படுவதானது உள்ளக விசாரணைப் பொறிமுறையையும்கூட இலகுவாக கைவிடுவதற்கானசந்தர்ப்பமாக இலங்கை அரசு பயன்படுத்திக் கொள்ளக் கூடும் என்பதை அலட்சியப்படுத்திவிடலாகாது.

பன்னாட்டு மட்டத்தில் டொனால்ட் ட்ரம்பின் _ அமெரிக்காவின் புதிய அரசு, மே அம்மையாரின் பிரிட்டன் அரசு மற்றும் நரேந்திரமோடியின் இந்திய அரசு ஆகிய முக்கிய நாடுகளைத் தனக்குச் சாதகமாக வளைத்து வைத்துக் கொண்டுள்ள இலங்கை அரசு, மனித உரிமைகள் சபையின் அடுத்த தீர்மானத்தைத் தனக்குச் சாதகமாக நிறைவேற்றிக் கொள்ள பகீரத பிரயத்தனம் செய்துவருவது தெரிந்த விடயமே. இருந்தாலும் கடந்த இரண்டு வருடகாலமாக இலங்கையின் மனித உரிமைச் செயற்பாடுகளை மிக உன்னிப்பாக அவதானித்து வந்துள்ள மனித உரிமை ஆணையாளர் முன்வைத்துள்ள கருத்துக்களும் பரிந்துரைகளும் அவமே போய்விட முடியாது. போய்விடாது என்பதே எமது நம்பிக்கை.

# வடக்கும் கிழக்கும் இணைவது காலத்தின் கட்டாயம்


■ சேரலாதன்

வடக்கிலும், கிழக்கிலும் வாழ்கின்றதமிழ், முஸ்லிம் மக்கள்ஒன்றிணைவதன்மூலமே அதியுச்ச அதிகாரப் பகிர்வைப் பெற்றுக் கொள்ள முடியுமென கிழக்குமாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அகமட் கருத்து வெளியிட்டுள்ளார். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இணைப்புத் தொடர்பாகக் கிழக்கு மாகாண முதலமைச்சருடன் பேசுவதற்குத்தாம்தயாராகஇருப்பதாகவடக்குமாகாண முதலமைச்சர்தெரிவித்த நிலையிலேயே கிழக்கு மாகாண முதலமைச்சரின் இந்தக் கருத்தும் வெளியாகியுள்ளது.

வடக்கும், கிழக்கும் எந்த நிலையிலும் பிரிக்கப்பட முடியாத தமிழர்களின் தாயக நிலப்பரப்பு என்பது தமிழர்களின் உறுதியான நிலைப்பாடாகும். 1987 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இந்திய-இலங்கை உடன்படிக்கையின் பிரகாரம் வடக்குக்கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்டன. இரண்டு மாகாணங்களுக்கும் பொதுவானதொரு மாகாணசபையும் உருவாக்கப்பட்டது. ஆனால் இரண்டு மாகாணங்களும் இணைக்கப்பட்டமை சட்டத்துக்கு விரோதமானதெனக் கூறித் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் இணைப்புக்குஎதிரான தீர்ப்பை வழங்கியது. நீதியை வழங்குவதில் வல்லவரான அப்போதைய தலைமை நீதியரசர்



“வடக்கும், கிழக்கும் எந்த நிலையிலும் பிரிக்கப்பட முடியாத தமிழர்களின் தாயக நிலப்பரப்பு என்பது தமிழர்களின் உறுதியான நிலைப்பாடாகும். கடந்த 1987 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்டன. இரண்டு மாகாணங்களுக்கும் பொதுவானதொரு மாகாணசபையும் உருவாக்கப்பட்டது. ஆனால் இரண்டு மாகாணங்களும் இணைக்கப்பட்டமை சட்டத்துக்கு விரோதமானதெனக் கூறித் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் இணைப்புக்கு எதிரான தீர்ப்பை வழங்கியது.



சரத் என் சில்வாவே இந்தத் தீர்ப்பையும் வழங்கினார்.

இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளின் தலைவர்கள் ஒப்பமிட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இணைக்கப்பட்ட இரண்டு மாகாணங்களும் உயர் நீதிமன்றத் தீர்ப்பின் மூலமாகப் பிரிக்கப்பட்டமை இலங்கையின் நீதித்துறையின் நேர்மையான செயற்பாட்டுக்கு ஓர் உதாரணமாகும். ஆனால் இந்தத் தீர்ப்புத் தொடர்பாக இலங்கையரோ அல்லது இந்திய அரசோ அவ்வேளையில் அலட்டிக் கொள்ளவேயில்லை. கிழக்கு மாகாணத்தில் உள்ள மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் பெரும்பான்மையின மக்களின் அத்துமீறிய குடியேற்றங்கள் அண்மைக் காலமாக மிகப் பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இதனால் தமிழ், முஸ்லிம் மக்கள் தமது காணிகளை இழந்து வருகின்றனர். இதைத் தடுப்பதற்கு எவருமில்லாததால் நிலைமை மேலும் மேலும் மோசமாகி வருகின்றது. காணி, பொலிஸ் அதிகாரங்கள் கொழும்பு அரசின் வசமே உள்ளதால் இந்த விடயத்தில் மாகாணசபையால் கையைக்கட்டிக்கொண்டுவேடிக்கை பார்க்கவே முடிகின்றது.

**திட்டமிட்ட குடியேற்றங்கள் ஏற்படுத்திய பாதிப்பு**

கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழ்ந்த காலம் ஒன்றிருந்தது. ஆனால் இனவாத அரச தலைவர்களின் திட்டமிட்ட குடியேற்றத் திட்டங்கள் காரணமாகவும், போரினால் ஏற்பட்ட இடப் பெயர்வுகளாலும் தமிழர்களும், முஸ்லிம்களும், சிங்களவர்களுக்கு அடுத்த நிலையை நோக்கித் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதனால் பல்வேறு கட்டமைப்புக்களில் மட்டுமன்றி, மக்களால் தெரிந்தெடுக்கப்படுகின்ற பிரதிநிதிகளின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்படுமாயின் தமிழர்களே பெரும்பான்மையினராக இருப்பார்கள். ஆனால் இதிலும் சிக்கல் இல்லாமலில்லை. இணைந்த வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழர்கள் ஆதிக்கம் செலுத்துவதை இனவாதிகள் ஒருபோதுமே விரும்பமாட்டார்கள். இது தனிநாட்டுக்கு வழிவகுத்துவிடுமென அவர்கள் தேவையற்ற வகையில் அஞ்சுகின்றனர். இதேவேளை வடக்கும், கிழக்கும் இணைக்கப்பட்டுவிட்டால் முஸ்லிம் மக்கள் சிறுபான்மையினராகி விடுவார்கள் எனச் சில முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் மக்களிடையே பரப்புரை செய்து வருகின்றனர். கிழக்கு மாகாணம் தனித்திருந்தால்தான் தாம் அதிகாரம் கொண்டவர்களாக விளங்க முடியுமென்பது இவர்களது கருத்தாகும்.

தமிழர்களும், முஸ்லிம்களும் இன ரீதியாக வேறுபட்டாலும் மொழியால் ஒன்றுபட்டவர்கள். அரசியல் ரீதியில் கூட இவர்கள் ஒன்றிணைந்து செயற்பட்ட காலம் ஒன்றிருந்தது. தந்தை செல்வா தமிழர்களையும், முஸ்லிம்களையும் ஒரு போதுமே பிரித்துப் பார்க்கவில்லை. முஸ்லிம்களும் செல்வாவை தமது அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டிருந்தனர். ஆனால் இன்று அவ்வாறானதொரு நிலை காணப்படவில்லை. முஸ்லிம் மக்கள் தமது வசதிக்கு ஏற்றவாறு அரசியல் கட்சிகளைத் தேர்ந்தெடுத்துவிட்டனர். ஆனால் மறைந்த தலைவர் அஷ்ரப்பினால் முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவென ஆரம்பிக்கப்பட்டு வீறுநடை போட்டு வந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்று பலதுண்டுகளாகச் சிதறுண்ட நிலையில் காணப்படுகின்றது. முஸ்லிம் காங்கிரஸ் கூட உட்கட்சிப் பூசல்களால் திணறி வருகின்றது. அந்தக் கட்சியின் தலைவரான ரவூப் ஹக்கீம் கிழக்கு மாகாண மக்களின் உணர்வுகளை மதிக்காது தன்னிச்சையாகச் செயற்படுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் உண்டு.

**வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம்களின் ஒன்றிணைவு அவசியம்**

இந்த நிலையில் வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானால், அவர்கள் ஒன்றிணைந்து செயற்படுவது நன்மை பயக்கும். வடக்குக் கிழக்கில் இந்த இரண்டு இனத்தவர்களும் பெரும்பான்மையாக உள்ள போதிலும் நாடு முழுவதிலும் பார்க்கும்போது 25 வீதத்துக்கும் குறைவானவர்களாகவே காணப்படுகின்றனர். வடக்குக் கிழக்கிலும் பெரும்பான்மையின மக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கின்ற செயற்பாடுகள் முழுவீச்சில் இடம்பெற்று வருகின்றன. தமிழர் பகுதிகளில் புத்தர் கோயில்கள் மழைக்காளான்கள் போன்று முளைத்து வருகின்றன. தனியார் காணிகள் என்ற வேறுபாடுகூட இல்லாது இத்தகைய வணக்கத்தலங்கள் அமைக்கப்பட்டு வருகின்றமை, எதிர் காலத்தில் பெரும்பான்மையின பௌத்த மக்களின் குடியேற்றங்கள் நிறுவப்படப் போவதற்கு கட்டியம் கூறுவது போன்று அமைந்துள்ளது.

தமிழர்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான போராட்டங்களில் முஸ்லிம் மக்களின் பங்களிப்பு மிகக் குறைவாகவே இருந்ததாகக் குற்றச்சாட்டுக்கள் எழாமலில்லை. இது முஸ்லிம் தலைவர்களுக்கும் தெரிந்த விடயம்தான். ஆனால் இவற்றையெல்லாம் மறந்துவிட்டுவடக்குக்கிழக்குஆகியஇரண்டு மாகாணங்களும் ஒன்றிணைய வேண்டும்என்றகருத்துதமிழ்த் தலைவர்களிடையே எழுந்துள்ளது. இதனையே வடக்கு முதலமைச்சரும் பிரதிபலித்துள்ளார்.

சுயநலப்போக்கான சிந்தனைகளைக் கைவிட்டுவிட்டு வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் மக்கள் சிந்திக்க வேண்டிய தருணம் இது தான். ஆபத்து வாயிற்கதவைத் தட்டிக் கொண்டிருக்கும் நிலையிலும், இவர்கள் விழிப்படையத் தவறுவார்களானால் எதிர்காலச் சந்ததியினர் பெரும்இன்னல்களுக்குமுகம்கொடுக்க வேண்டியதொரு நிலை உருவாகும். அதனை இவர்கள் மறந்து விடக்கூடாது

> கிழக்கு மாகாணத்தில் உள்ள மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் பெரும்பான்மையின மக்களின் அத்துமீறிய குடியேற்றங்கள் அண்மைக்காலமாக மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இதனால் தமிழ், முஸ்லிம் மக்கள் தமது காணிகளை இழந்து வருகின்றனர். இதைத் தடுப்பதற்கு எவருமில்லாததால் நிலமை மேலும் மேலும் மோசமாகி வருகின்றது. காணி, பொலிஸ் அதிகாரங்கள் மத்திய அரசின் வசமே உள்ளதால் இந்த விடயத்தில் மாகாணசபையால் கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்க்கவே முடிகின்றது.



# வாசகர் திருமுகம்

## தமிழ் மக்களது சிரமத்திலும் அரசியல் இலாபம் தேடுவது தகுமா?

முல்லைத்தீவு பிலக்குடியிருப்பு மக்கள், படையினரது கட்டுப் பாட்டில் இருந்த தமது சொந்தக் காணிகளை விடுவிக்கக் கோரி அறவழிப் போராட்டத்தை முன்னெடுத்தமை அனைவரும் அறிந்த விடயமே. 30 நாள்களாகப் பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் மனம் தளராது ஒற்றுமையுடன் அவர்கள் முன்னெடுத்த அந்தப் போராட்டம் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் முஸ்லிம் மக்களது பேராதரவை ஈட்டியிருந்தது. அவர்களது நியாயமான கோரிக்கைக்குத் தமிழ், முஸ்லிம் சமூகத்தினர் மத்தியில் இருந்து மட்டுமன்றி தென்பகுதி சிங்கள மக்கள் பலரது ஆதரவும் கிட்டியிருந்தது. அரசியல் தலைவர்களது "சமாளிப்பு" வாக்குறுதிகளை நம்பி ஏமாறாமல் தமது போராட்டத்தில் வெற்றிபெறும் வரை தொடர்ந்து போராடுவது என்ற மன உறுதியுடன் அவர்கள் பல்வேறு சிரமங்களையும் தாங்கிக் கொண்டு தமது முயற்சியைத் தொடர்ந்து முன்னெடுத்தனர். இது விடயத்தில் அரசியல் வாதிகள் அரசியல் இலாபம் தேடிக் கொள்ள முயலக் கூடுமெனக் கருதிய அவர்கள் அரசியல் வாதிகளது தலையீட்டையும் முடிந்தவரை புறக்கணித்தனர். கடைசியில் அவர்களது மன உறுதிக்கு முன்னால் எதுவும் செய்ய இயலாது. அரச இயந்திரம் அவர்களது காணிகளை விடுவித்தமை அவர்களது மனஉறுதிக்குக் கிடைத்த வெற்றியே.

பொது மக்களது எந்தவொரு சிரமங்களிலும் அரசியல் இலாபம் தேடிக்கொள்ள முயலும் போக்குடைய எமது அரசியல் வாதிகள் இந்த விடயத்திலும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது தலையீட்டால் தான் அரச இயந்திரம் காணி விடுவிப்பை மேற்கொண்டதாகக் காட்டிக் கொள்ள முயன்றுள்ளனர்.

தமிழ் மக்கள் பேரவை கேப்பாப்பிலவு தொடர்பில் கூட்டம் நடத்தப் போகிறது என அறிந்தே அரசு பொதுமக்களது காணிகளை விடுவிக்க இணங்கியது எனத் திருவாய் மலர்ந்தருளியுள்ளார் தமிழ்த்தேசியமக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார்.

இதற்கு ஒரு படிமேலாகச் சென்று பொருத்து வீட்டு அமைச்சரோ, தாம் இந்த விடயத்தை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்றதாலேயே காணி விடுவிப்பு சாத்தியமான தாக 'குறளி' விட்டுள்ளார்.

ஈழத்தமிழ் மக்கள் நாட்டின் அரசியல் நகர்வுகள் குறித்து எதுவும் தெரியாத 'பபாக்கள்' என்ற எண்ணத்திலா இவர்களெல்லாம் இந்த விதம் 'கயிறு' விட்டு வருகிறார்கள்? மொத்தத்தில் இவைகள் ஒரு விதத்தில் வழியில் தேங்காயை எடுத்து தெருவடிப்பிள்ளையாருக்கு உடைத்த கதையை ஒத்ததே.

*ப. பரமலிங்கம்*
*கிளிநொச்சி*

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?




**மேடம்:** குடும்பத்தில் பணத்தேவை அதிகரிக்கும். தகுதிக்கு மீறி, எவருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேற்றுவது நல்லது. லாபம் சுமாராக இருக்கும்.


**இடபம்:** நீண்ட நாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். நண்பர்களால் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பெண்கள், உறவினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வர்.


**மிதுனம்:** கௌரவத்துக்காக பணம் செலவழிக்க நேரிடும். தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் ஆதரவுடன் சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள் குடும்ப நலனுக்காக பாடுபடுவர்.


**கடகம்:** மனதில் அமைதி நிலைத்திருக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். சேமிக்கும் விதத்தில் ஆதாயம் கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.


**சிங்கம்:** தன்னம்பிக்கையுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். பெண்களால், குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும்.


**கன்னி:** நல்லவர்களின் ஆலோசனை கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். லாபம் சீராக இருக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய பணிமாற்றம் கிடைக்கும்.


**துலாம்:** நண்பரின் பேச்சால் சங்கடத்துக்கு ஆளாவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமையைத் திறம்பட சமாளிப்பர். பெண்கள் குடும்ப வளர்ச்சிக்காகப் பாடுபடுவர்.


**விருச்சிகம்:** எதிர்கால வளர்ச்சி குறித்து திட்டமிடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர். பெண்களின் தேவை தாராள பணச் செலவில் நிறைவேறும்.


**தனுசு:** பேச்சில் இனிமை நிறைந்திருக்கும். தொல்லை கொடுத்தவர் இடம் மாறுவர். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். அரசு வகையில் உதவி கிடைக்கும்.


**மகரம்:** முக்கியப் பணி நிறைவேற தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள், கணவரின் அன்பைப் பெற்று மகிழ்வர்.


**கும்பம்:** மனதில் நேர்மை எண்ணம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு, சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.


**மீனம்:** குடும்ப பிரச்சினைக்கு சுமுகத்தீர்வு கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் நன்மதிப்பை பெறுவர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | | 6 | 8 |
| | | | | 2 | 8 | | 7 | 5 |
| | | | | 5 | | 4 | | |
| | | 9 | | 8 | | | 5 | 1 |
| | 8 | | | | 9 | | 4 | |
| 3 | 1 | | | | 5 | 9 | 8 | |
| | | 4 | | 7 | | | | |
| 1 | 3 | | 8 | 9 | | | 2 | |
| 6 | 2 | | 5 | | | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 9 | 4 | 2 | 6 | 7 | 3 | 8 |
| 7 | 3 | 4 | 1 | 8 | 9 | 2 | 5 | 6 |
| 8 | 6 | 2 | 3 | 7 | 5 | 4 | 1 | 9 |
| 9 | 5 | 1 | 6 | 4 | 7 | 3 | 8 | 2 |
| 3 | 8 | 6 | 2 | 5 | 1 | 9 | 7 | 4 |
| 4 | 2 | 7 | 9 | 3 | 8 | 5 | 6 | 1 |
| 6 | 7 | 8 | 5 | 9 | 2 | 1 | 4 | 3 |
| 1 | 9 | 3 | 7 | 6 | 4 | 8 | 2 | 5 |
| 2 | 4 | 5 | 8 | 1 | 3 | 6 | 9 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.












**இந்திரா** @mokkaigal
எத்தனை பேரைக் கடந்தாலும், நினைத்துப் பெருமூச்சுவிட ஆயுளுக்கு ஒரு காதல் இருக்கிறது எல்லோருக்கும்...
44 38

# யுவன் ஷங்கர் ராஜாவின் அடுத்த அதிரடி!

வெற்றிவேல் சரவணா சினிமாஸ் சார்பில் எம்.வெள்ளைப்பாண்டியன் மற்றும் பிக் பிரிண்ட் பிச்சர்ஸ்- ஐ.பி.கார்த்திகேயன் இணைந்து தயாரித்து இருக்கும் திரைப்படம் 8 தோட்டாக்கள். இயக்குநர் மிஷ்கினின் உதவியாளரான ஸ்ரீ கணேஷ் இயக்கி வரும் 8 தோட்டாக்கள் படத்தில் புதுமுகம் வெற்றி மற்றும் அபர்ணா, பாலமுரளி முன்னணி கதாப்பாத்திரங்களிலும், நடிகர்கள் நாசர், எம்.எஸ்.பாஸ்கர், அம்மா கிரியேன்ஸ் டி. சிவா, மைம் கோபி மற்றும் மீரா மிதுன் ஆகியோர் முக்கிய கதாப்பாத்திரங்களிலும் நடித்திருக்கின்றனர். கே.எஸ்.சுந்தரமூர்த்தி இசையமைத்து இருக்கும் இந்தப் படத்தின் பாடல்கள் உரிமையை, தற்போது யு 1 ரெக்கார்டஸ் நிறுவனத்தின் சார்பில் யுவன்ங்கர் ராஜா வாங்கி இருப்பது ஒட்டுமொத்த திரையுலகிலும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது.
இதுகுறித்து யுவன் கூறியதாவது: ‘8 தோட்டாக்கள் படத்தின் பாடல்கள் எனக்கு மிகவும் பிடித்துவிட்டன. இசையமைப்பாளர் கே.எஸ்.சுந்தரமூர்த்தி மற்றும் ஒட்டுமொத்த படக்குழுவினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். தரமான பாடல்களை இசை பிரியர்களுக்கும், ரசிகர்களுக்கும் வழங்க வேண்டும் என்பது தான் யு 1 ரெகார்ட்ஸ் நிறுவனத்தின் முக்கியமான குறிக்கோள். அந்த வகையில் இந்த ‘8 தோட்டாக்கள் படத்தின் பாடல்கள் நிச்சயமாக ரசிகர்கள் விரும்பிக் கேட்கும்படி இருக்கும் - என்றார்.



2017

# மார்ச் மாதப் பலன்கள்



## சிம்மம்

மகம், பூரம். உத்திரம்1ம் பாதம்

சிம்ம ராசி நேயர்களே! பிறர் பழிச் சொற்களுக்கு செவி சாய்க்காமல் தனது விடாமுயற்சியால் பல சாதனைகளைச் செய்யும் ஆற்றல் கொண்ட உங்களுக்கு சமசப்தம ஸ்தானமான 7இல் சூரியன், 8இல் சுக்கிரன் சஞ்சரிப்பதால், உடனிருப்பவர்களே உங்களுக்கு நெருக்கடிகளைத் தருவார்கள். குரு பகவான் வக்கிர கதியில் சஞ்சரிப்பதால், நியாயப்படி உங்களுக்கு வரவேண்டிய பணவரவுகள் கூட தாமதமாகும். பொருளாதார ரீதியாக தட்டுபாடுகள் உண்டாகும். குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. உற்றார், உறவினர்களின் வருகை வரவுக்கு மீறிய செலவுகளை உண்டாக்கும். உங்கள் முன்கோபத்தைக் குறைத்துக்கொண்டு, பேச்சில் நிதானத்தைக் கடைபிடித்தால் எடுக்கும் எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிக்க முடியும். திருமண சுபகாரிய முயற்சிகளில் தடை-தாமதம் உண்டாகும். உத்தியோகத்தர்கள் எந்த வேலையையும் சிரமப்பட்டே முடிக்க வேண்டியிருக்கும். தேவையற்ற பயணங்களால் அலைச்சல் அதிகரிக்கும். கொடுக்கல்-வாங்கலிலும் பிரச்சினைகள் உண்டாகும். தொழில் வியாபாரம் செய்பவர்களுக்கு எதிர்பார்த்த கடனுதவிகள் கிடைப்பதில் காலதாமதமாகும்.

**பரிகாரம்:**
விநாயகர் மற்றும் முருகப் பெருமானை தரிசனம் செய்வது நல்லது.

# குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்படுவதற்கு முக்கிய காரணங்கள்

குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்படுவதற்கு முக்கிய காரணங்கள் எவை என்பதைமுதலிலேயேசுூர்ந்து கவனித்துக்கொண்டால், அந்தப்பிரச்சினைகளை எளிதில் சமாளிக்க முடியும்.

வாழ்க்கையை ரசிக்கத் தெரியாத சிலர், தங்கள் வாழ்க்கையை பிரச்சினைகள் மிகுந்ததாக மாற்றிக்கொள்கிறார்கள். வாழ்க்கையின் நெறிமுறைகளைப் பின்பற்றி முறையாக தங்கள் குடும்பத்தை வழிநடத்த இயலாதவர்களுக்கு, வாழ்க்கை என்பது பெரும் போராட்டக்களமாக மாறிவிடுகிறது. இதனால், அவர்கள் வாழும் குடும்பத்தில்கூட பல்வேறு பிரச்சினைகள் நாளும் முளைக்கத் தொடங்கி விடுகின்றன.

எனவே, குடும்பத்தில்பிரச்சினைகள் ஏற்படுவதற்கு முக்கிய காரணங்கள் எவை என்பதைமுதலிலேயேசுூர்ந்துகவனித்துக்கொண்டால், அந்தப்பிரச்சினைகளை எளிதில் சமாளித்துக்கொள்ளும் திறமையை வளர்த்துக்கொள்ளலாம்.

வாழ்க்கையில் ஏற்படும் குடும்பப் பிரச்சினைகளை கையாள உதவும் சில வழிமுறைகளை 'குடும்ப உறவு' பற்றி ஆய்வு மேற்கொண்ட ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவற்றுள் சில:



1. உங்கள் குடும்பத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள்எவைஎன்பதைமுதலில்அடையாளம் கண்டுகொள்ளுங்கள். பின்னர், உடல் நலம், நிதி, உறவு, நட்பு, கல்வி, வேலை என வெவ்வேறு தலைப்புகளின்கீழ் அந்தப் பிரச்சினைகளை வகைப்படுத்துங்கள். உங்கள் பிரச்சினை எந்த வகையோடு தொடர்புள்ளது என்பதை தெளிவாகத் தெரிந்துகொண்டால், அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பது எளிதாகும்.
2. நீங்கள் மிகவும் பதற்றமாக இருக்கும்போது உங்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சி செய்யாதீர்கள். கட்டுப்பாடற்ற உணர்வுகளின் பிடியில் சிக்கி, நீங்கள் தவிர்க்கும்போது பிரச்சினைக்கு சரியான தீர்வைக் காண முடியாது. ஏனென்றால், உங்களின் வலி மிகுந்த உணர்வுகள் உங்களுக்கு சிறந்த தீர்வைத்தர அனுமதிக்காது. *(தொடரும்)*



நெற் மற்றும் வெல்வெற் துணிகள் இணைந்த வகையிலான பஞ்சாபிகள் தற்போது சந்தைக்கு வந்துள்ளன. இவற்றில் கற்கள்பதித்தும்காணப்படுகின்றன.
இவை 11 ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

**இது புதுசு**






## நாளை

**மாசி-23**

செவ்வாய்க்கிழமை -07.03.2017
திதி: தசமி பி.இ. 01.51
நட்சத்திரம்: திருவாதிரை மு.இ.08.07
சுபநேரம்:10.55-12.25 வரை
ராகுகாலம்:03.25-04.55 வரை

## வரலாற்றில் இன்றைய தினம்

1521-போர்த்துக்கேயமாலுமிபேர்டினன்ட்மகலனால்குவாம்கண்டுபிடிக்கப்பட்டது.
1886 - அமெரிக்காவின் முதலாவது தாதியர்சஞ்சிகைநைற்றிங்கேள் நியூயோர்க்கில் வெளியிடப்பட்டது.
1921 - முழங்காலுக்குக்கீழ் 4 அங்குலமேனும் நீளம்கெண்டதாகபெண்கள்பாவாடைஅணிய வேண்டுமென பென். சண்பெரி பொலிஸார் உத்தரவு பிறப்பித்தனர்.
1924 - பிரித்தானியா தொழிலாளர் கட்சி அரசால், இராணுவ நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டது.
1929-துருக்கியும், பல்கேரியாவும்நட்புறவுஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.
1933-அமெரிக்காவில் அதிபர் பிராங்ளின் டி.ருஸ்வெல்பால் நாடு தழுவிய வங்கி விடுமுறை பிரகடனப் படுத்தப்பட்டது.
1940-நியூயோர்க்நகரில்முதல்முறையாகவிமானமொன்றிலிருந்து தொலைக்காட்சி ஒளிபரப்பு நடத்தப்பட்டது.
1944-பேர்ளின் மீதான பகல் நேர குண்டுவீச்சை, அமெரிக்க விமானப் படை மேற்கொண்டது.
1957 - ஐக்கிய ராச்சியத்திடமிருந்து சுதந்திரத்தை கானா பிரகடனப் படுத்தியது.
1985-'நானும்அரசனும்'எனும்நாடகத்தில்4500 தடவையாகதோன்றினார் நடிகரானபுல்பிறைனர்.
1992-மைக்கல்ஏஞ்சலோஎனும்வைரஸ்கணினிகளைத் தாக்கத்தொடங்கின.
1997-லண்டன் கலரியிலிருந்து பிக்காஸோவின் ரெற் டி பெம் எனும் ஓவியம் திருட்டப்பட்டது. ஒரு வாரத்தின் பின்னர் அது கண்டுபிடிக்கப்பட்டது.
2012- ஆஸ்திரேலியா வாக்ஸா வக்காவிலிருந்து 9000 குடிமக்கள் மரிம்பிட் கி ஆறு பெருக்கெடுத்ததையடுத்து வெளியேற்றப்பட்டனர்.
2014-ரஷ்யாவின் ஒருபகுதியாக இருப்பதற்குகிரிமியா நாடாளுமன்றம் ஏகமனதாக தீர்மானித்தது.
1988 - திருகோணமலைப் பகுதியில் மாகாணப் பொலிஸ் படை மே மாதம் இயங்கத் தொடங்கும் என பிரதிப் பொலிஸ்மா அதிபர் டபிள்யு. பி ராஜகுரு தெரிவிப்பு.
1988-புதியநாடாளுமன்றில், 225நாடாளுமன்ற உறுப்பினர்கள்; பிரதமர் பிரேமதாஸா தலைமையிலான குழு பரிந்துரை.
1988 - விமானப் படையினரால் 2 தமிழர் சுட்டுக் கொலை
2002 - குடாக்கடலில் புலிகள் _ படையினர் உல்லாசப் பயணம்.
2002-செல்வாவுடனான ஒப்பந்தத்தைக் கிழித்ததால், பிரபாவுடன் உடன்படிக்கை செய்யும் நிலையென நாடாளுமன்றில் பத்தேகம தேரர் ஆதங்கம்.
2007 - அரசு _ புலிகள் உடன்படிக்கையை நிராகரிக்க கோரும் மனு தள்ளுபடி; மேன் முறையீட்டு நீதிமன்றம் வரலாற்றுத் தீர்ப்பு.
2007 - எரிந்து கருகிய நிலையில், காணப்பட்ட 5 சடலங்கள் கடத்தப்பட்டு, காணாமற்போன தமிழர்களின் சடலங்களாக இருக்கலாமென மனித உரிமை அமைப்பினர் சந்தேகம்.
2008-யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசன்கிளைமோர்தாக்குதலில் உயிரிழந்தார்; ஆழ ஊடுருவும் படைமீது குற்றச் சாட்டு.
2008-பரப்பான்கண்டல்முழுமையாகமீட்கப்பட்டதாக இராணுவம் அறிவிப்பு.

# மரண அறிவித்தல்



## தவத்துரை ஹரிசன்

**(யா/ சென் ஜோன்ஸ் கல்லூரி தரம் - 8 மாணவன்)**

யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தவத்துரை ஹரிசன் 04.03.2017 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தவத்துரை (வேந்தன்) - லோகநாயகி தம்பதியரின் அன்பு மகனும் மதுராங்கினியின் (யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) அன்புச் சகோதரனும் விஜயரட்ணம். பத்மராஜா. ஜெயரத்தினம். தம்பிமுத்து. சிவநாயகி. லோகேஸ்வரி. செல்வி. தவமணி ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சபாநாயகி மற்றும் தனநாயகி. சிவாநாயகி. இந்திராணி. தர்மகுலசிங்கம். பத்மநாதன் ஆகியோரின் அன்புப் பெறாமகனும் நவீன் . ஹரினி. சுபாசினி. அஜீத். சர்மிளா ஆகியோரின் அன்பு மைத்துனனும் மாலதி - ஸ்கந்தராஜா. தர்சினி - மயூரன் . பவனுஷா சுகிர்தராஜ். கிருஷாந். ஜவாகரி. சுசந்திகா. பிரியந்தன் ஆகியோரின் ஒன்று விட்ட சகோதரனும் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்). இரத்தினம்மா மற்றும் இராசமாணிக்கம். சௌந்தரம்மா ஆகியோரின் அன்புப் பேரனும் ரஷ்வினாவின் குட்டி மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**203/2, கண்டி வீதி,**
**அரியாலை.**

(aja/cs/001756)

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

# கண்ணீர் அஞ்சலி



எமது சக நண்பன்

**யோ. யசோதரனின்** சிரேஷ்ட புதல்வன்

**யசோதரன் அபிஷேக்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(AJA/CS/001760)

**பிரிவால் துயருறும்:**
**விஞ்ஞானபீட 25 ஆவது அணி நண்பர்கள், யா/பல்கலைக்கழகம்.**

# மரண அறிவித்தல்

## திருமதி இந்துமதி சொர்ணலிங்கம்



யாழ்ப்பாணம், கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்துமதி சொர்ண லிங்கம் நேற்று (05.03.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதர் சொர்ணலிங்கத்தின் அன்புமனைவியும் காலஞ்சென்ற நடராசா மற்றும் இரத்தினேஸ்வரி தம்பதியரின் மூத்தபுதல்வியும் காலஞ்சென்றவர்களான வேலாயுதர் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்புமருமகளும் சுஜீதன் (லண்டன்), கார்த்திகா (ஆஸ்திரேலியா). சாயீதன் ( I.C.B.T. மாணவன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் உமாசுதன் ( Engi, ஆஸ்திரேலியா) இன் அன்பு மாமியும் கோமதி (லண்டன்), திவாகரன் (லண்டன்), நளினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சோம் றஞ்சன், சிவசாந்தி. ஜெயகாந்தன், Dr. சூரியகுமாரன், இராஜசூரியர், சாந்தகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.03.2017) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**G.P.S. வீதி,**
**151, கல்வியங்காடு.**

(AJA CS 001761)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**021 223 0128**

*அரசமைப்பு...*
(தொடர்ச்சி...)

அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா மேலும் தெரிவித்ததாவது:


இலங்கை மன்றக் கல்லூரியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழு மற்றும் மையச் செயற்குழுக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இதன் போது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது நிலைப்பாட்டைத் தெரிவித்தார். புதிய அரசமைப்பு உருவாக்க இடமளிக்கப் போவதில்லை என்றும், அரசமைப்பு மறுசீரமைப்பு மாத்திரமே மேற்கொள்ளப்படப் போவதாகவும் குறிப்பிட்டிருந்தார். இதேவேளை, புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டு பொது வாக்கெடுப்பின் ஊடாக நிறைவேற்றப்படும் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் ராஜித தெரிவித்த கருத்து, ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாக இருக்கலாம் என்றும் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா குறிப்பிட்டார்.

(வ-5)

# மரண அறிவித்தல்

## அப்புத்துரை தங்கேஸ்வரன் (கிளி)

**(உரிமையாளர்-ஆவரங்கால் அம்பாள் மரக்காலை, அம்பாள் அரிவுகாலை)**



ஏழாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை தங்கேஸ்வரன் (கிளி) 03.03.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் புனிதவதியின் அன்புக்கணவரும் பிரசாத் (அம்பாள் மரக்காலை), சந்திரிக்கா, ஜன்சாத்(அம்பாள் அரிவுகாலை), காலஞ்சென்ற சஜீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான முருகையா, நாகேஸ்வரி, தங்கரத்தினம் மற்றும் தவமணிதேவி, காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் யோகேஸ்வரி, கனகலிங்கம், காலஞ்சென்ற நந்தகுமார் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் குணராசா(கனேஸ்-லண்டன்), இராசநாயகி(ரதி), விஜிதா(சூட்டி) ஆகியோரின் மைத்துனரும் சந்திரதாஸ்(கனடா) இன் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2017) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆவரங்கால் .**
**077 257 7688**

(AJA 001759)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## பிலிப்பைன்ஸ்ஸில்...

ஏற்பட்டது. ரிச்டர் அளவுகோலில் 6.9 ஆக அது பதிவானது. பிலிப்பைன்ஸ் நாட்டின் தென் பகுதியில் உள்ள மிண்டானாவோ தீவுக் கூட்டப் பகுதியில் இலங்கை நேரப்படி நேற்றுக் காலை 6 மணியளவில் இந்த நில அதிர்வு ஏற்பட்டது. ஒருவர் சாவடைந்ததுடன் 50 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்று முதல் கட்ட தகவல்கள் வெளியாகின.

குறிப்பாக, சுரிகாவ் நகரத்தில் உள்ள பல வீடுகள், கடைகள் மற்றும் முதன்மைச் சாலைகள் இந்த நிலநடுக்கத்தால் சேதம் அடைந்தன. குறித்த பகுதியில் உள்ள பல குடும்பங்கள் தற்காலிகமாக வெளியேறியுள்ளன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## குடாநாட்டில்...

செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். கடந்த சில தினங்களாக யாழ்.மாவட்டத்தில் பெய்துவரும் மழையும் வானம் மப்பும் மந்தாரமாகவும் காணப்படும் நிலமையும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வெங்காய அறுவடையையும் நெல் அறுவடையையும் முற்று முழுதாக பாதிக்கச் செய்திருப்பதோடு, விவசாயிகளுக்கு பெரும் பொருளாதார இழப்பையும் ஏற்படுத்தி உள்ளது.

தற்பொழுது கால் போக வெங்காய அறுவடை நடைபெற்று வருகின்றது. வெங்காயத்தை பிடுங்கி குறிப்பிட்ட சில தினங்கள் தோட்டத்தில் காயவைத்த பின்னரே பிடிகட்டி எடுத்துவந்து வீட்டில் களஞ்சியப்படுத்தி வருவது யாழ்ப்பாணத்து நடைமுறையாக உள்ளது. தொடர்ந்து மழைபெய்து வருவதால் பிடுங்கி வைத்த வெங்காயம் அழுகி சேதமடையும் நிலை ஏற்பட்டிருப்பதோடு, விளைந்து அறுவடை செய்யாமல் இருக்கும் வெங்காயப் பயிரும் சேதமடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், மாரிமழை பொய்த்தமையால் சேதமடைந்த நெற்பயிரில் தப்பிப்பிழைத்து விளைந்த நெல்லும் அறுவடை செய்யமுடியாமல் வயலில் கிடந்து பழுதடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

உரியகாலத்தில் மழைபெய்யாமல் பயிர்ச் செய்கை நடவடிக்கை பாதிக்கப்பட்டதோடு, விளைந்த பயிரையும் விளைச்சலையும் அறுவடைசெய்யமுடியாமல் சேதமடைய விடும் நிலை விவசாயிகளை பெரும் மன உளைச்சலுக்கும் பொருளாதார இழப்புக்கும் உள்ளாகி உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-11)

## சிறைச்சாலை...

தலைவரான சமயங் உள்ளிட்டவர்களை நீதிமன்றுக்குக் கொண்டு செல்லும் போது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் மற்றும் கல்கிசை நீதிமன்ற வளாகத்தில் இருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்ட சம்பவம் என்பவற்றை கருத்திற் கொண்டு இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை மற்றும் நீதித்துறையின் உயர் அதிகாரிகளுக்கு இடையே நேற்றுமுன்தினம் சிறப்புச் சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன் போது, சிறைச்சாலை அதிகாரிகளுக்கு பொலிஸ் சிறப்புப் படையணிப் பயிற்சிகள் வழங்குவது உள்ளிட்ட பல யோசனைகள் குறித்து ஆராயப்பட்டன.

பெருங்குற்றச் செயல்களுடன் தொடர்பு கொண்டு சிறையில் உள்ளவர்களை நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக வெளியே அழைத்துச் செல்லும் போது, மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு பணிகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

அதன்போதே, பெரிய குற்ற வாளிகள் தொடர்பான வழக்கு விசாரணைகளைசிறைச்சாலைக்கு உள்ளேயே விசாரணை செய்வதற்கான யோசனையும் முன்வைக் கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-4)


### வேலையாள் தேவை

மானிப்பாயிலுள்ள கிரான்ட் றெஸ்ரோரண்டுக்கு நன்றாக சமையல் வேலை தெரிந்த சமையல் ஆள் (Cooker), உதவியாளர் (Helper) (ஆண்.பெண்) தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

**076 981 9241** (AJACS001758)


கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 108
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 05.03.2017
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 78,196,176/-
I 07 13 62 72
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB LOT TY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

Galaxy Star
வெற்றி வாரம் 141 திகதி 05.03.2017
அதிர்ஷ்ட நட்சத்திரம் மற்றும் வெற்றி இலக்கங்கள்
11 02 07 46 52
அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,436,500 /-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB LOT GS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

லக்கின
இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 05.03.2017 | வெற்றி வாரம் 2104 | வர்ணம் ஊதா
விருட்சிகம்
வெற்றி இலக்கங்கள்
03 10 21 44
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 11,826, 317/=
2017.03.07ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 02 . 03 . 1950 |  | 09 . 03 . 2014 |

**அமரர் பொன்னன் நாகரத்தினம்**


திதி :-நவமி (06.03.2017)

ஆண்டுகள் மூன்று ஆனதுவே துயர் ஆறவில்லை
நீங்கள் இன்றி நாமின்று நிர்க்கதியாய் தவிக்கின்றோம்.
வாராயோ இன்னொருக்கால் எம்மோடு வாழ்வதற்கு
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

வல்வெட்டி
V.V.T

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்



**பொன்னையா இராஜகோபால்**



**திருமதி நாகம்மா இராஜகோபால்**


மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும் 81, காரைக்காட்டு லேன், வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் தற்போது வவுனியா, இல. 20, கருப்பனிச் சங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இராஜகோபால் திருமதி நாகம்மா இராஜகோபால் தம்பதியினர் 04.03.2017 சனிக்கிழமை சிவபதம் அடைந்துள்ளார்கள்.

அன்னார்கள் இருவரதும் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2017) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு அவர்களது தற்போதய வவுனியா இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்கள் தகனக்கிரியைகளுக்காக வவுனியா பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர் 077 711 2125**

## மரண அறிவித்தல்கள்

### சின்னையா பரமசாமி



சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னையா பரமசாமி நேற்று (05.03.2017) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.


அன்னார் சரஸ்வதியின் அன்புக்கணவரும் விஜிதா, தீபா ,கலாரூபன், சிவரூபன் (அஞ்சலகம் சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரகுநாத்தின் அன்பு மாமனாரும் அம்சாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2017) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சரசாலை வடக்கு கொம்பிக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சரசாலை வடக்கு,**
**சாவகச்சேரி.077 198 7508**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## தனபாலசிங்கம் கஜன்



இராஜ வீதி, கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகக் கொண்ட தனபாலசிங்கம் கஜன் நேற்று (05.03.2017) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் சோதிமலர் தம்பதியரின் அன்பு மகனும் கார்த்திகா (லண்டன்), லோகதாஸ் ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஸ்ரீகரனின் (லண்டன்) மைத்துனரும் கர்சிகா (லண்டன்), ஜஸ்வன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற இராஜரட்ணம் மற்றும் பூபாலசிங்கம், விவேகானந்தம், காலஞ்சென்றவர்களான புனிதவதி, இராசமணி ஆகியோரின் பெறாமகனும் சிவபாக்கியம், கனகமணி, காலஞ்சென்றவர்களான கமலாதேவி, நல்லையா, தியாகராசா மற்றும் நல்லைநாதன் ஆகியோரின் அன்புமருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2017) திங்கட்கிழமை பி.ப. அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இராஜ வீதி,**
**கோப்பாய் வடக்கு,**
**கோப்பாய்.**

**தகவல்:**
**த.லோகதாஸ் (சகோதரன்)**
**077 884 9664**

## பாலசுப்பிரமணியம் தேவகாந்தன்
### (தேவன்)
### ( அஞ்சல் அலுவலக உத்தியோகத்தர், யாழ் )



கலாசாலை வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், 41/2, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் தேவகாந்தன் (தேவன்) நேற்று (05.03.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் சிவரஞ்சினி (தேவி) தம்பதியரின் அன்புமகனும் சுகந்தினியின் (சூட்டி) அன்புக் கணவரும் நாகவருணின் அன்புத் தந்தையும் சுந்தரலிங்கம் (ராஜா தியேட்டர் முகாமையாளர்) - சகுந்தலாதேவி தம்பதியரின் அன்புமருமகனும் சிவசாந்தி, கௌரி (ஆசிரியை - கிளி/பூநகரி மத்திய கல்லூரி), லக்சுமிகாந்தன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் யோகச்சந்திரன் (யோகாஸ் நகையகம்), சுதாகர் (ஆசிரியர், கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்), சுமதி (கனடா), சுகுமார் (ராஜா தியேட்டர் மேற்பார்வையாளர்), சுதன் (ஸ்ரீ சுதனா நகை மாளிகை), திவாகர் (UK), செந்தில்குமரன் (C.T.B) ஆகியோரின் மைத்துனரும் கிருஷாந்தி (பிரதம முகாமைத்துவ உதவியாளர் பிரதேச செயலகம், தெல்லிப்பழை), கலைராணி, சாந்தகுமார் (கனடா), சுஜாதா, உஷாந்தி (முகாமைத்துவ உதவியாளர் - பிரதேச செயலகம் நல்லூர்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2017) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2.30 மணியளவில் பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் த்கனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: க.சுந்தரலிங்கம்**
**(மாமன் - ராஜா தியேட்டர் முகாமையாளர்)**
**021 222 6259**

(001782)

## கண்காணிப்புடன்...

பாதுகாப்புச் சபையின் ஊடாக இந்த விடயத்தை நகர்த்த முறபட்டால், பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் வீட்டோ அதிகாரமுடைய சீனா, ரஷ்யா, அமெரிக்கா இதனைத் தடுத்துவிடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பருத்தித்துறையில் உள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

### கூட்டாட்சியை கைவிடவில்லை

நாம் கூட்டாட்சியைக் கைவிடவில்லை. தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை நிறைவேற்றுவோம். தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கக் கூடிய அனைத்தையும் பெற்றுக் கொடுக்க முயற்சிக்கின்றோம். ஆயுதப் போராட்ட காலத்தில், 2005ஆம் ஆண்டு கூட்டாட்சித் தீர்வு தட்டில் வைத்துத் தரப்பட்டது. அப்போது வேண்டாம் என்றோம். இப்போது அந்தத் தீர்வுக்காகப் பேசுகின்றோம். இங்கே சிலர் நாம் கூட்டாட்சியைக் கைவிட்டு விட்டதாகப் பொய்ப் பரப்புரை செய்கின்றனர்.

### ஒற்றையாட்சி சொற்பதம் இருக்கக் கூடாது

சில விடயங்களில் நாங்கள் விட்டுக் கொடுப்புக்களைச் செய்வது உண்மைதான். ஒற்றையாட்சிக்குரிய தாய் நாடு தான் பிரிட்டன். அங்கே இருக்கின்ற அதிகாரப் பகிர்வு முறைமை, கூட்டாட்சி நடைபெறும் எந்தவொரு நாட்டிலும் இல்லாத அளவுக்கு இருக்கின்றது. தனிநாடு கோரி வாக்கெடுப்பு நடத்தும் அளவுக்கு அங்கு அதிகாரங்கள் பகிரப்பட்டிருக்கின்றன. ஸ்பெயின் அரசமைப்பு ஒற்றையாட்சியைக் கொண்டது. ஆனால் நடப்பது கூட்டாட்சி. சொல் முக்கியமல்ல. அதன் பொருள்கோடல் தான் முக்கியம்.

கூட்டாட்சிக்கு இரண்டு முக்கிய விளக்கங்கள் இருக்கின்றன. வழங்கிய அதிகாரங்கள் திரும்பப் பெறக் கூடாது. எதிலும் நடுவண் அரசு தலையீடு செய்யக் கூடாது. இந்த இரண்டு அம்சங்களும் அரசமைப்பில் இருக்க வேண்டும். அவ்வாறான அரசமைப்பு வருவதற்கான சாத்தியங்கள் நிறையவே இருக்கின்றன. சொல் முக்கியமில்லை என்றாலும், ஒற்றையாட்சி என்ற சொற்பதம் இருக்கக் கூடாது.

### வடக்கு கிழக்கு இணைப்புக்கு காலம் தேவை

வடக்கு கிழக்கு இணைப்பை நாம் கைவிடவில்லை. நாம் இதனைக் கைவிட்டு விட்டதாகப் பொய்யான பரப்புரை முன்னெடுக்கின்றனர். இது உடனடியாகச் சாத்தியமில்லை. வடக்கு கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம் மக்களும் இணங்க வேண்டும். தமிழ் முஸ்லிம் இரண்டு பக்கமும் இன்னமும் சந்தேகம் இருக்கின்றது. இரு தரப்புக்கும் ஏற்பட்ட காயங்கள் ஆற வேண்டும். அதன் பின்னர் இரண்டு தரப்பும் பேச்சு நடத்தி இதனை இணைத்துக் கொள்ளலாம்.

கிழக்கு மாகாண சபையில் எமது கட்சியைச் சேர்ந்த 11 உறுப்பினர்கள் இருக்கின்றனர். முஸ்லிம் காங்கிரஸின் 7 உறுப்பினர்கள் இருக்கின்றனர். இணைந்து ஆட்சி நடத்துகின்றோம். நாங்கள் விட்டுக்கொடுத்து எமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளோம். இலங்கை - இந்திய உடன்படிக்கையிலும் வடக்கு-கிழக்கு இணைப்பு இருந்தது. ஆனால் அதற்கு நிபந்தனை இருந்தது. எல்லாம் கிடைத்தால் ஏற்றுக்கொள்வோம் என்றால் நாம் தோல்வியைத்தான் அடையவேண்டும். இந்திய அயலுறவுத்துறைச் செயலர் ஜெய்சங்கர் எங்களைச் சந்தித்தபோது, வடக்கு-கிழக்கு இணைப்புச் சாத்தியமில்லை என்று சொல்லவில்லை. அது பேச்சு மேசையில் இருக்கட்டும். முதலில் பெற்றுக் கொள்ளக் கூடியதைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றுதான் சொன்னார். ஆனால் இந்த விடயங்களில் குழப்பம் யாருக்குத் தேவையாக இருக்கின்றதோ, அவர்கள் இதனைக் குழப்பியடிக்கும் வகையில் பத்திரிகைகளுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

### ஐ.நா. மனித உரிமைகள் சபை

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கால அவகாசம் இலங்கைக்கு வழங்கக் கூடாது என்று எமது கட்சியைச் சேர்ந்த 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு கடிதம் அனுப்பியுள்ளனர். இது எமக்குத் தெரியாது. கட்சியின் தலைவர் சம்பந்தனுக்கும் தெரியாது. கால அவகாசம் வழங்கக் கூடாது என்று கூறுவது முட்டாள்தனமானது. இலங்கை அரசும், தான் ஒப்புக் கொண்ட விடயங்களை நிறைவேற்றாமல் முடிக்கத்தான் முயற்சிக்கின்றது. அதற்கு இது வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து விடும்.

ஐ.நா.வில் நாம் காலஅவகாசம் கோரியதாகப் பொய்யான பரப்புரை செய்கின்றனர். இலங்கை அரசுதான் கால அவகாசம் கேட்கின்றது. இலங்கை அரசு தான் இணங்கிய விடயங்களை நிறைவேற்ற வேண்டும். அவர்களைத் தப்பிக்க விடக்கூடாது. கடும் கண்காணிப்பில் - மேற்பார்வையில் கால அட்டவணை கொடுக்கப்பட வேண்டும் என்று ஐ.நா.மனித உரிமைகள் சபைக்கு நாம் தெளிவாகச் சொல்லியுள்ளோம்.

இலங்கை ரோம் பிரகடனத்தில் கையெழுத்திடவில்லை. பன்னாட்டு நீதிமன்றில் இலங்கையை நேரடியாக நிறுத்த முடியாது. ஐ.நா. பாதுகாப்புச் சபையினூடாக இந்த விடயத்தை அணுகினால், வீட்டோ அதிகாரத்தை வைத்துள்ள நாடுகள் இதனை நீர்த்துப் போகச் செய்து விடுவார்கள். பன்னாட்டு நீதிமன்றில் கடந்த 30 வருடத்தில் 3 பேர் குற்றவாளிகளாக இனம் காணப்பட்டுள்ளனர். 39 வழக்குகள் நிலுவையில் உள்ளன. 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### கோபத்துக்காக மூக்கை அறுக்கக் கூடாது

நாங்கள் மக்களுக்குச் செய்ய வேண்டியதைச் செய்வோம். தீமையான எதையும் செய்ய மாட்டோம். சில விடயங்கள் சிலருக்கு கசப்பாக இருக்கும். இனி ஒரு தடவை நாங்கள் ஆயுதம் ஏந்தக் கூடாது. அந்த அறிவு எமக்கு வேண்டாம். அதற்காக ஆயுதப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தவில்லை. ஆயுதப் போராட்டத்தில் உன்னதமாக தியாகம் செய்தார்கள். அதனை மதிக்கின்றோம். இனியும் ஒரு இலட்சம் இளைஞர்களைக் காவு கொடுக்க முடியாது. எமது இளைஞர்கள் வாழ வேண்டும். காலம் தாழ்த்தியாவது எமது மக்களுக்கு விடிவு கிடைக்கும். மக்கள் அதனை ஏற்றுக்கொள்ளலாம். எமது கோரிக்கை நியாயாமானது. திரும்பவும் குருதிக் களரி தேவையில்லை. கோபம் வந்து விட்டதற்காக எமது மூக்கை வெட்டக் கூடாது. சிந்தித்து அறிவாற்றலுடன் செயற்பட்டு எமது மக்கள் உரிமையை வென்றெடுப்போம் - என்றார்.

(வ-5,26,173)

## பதினொரு...

இவர்கள் தேர்தலில் வாக்குகளைத் தக்க வைப்பதற்காகவே இவ்வாறு செய்திருக்கின்றார்கள்" என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆயுதப் போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரோடு கொள்கை ரீதியாக முரண்பட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை உருவாக்கியிருந்தோம். எம்மைப் பலவீனப்படுத்துவதற்காக அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியை பிரித்து கூட்டமைப்பின் வேட்பாளராக நிறுத்தினர். அந்தக் காலகட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு துரோகமிழைக்கின்றது என்று நாம் கூறிய போது எங்களைத் துரோகிகளாகப் பார்த்தனர். தேசியம், இறைமை மற்றும் தமிழர்களுக்கான சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்படாத தீர்வை ஏற்கப்போவதில்லை என்பதில் தமிழ் மக்கள் உறுதியாக நிற்கின்றனர் என்றால் அது எமது செயற்பாட்டின் வெற்றியையே குறிக்கும். தேர்தல் காலங்களில் கூட்டாட்சி என்று கதைத்துவிட்டு பின்னர் ஒற்றையாட்சிக்கு சம்மதம் தெரிவிப்பவர்கள் நாங்கள் அல்ல. எம்மைப் பற்றி நாடாளுமன்றத்தில் விமர்சிக்காமல் இருக்க முடியவில்லை என்றால் அது எமது பலத்தைக் குறிக்கின்றது.

தமிழ் மக்களுக்கு எதிராக போர்க் குற்றங்கள் மட்டுமல்ல இன அழிப்பையும் இலங்கை அரசு மேற்கொண்டது என்பதை ஆரம்பம் முதலே வெளிக்கொணர்ந்து வந்தோம். இந்த தேசத்தில் இடம்பெற்ற இன அழிப்பை நிரூபிக்க வேண்டிய பெரிய பொறுப்பும் எம்மிடமே உள்ளது. பொறுப்புக் கூறல் மற்றும் நிரந்தர அரசியல் தீர்வு எட்டப்பட்டாலே எமது எதிர்காலச் சந்ததியினர் நிம்மதியாக வாழ்கின்ற சூழலை உருவாக்க முடியும். எமது இனம் அழிக்கப்படுவதைத் தடுப்பதற்கு அரசியல் தீர்வும் பொறுப்புக்கூறலும் அவசியம். அரசியல் தீர்வு பற்றி மக்கள் மிகத் தெளிவாக இருக்கின்ற அதேவேளை பொறுப்புகூறல் பற்றிய விழிப்புணர்வு மக்களிடம் இல்லை.

அரச தலைவர் மைத்திரிபால பலாலி இராணுவ முகாமில் உரையாற்றும் போது, "பொறுப்புக்கூறல் விடயத்தில் வெளிநாட்டு சக்திகள் தலையிட முடியாது. எந்தவொரு இராணுவச் சிப்பாயும் நீதிமன்றதில் முற்படுத்தப்பட மாட்டார்கள். நானும் அதற்குத் தயாரில்லை" என்று தெரிவித்துள்ளார். தமிழ் மக்களை அழித்த இராணுவத்துக்கு எதிராக எதுவித மான சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ளமாட்டோம் என்று கூறியபோதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனை அற்ற ஆதரவைக் கொடுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து நாம் பிரிந்து சென்றபோது, எமக்குப் பதவி ஆசை என்ற குற்றச்சாட்டை முன்வந்திருந்தனர். 2009ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக பின்னோக்கி சென்ற போது இரண்டு முக்கிய தூதரகங்களின் நெருங்கிய நபர்கள் எங்களைச் சந்தித்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு வயதாகி விட்டது. அடுத்த தலைமைப் பொறுப்பை நீங்கள் ஏற்க வேண்டும். உங்கள் கொள்கைகளை கைவிட வேண்டும் என்று கூறினர். கொள்கைகளைக் கைவிட்டுப் பதவிகளை நாங்கள் பெறப்போவதில்லை என்பதை வலியுறுத்தி இருந்தோம். எங்களின் ஒருமித்த கொள்கைகளை கைவிட்டிருந்தால் எப்போதோ நாடாளுமன்ற உறுப்பினர்களாகி இருப்போம். தொடர்ச்சியாக கொள்கைகளை முன்வைத்தும் நாம் தோற்றால் உண்மையில் அது எமது தோல்வியல்ல. ஒட்டுமொத்த தமிழ் இனத்தினுடைய தோல்வியே - என்றார். (வ-5,101)

## இந்தியப்...

அத்துடன், படகு விடுவிப்பு, இலங்கை இந்திய மீனவர்கள் பிரச்சினை சம்பந்தமாக பேச்சு நடத்துவதற்காக இந்திய மீன்பிடித்துறை அமைச்சர் தலைமையிலான உயர்மட்டக் குழுவொன்று எதிர்வரும் 4ஆம் திகதி கொழும்பு வருகை தரவுள்ளது என்றும் தெரிவித்தார்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் கடற்படையினரால் தொடர்ச்சியாக கைதுசெய்யப்பட்டு வருகின்றனர். அவர்களது படகுகளும் கைப்பற்றப்பட்டு வருகின்றன.

அவ்வாறு கைது செய்யப்படும் மீனவர்கள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்படுகின்ற போதிலும் படகுகளை விடுவிப்பதில்லை என்ற நிலைப்பாட்டில் இலங்கை அரசு உறுதியாக இருந்தது. எனினும், புதுடில்லி அரசு விடுத்த கோரிக்கையின் பிரகாரம் 2015ஆம் ஆண்டு கைப்பற்றப்பட்ட 42 படகுகளை விடுவிப்பதற்குக் கொழும்பு அரசு தீர்மானித்துள்ளது எனத் தகவல் வெளியாகியது.

இதுதொடர்பில் மீன்பிடி அமைச்சின் இணைப்புச் செயலாளரிடம் கேட்கப்பட்டது.

"42 படகுகளை விடுவிப்பது பற்றி பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது. இலங்கை அரசு முன்வைத்த சில கோரிக்கைகளுக்கு இந்திய அரசு சாதக சமிக்ஞைகளை வெளிப்படுத்தியுள்ளது. அதற்கான பிரதியுபகாரமாகவே இந்த நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டது. ஆனாலும், இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை.

படகுகளை விடுவிப்பதற்கு வடக்கு மீனவர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். இந்திய மீனவர்களால் அவர்களது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. மீனவர் பிரச்சினை பற்றிப் பேசுவதற்காக இந்திய மீன்பிடி அமைச்சர் ஏப்ரல் 4 ஆம் திகதி கொழும்புக்கு வரவுள்ளார். அதன்பின்னர் சகல தரப்புடனும் பேசப்பட்டு முடிவொன்று எடுக்கப்படும்" என்று அவர் தெரிவித்தார். (வ-4)

## கூட்டமைப்புக்கு...

கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா தெரிவித்தார்.

பருத்தித்துறையில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனுடன் நெருக்கமானவன் நான். கடந்த காலங்களில் அவரின் நிழலைக் கூட நெருங்க முடியாதவர்கள், இன்று எம்மைப் பற்றி பொய்ப் பரப்புரை மேற்கொள்கின்றனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் எமக்கு எதிராக அவதூறு பரப்ப வேண்டும் என்பதற்காகவே இணையத்தளம் வைத்து நடத்துகின்றனர். பொய்களைப் பரப்புகின்றனர். அதற்கு சில பத்திரிகைகளும் துணை போகின்றன என்றார். (வ-5,26)

## புதிய...

முயற்சித்தால், தமிழர் தரப்பினால் முன்வைக்கப்படும் கடுமையான வாசகங்களை உள்ளீர்க்க வேண்டிய நிலை ஏற்படும் என்று இலங்கை அரசுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இலங்கை அரசு 2015ஆம் ஆண்டு இணங்கி ஏற்றுக் கொண்ட தீர்மான வரைவை நடைமுறைப்படுத்துவதற்கு இரண்டு வருட கால அவகாசம் வழங்கி புதியதொரு தீர்மான வரைவு கடந்த வெள்ளிக்கிழமை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இலங்கை அரசு எதிர்ப்பு வெளியிட்டுள்ள, வெளிநாட்டு நீதிபதிகள் விடயமும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதனை நீக்குவதற்கு ஜெனிவாவில் உள்ள இலங்கை அரசின் பிரதிநிதிகள் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். தீர்மான வரைவை முன்வைத்த தரப்புக்கள் அதற்கு இடம்கொடுக்க மாட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. தீர்மானத்தில் மாற்றம் மேற்கொண்டால், தமிழர் தரப்புக்கள் கோருகின்ற, பன்னாட்டு நீதிமன்றுக்கு பாரப்படுத்துகின்ற வாசகத்தை தீர்மானத்தில் சேர்க்க வேண்டிய நிலை ஏற்படும் என்று இலங்கை அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இலங்கை அரசு தீர்மானத்தை நீர்த்துப் போகச் செய்யும் முயற்சியைக் கைவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, இலங்கை அரசு 2015ஆம் ஆண்டு இணங்கியவற்றைச் செய்யவில்லை என்ற விடயத்தை புதிய தீர்மானத்தில் உள்ளடக்குமாறு தமிழர் தரப்பு கோரிக்கை முன்வைத்திருந்தது. இருப்பினும் அது தீர்மான வரைவில் உள்ளடக்கப்படவில்லை. (வ-5)

## கச்சதீவுத்...

தீர்மானம் எடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

"இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழையும் சந்தர்ப்பத்தில் இலங்கைக் கடற்படை அவர்களைக் கைது செய்கின்றது. இதனை வெறுமனே புதுடில்லி அரசுக்கு ஓர் கடிதம் எழுதிவிட்டுத் தமிழக அரசு சும்மா இருந்து விடுகின்றது. இதனால் இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்தும் மீனவர்களைக் கைது செய்கின்றனர்.

தேர்தல் காலத்தில் இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு அனுமதி பெற்றுத்தருவதாக கூறிய வாக்குறுதியை அரசியல்வாதிகளும் மறந்து செயல்படுகின்றனர். எனவே இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 125 படகுகளையும், 72 மீனவர்களையும் விடுவிக்கும் வரையில் கச்சதீவில் இடம்பெறும் திருவிழாவுக்கு எந்த விசைப்படகுகளும் செல்வதில்லை" என்று இராமேஸ்வரம் மீனவர்கள் தெரிவித்தனர். (வ-101)

## காணாமற்போனோரின்...

வழிபாட்டில் ஈடுபட்டனர். அந்த வழியாக பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் ஆளுநர் அலுவலகத்தை வந்தடைந்தனர்.

கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் முடிவுகளை உடனடியாகத் தெரியப்படுத்த வேண்டும், அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும், பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடி அலையும் சங்கத்தின் தலைவி நாகேந்திரன் ஆசா தெரிவித்தார். (வ-ய-40,45)

## தமிழ்...

போராட்டம் நடத்தினர். அவர்கள் சம்பந்தா, சுமந்திரா எங்கே போனீர்கள் என்று ஒப்பாரி வைத்துப் போராட்டம் நடத்தினர். இதன்போது எனது அருகில் நின்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், எங்களது பெயரைச் சொல்லிக் கத்தினால் நியாயம் இருக்கு. சம்மந்தமில்லாத உங்களுடைய பெயரைச் சொல்லிக் கத்துகின்றார்கள் என்றார்.

வவுனியாவில் காணாமற்போனோரின் உறவினர்கள் போராட்டம் நடத்துகின்றனர். அவர்களுக்கு ஆதரவாக ஒரு அரசியல் கட்சி போராட்டம் நடத்தியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அந்தக் கட்சியினர்தான் கடந்த காலங்களில் இளையோர்களைக் கடத்திச் சென்றவர்கள் -என்றார். (வ-5,26,173)



## வீடுகள்

வண்ணக் கிளியே வீடெங்கே?
தென்னை மரத்தில் பொந்தைப் பார்
தூக்கணாங் குருவி வீடெங்கே?
தொங்குது மரத்தில் ஊஞ்சல் போல

கறுப்புக் காகமே வீடெங்கே?
வேப்ப மரத்தில் என் கூடு
தேனீக் குலமே வீடெங்கே?
தேக்கு மரத்தில் தேன் கூடு

கடு கடு சிங்கமே வீடெங்கே?
காட்டில் குகைதான் என் வீடு
பாம்பே பாம்பே வீடெங்கே?
கரையான் புற்றிலே என் வாழ்க்கை

குயிலின் குலமே வீடெங்கே
எமக்கு வீடேகிடையாதே!
நகரும் நத்தையே வீடெங்கே
நகரும் என் வீடு என் முதுகில்

## குரங்கு பழத்தை நோக்கி செல்ல வழிகாட்டுவோம்



## பைசா சாய்ந்த கோபுரம்

உலக அதிசயங்களில் பைசா சாய்ந்த கோபுரமும் ஒன்று. இதனைப் பல பார்வையாளர்கள் பார்த்து வியந்து வந்ததும் அனைவருக்கும் தெரிந்த விடயம்தான். 800 ஆண்டுகளாக இருந்து வரும் இந்த பைசா நகரத்தின் சாய்ந்த கோபுரம் சமீபத்தில் பார்வையாளர்கள் சென்று பார்க்க முடியாதபடி மூடப்பட்டு விட்டது. இந்த சாய்ந்த கோபுரம் உண்மையிலேயே மெல்ல மெல்லச் சாய்ந்து வருவதால், ஒருநாள் தரையோடு தரையாகப் படுத்து விடலாம் என்று அஞ்சப்படுகிறது. இந்தக் கோபுரத்தின் மீது விமானங்கள் பறப்பதற்குக் கூடஇத்தாலிய அரசு தடை விதித்துள்ளது. விமானங்கள் உண்டாக்கும் ஒலியதிர்ச்சிகள் இந்தக் கட்டடத்தைப் பாதிக்கும் என்ற அச்சமே இதற்குக் காரணம்.





## முதியோரைப் பேணுவோம்



- முதியோர் தமது நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள்.
- எமக்காக நாளெல்லாம் உழைத்த உத்தமர்கள்.
- எமது முதியோர்கள் வீட்டுக்கும் நாட்டுக்கும் உழைத்தவர்கள்.
- இன்றைய இளைஞர்கள்தான் நாளை முதியவர்கள்.
- இளைஞர்களது உழைப்பு ஈடிணையற்றது.
- அவர்கள் முதுமையடைந்ததும் மூலையில் ஒதுக்குவது சரியா?.
- இன்று இந்த நாட்டின் பல பகுதிகளில் முதியோர் இல்லங்கள் பெருகி வருகின்றன.
- இது நாம் முதியோரை எந் நிலையில் வைத்திருக்கிறோம் என்பதையே காட்டுகிறது.
- முதியோர்கள் சமூகத்தின் முட்டுக் கட்டைகளா?.
- இன்று கணவனும் மனைவியும் உழைக்கச் செல்வதாலேயே இந்த நிலை ஏற்படுகிறது.
- முதியோர் நமக்காகப் பாடு பட்டதைப் போற்ற வேண்டும்.
- அவர்கள் நமக்காக எத்தனை ஆயிரம் தியாகங்களைச் செய்திருப்பார்கள்.
- முதியோர்கள் இளமைக்காலத்தில் நட்ட மரங்களில் அவர்கள் அல்ல நாமே பயன்களைப் பெறுகிறோம்.
- அவர்கள் கட்டித் தந்த வீடுகளில் வாழுகிறோம்.
- அவர்கள் எழுதிவைத்த நல்லனவற்றைக் கற்கிறோம்.
- இளமையில் அவர்கள் இட்ட திட்டங்களால் நாம் உயர்வடைகிறோம்.
- ஆனால் அவர்களின் இயலாமையில் மட்டும் அவர்களைத் தள்ளி வைக்கிறோம்.
- அவர்களை முதுமைக் காலத்தில் பாதுகாப்பது எமது கடமையாகும்.
- முதியோர் (மூத்தோர்) சொல் வார்த்தை அமிர்தம் என்பார்கள்.
- அவர்களது சொற்கேட்டு நடக்க வேண்டும்.
- வயதான காலத்தில் அவர்களுக்கு ஆதரவாகவும் ஆறுதலாகவும் நாம் இருப்போம்.

## டைனோசர்கள் அழிந்தது எவ்வாறு?

பூமியில் யுறாசிக் காலத்தில் வாழ்ந்த டைனோசர்கள் என்ற இராட்சத விலங்கினம் இப்போது பூமியில் இல்லை. அவை அழிந்து போனமையையிட்டு பல கருத்துக்கள் உள்ளன.

★ பெரியதொரு ஆகாயக்கல் அல்லது குறுங்கோள் பூமியில் விழுந்து மோதியதால் டைனோசர்கள் மடிந்தன.

★ ஆகாயக்கல் பூமியில் மோதியதால் ஏற்பட்ட தூசு, துகள்கள் பல ஆயிரம் மீற்றர் தடிப்பில் வளிமண்டலத்தில் படிந்து, சூரியக் கதிர்களைப் பூமிக்கு வராது தடுத்தன. அதனால் பூமியில் கடும் குளிர் நிலவியது. அக்குளிருக்கு ஈடு கொடுக்க முடியாது அவை அழிந்தன.

★ பூமியில் வெப்பம் அதிகரித்ததால் டைனோசர்கள் ஆண்மையிழந்ததால் இனப் பெருக்கம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் இவ்இனம் அழிந்தது.

★ அகன்ற இலைகள் கொண்ட தாவரங்கள் தோன்றியபோது காற்றில் ஒட்சிசனின் அளவு அதிகரித்தது. அதன் காரணமாக டைனோசர்களின் உடலில் உணவு வேகமாக சமிபாடடைந்தது. எனவே டைனோசர்கள் உயிருடனிருக்கப் போதுமான உணவின்றி அழிந்தன.

★ எலி போன்ற சிறிய பிராணிகள் பெருகிய போது, அவை டைனோசர்களின் முட்டைகளை உடைத்து தின்றுவிட்டன. அதனால் இனம் பெருக முடியாது அழிந்து போன... இவற்றில் ஒன்று அல்லது ப... டைனோசர்களின் அழிவுக்கு... காரணமாயின. முதலிரு காரண... களும் பெரும்பாலோரால் ஏற்று... கொள்ளப்பட்டன. டைனோச... களின் அழிவு திடீரென நடந்த ஒ... றல்ல. ஒரு கோடி ஆண்டுகளாக படிப்படியாக நடந்தவையாகும்.



## ஆமையும் தேளும்

ஒரு காட்டில் கெட்ட சுபாவமுள்ள தேள் ஒன்று வசித்து வந்தது. அந்தக் காட்டின் நடுவில் ஒரு நீரோடை இருந்தது. அந்தத் தேள் இக்கரையில் இருந்து அக்கரைக்கு போவதற்காக அந்த நீரோடையில் இருக்கும் பெரிய மீன்கள், நண்டு, தவளை போன்றவைகளிடம் உதவி கேட்டது. ஆனால் அந்தப் பொல்லாத் தேள் கொட்டி விடும் என்பதற்காக அவை எதுவும் தேளுக்கு உதவி செய்ய மறுத்து விட்டன. தேள் எவ்வாறு நீரோடையைக் கடப்பது என யோசித்துக் கொண்டிருக்கையில்; ஆமை ஒன்று நீரோடையில் நீந்தி வந்து கொண்டிருந்தது. அதனைக் கண்ட தேள் “ஆமையாரே நான் அக்கரைக்குச் செல்ல வேண்டும். அதற்கு எனக்கு உதவி செய்வீரா?” என்று கேட்டது. “நானும் அக்கரைக்குத்தான் செல்கிறேன் என் முதுகில் ஏறிக் கொள்ளும். உம்மை நான் அக்கரையில் விட்டு விடுகிறேன்” - என்றது ஆமை. தேள் ஆமையின் முதுகில் ஏறிக்கொண்டது.

ஆமை சிறிது தூரம் நீந்திச் சென்றிருக்கும். தேளுக்கு ஒரு யோசனை தோன்றியது. “நான் பல பேரை என் கொடுக்கினால் கொட்டியிருக்கிறேன். அவர்கள் வலியால் துடிப்பதையும் பார்த்திருக்கிறேன். ஆனால் ஆமையைக் கொட்டவும் இல்லை; வலியால் அது துடிப்பதை நான் இரசிக்கவும் இல்லை. இதுதான் நல்ல சந்தர்ப்பம். இப்போது கொட்டினால் என்ன?” என எண்ணி ஆமையின் முதுகில் பலமாகக் கொட்டியது. ஆமை மாற்றம் எதுவும் இல்லாது பேசாமல் போய்க் கொண்டிருந்தது. உடனே தேள் “ஆமையாரே உமது முதுகு கடினமாக இருக்கிறதே! உமது உடம்பில் வலி ஏற்படுவதில்லையா? என்று கேட்டது. தேளின் கெட்ட எண்ணம் அறியாத ஆமை “என் முதுகு கடினமான ஓட்டினால் மூடப்பட்டுள்ளது. அதனால் என் முதுகில் வலியே ஏற்படுவதில்லை. ஆனால் என் கழுத்துப் பக்கம் மென்மையானது. அதிலேதான் எனக்கு வலி, காயங்கள் ஏற்படும்” என்றது.

ஓகோ அப்படியா? என்று கேட்ட தேள் மெதுவாக ஆமையின் கழுத்துப் பகுதியை அடைந்து அங்கிருந்து ஆமையின் தலையில் பலமாகக் கொட்ட ஆரம்பித்தது. தலையில் ஏதோ குத்தியதை உணர்ந்த ஆமை சட்டென தலையை ஓட்டுக்குள் இழுத்துக் கொண்டது. தேள் நீரோடையில் விழுந்தது. தனக்கு உதவி செய்த ஆமைக்கு கேடு செய்ய நினைத்த தேள் தண்ணீரில் மூழ்கி இறந்தது. ஆமை கரையை நோக்கி நீந்திச் சென்றது.

ஒருவர் எந்தவித பயனையும் எதிர்பாராமல் எமக்கு உதவி செய்தாராயின் அவரின் உதவியை நாம் என்றுமே மறந்து விடலாகாது. நன்றியுடையவராக இருத்தல் வேண்டும். மாறாக அவருக்கு கேடு செய்ய நினைப்போமாகில் அது எம்மையே வந்து சேரும்.

பழமொழி : “கெடுவான் கேடு நினைப்பான்”

## ஒலுமடு அ.த.க.பா. சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 6
வவுனியா வடக்கு கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கடற்கரை கரப் பந்தாட்டத்தில் 20 வயதுக்குட் பட்ட ஆண்கள் பிரிவில் ஒலு மடு அ.த.க. பாடசாலை அணி சம்பியன் கிண்ணத் தைச் சுவீகரித்தது.
வவுனியா யங்ஸ்ரார் விளை யாட்டுக் கழக மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஒலுமடு அ.த.க. பாடசாலை அணியை எதிர்த்து கிடாச்சூரி அ.த.க. பாடசாலை அணி மோதியது.
மூன்று செற்களைக் கொண் டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றில் கிடாச் சூரி அ.த.க. பாடசாலை அணி 22:20 என்ற புள்ளிகள் அடிப் படையில் வெற்றிபெற்றது. ஆனால் சரிவில் இருந்து மீண்டு அடுத்த இரண்டு செற் களிலும் தமது அபார ஆட் டத்தை வெளிப்படுத்திய ஒலு மடு அ.த.க. பாடசாலை அணி 21:16, 15:13 என்ற புள்ளிக ளின் அடிப்படையில் அந்த செற்களைக் கைப்பற்றி சம்பி யனானது. மூன்றாமிடத்தை புதுக்குளம் மகா வித்தியாலய அணி பெற்றது. (ம-422)

## யங்ஹென்றிஸ் ஞானமுருகன் ஆட்டம் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 6
வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் பிற்போடப்பட்டது.
இறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி நேற்றுமுன்தினம் மோதுவதாக இருந்தது. ஆனால் மழை காரணமாக ஆட்டம் பிற்போடப்பட்டது. ஆட்டம் எப்போது நடைபெறும் என்பது பின்னர் அறிவிக்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (23)





# 'இந்துக்களின் போர்' சமநிலையில் முடிவு













கொழும்பு, மார்ச் 6
'இந்துக்களின் போர்' என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் இந்து கல்லூரி அணிக்கும் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அணிக்கும் இடையிலான நடப்பு வருட கிரிக்கெட் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
கொழும்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த வெள்ளி, சனி என இரு தினங்கள் கொண்டதாக ஆட்டம் நடந்தது.
முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு இந்துக் கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 287 ஓட்டங்களைப் பெற் றது. அதிகபட்சமாக யதுசன் 63 ஓட்டங்களையும், ஹரிகரன் 43 ஓட்டங்களையும், மதுசன் 22 ஓட்டங்களையும் பெற்ற னர். பந்துவீச்சில் நிதுசன், சிவலக்சன், அபிநயன், லிங் கேஸ் நால்வரும் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினர்.
பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி 237 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக தயாளன் 62 ஓட்டங்களையும், சிவலக்சன் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.
50 ஓட்டங்கள் முன்னிலையுடன் தொடர்ந்து களமிறங்கிய கொழும்பு இந்துக் கல்லூரி அணி, 227 ஓட்டங்களைப் பெற் றிருந்த நிலையில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிக பட்சமாக சேவாக் 63 ஓட்டங்களையும், செரோன் 50 ஓட் டங்களையும், யதீசன் 33 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அபிநயன் 4 இலக்குகளையும், சிவலக்சன் 3 இலக்குகளையும், விதுர்சன், துவாரகன், நிகேஸ் மூவரும் தலா ஓர் இலக்கைளும் வீழ்த்தினர்.
278 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப் பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி 124-5 என்ற நிலையில் இருந்த போது ஆட்டம் சமநிலையில் முடி வடைந்தது. அதிகபட்சமாக துவாரகன் 44 ஓட்டங்களையும், விதுர்சன் 40 ஓட்டங்களையும், லிங்கேஸ் 23 ஓட்டங்களை யும் பெற்றனர்.
ஆட்ட நாயகனாக கொழும்பு இந்துக் கல்லூரி அணியின் யுதீசன், சிறந்த துடுப்பாட்ட வீரராக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியின் வீரர் விதுசன், சிறந்த களத்தடுப்பாள ராக கொழும்பு இந்துக் கல்லூரி அணியின் மதுசன், சிறந்த பந்து வீச்சாளராக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி யின் கஜேந்திரன் ஆகியோர் தெரிவாகினர். (ம-422)

## சிவன் கழகம் அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 6
யாழ்ப்பாணம் மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்க ளுக்கு இடையில் நடத்தும் லீக் முறையிலான தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பெண் கள் பிரிவு ஆட்டமொன்றில் சுன்னாகம் சிவன் அணி வெற் றிபெற்றது.
கொக்குவில் இந்துக் கல்லூரி யின் கூடைப்பந்தாட்டத் திட லில் ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. சிவன் விளை யாட்டுக் கழகத்தை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. அணி மோதி யது. 67:45 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற் றது சிவன் விளையாட்டுக் கழகம். (ம-23)

## சமநிலைத் தவிர்ப்பில் வென்றது நியூவொரியஸ்

அராலி அண்ணா விளை யாட்டுக் கழகம் நடத்தும் 9 நபர்கள் பங்குபற்றும் வில கல் முறையிலான கால்பந் தாட்டத் தொடரில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஆட்ட மொன்றில் மல்லாகம் நியூ வொரியஸ் அணி வெற்றி பெற்றது.
தொடரின் ஆட்டங்கள் அராலி மாவத்தையில் அமைந் துள்ள சங்கானை பிரதேச செயலக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட் டமொன்றில் மல்லாகம் நியூ வொரியஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து துணவி செ்ன். நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணியினரும் தலா இரு கோல்களைப் பெற்ற மையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வைத்து வெற்றி யைத் தீர்மானிக்க வேண் டிய நிலை ஏற்பட்டது. முடி வில் மல்லாகம் நியூவொரி யஸ் அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## வடமாகாண கிரிக்கெட் சங்கத்தின் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 6
வடமாகாண கிரிக்கெட் சங்கத் தின் கூட்டமொன்று நாளை மறுதி னம் புதன்கிழமை நடைபெறவுள் ளது.
வலம்புரி விருந்தினர் விடுதியில் மு.ப. 10 மணிக்கு இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதைத் தொடர்ந்து, மு.ப. 11 மணியளவில் செய்தியாளர் சந்திப்பு இடம்பெறும் என்று வடமாகாண கிரிக்கெட் சங் கத்தின் செயலாளர் எஸ்.பி.றஜீ வன் தெரிவித்தார். (ம-23)

## கனகராயன்குளம் ஐக்கியம் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், மார்ச் 6
அமரர் விநாயகமூர்த்தி யனுதகீதன் ஞாபகார்த்த மாக நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் கனக ராயன்குளம் ஐக்கிய அணி சம்பியனானது.
கனகராயன்குளம் பொது விளையாட்டு மைதா னத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதி யாட்டத்தில் கனகராயன்குளம் ஐக்கிய அணியை எதிர்த்து சின்னடம்பன் பாரதி வித்தியாலய அணி மோதியது. முதல் செற்றை 15:12 என்ற அடிப்ப டையில் சின்னடம்பன் பாரதி கைப்பற்றியது.
எனினும், அடுத்த இரு செற்களையும் முறையே 15:5, 15:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஐக்கியம் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம-422)



விமானப்படையின் 66ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, நடத்தப்பட்ட 412.5 கிலோ மீற்றர் தூரமுடைய சைக்கிள் ஓட்டப்போட்டி கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி, யாழ். நகரில் நேற்றுக் காலை நிறைவடைந்தது. கடற்படையைச் சேர்ந்த அவிஸ்க மேண்டசன் முதலாம் இடத்தையும், விமானப் படையைச் சேர்ந்த மதுசங்க பெரேரா இரண்டாம் இடத்தையும், விமானப் படையைச் சேர்ந்த புத்திக்க குலசூரிய மூன்றாம் இடத்தையும் தமதாக்கினர். (ம-23)

# சாவகச்சேரி இந்து சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 6

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 18 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி சம்பியனானது.

மட்டுவில் மகா வித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சாவகச்சேரி மகளிர் கல்லூரி அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் இரு செற்களையும் 25:13, 25:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது சாவகச்சேரி இந்து. மூன்றாமிடத்தை மட்டுவில் அ.மி. த.க. பாடசாலை அணி தனதாக்கியது. (ம-422)



# இலங்கை - பங்களாதேஷ் டெஸ்ட் நாளை ஆரம்பம்




இலங்கை- பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இரு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர்நாளை ஆரம்பமாகவுள்ளது. முதலாவது ஆட்டம் காலியில் நாளை நடைபெறுகிறது. இரண்டாவது ஆட்டம் கொழும்பில் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ், இந்தத் தொடரில் இருந்து விலகிய காரணத்தால், அனுபவ வீரர் ரங்கன கேரத் அணியை வழிநடத்தவுள்ளார். கடந்த ஆட்டங்களில் உப்புல் தரங்க தடுமாற்றங்களை வெளிப்படுத்தியிருந்தார். எனவே, அவர் இந்தத் தொடரில் தன்னை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளார். சொந்த மண்ணில் தொடர் நடைபெறுவது இலங்கைக்குக் கூடுதல் பலம்.

பங்களாதேஷைப் பொறுத்தவரை இளம் சுழல்பந்துவீச்சாளர் மிராஸ் அச்சுறுத்தலாக இருப்பார். வேகப்பந்து வீச்சாளரான ரகுமான் காயத்தில் இருந்து மீண்டு வந்திருந்தாலும், இலங்கையின் ஆடுகளங்கள் சுழலுக்குச் சாதகமானவை என்பதால் ரகுமானால் இலங்கை வீரர்களை அடக்குவதென்பது மிகவும் கடினமே.

இலங்கை அணி விவரம்: கேரத் (தலைவர்), தனஞ்சய டி சில்வா, நுவான் பிரதீப், கருணாரத்ன, லக்மல், டில்ருவான் பெரேரா, சன்டகன், தரங்க, சந்திமல், டிக்வெல்ல, அசல குணரத்ன, லகிரு குமார, குசல் மெண்டிஸ், புஸ்பகுமார, சஞ்சய.

பங்களாதேஷ் அணி விவரம்: ரகிம் (தலைவர்), சகிப் அல் ஹசன், லித்தன் டாஸ், மெகடி ஹசன், மொஸ்டாக் ஹொசைன், ரூபல் ஹொசைன், சுபாசிஸ் றோய், தமீம் இக்பால், கமரூல் இஸ்லாம், மொகமதுல்லா, மொனிமுல் ஹக்கியூ, ரகுமான், சபீர் ரகுமான், சர்கர், இஸ்லாம், அகமட். (ம)

## லையனின் சாதனைகள்

ஆஸ்திரேலிய அணியின் சுழல்பந்து வீச்சாளர் லையன், இந்தியாவுக்கு எதிராக தற்போது நடைபெற்றுவரும் டெஸ்ட் ஆட்டத்தில் முதல் இன்னிங்ஸில் 50 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 8 இலக்குகளை அள்ளினார். இதன் மூலம் அவர் சில சாதனைகளுக்கு சொந்தக்காரர் ஆகியுள்ளார்.

தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் குளுஸ்னர் 1996 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு எதிராக 64 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 8 இலக்குகளை வீழ்த்தியதே இதுவரை சாதனையாக இருந்தது. இந்தச் சாதனையைத் தற்போது லையன் தகர்த்தார்.

இந்தியாவுக்கு எதிராக அதிக இலக்குகளைக் கைப்பற்றிய ஆஸ்திரேலிய வீரராக பிரட் லீ 53 இலக்குகளுடன் முதலிடத்தில இருந்தார். தற்போது 58 இலக்குகளைக் கைப்பற்றி லீயைப் பின்தள்ளினார் லையன். (ம)



## ஆஸ்திரேலியா மீண்டும் முன்னிலை

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஷோன் மார்ஷ், ரென்சொவ் இருவரினதும் அரைச்சதத்தால் முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றது ஆஸ்திரேலியா.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த இந்திய அணி 189 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது. பந்துவீச்சில் லையன் 8 இலக்குகளைக் கைப்பற்றி அசத்தினார். கெபி, ஸ்ராக் இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி இலக்குச் சரிவில்லாமல் 40 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது, முதல் நாள் முடிவு கண்டது. வோர்ணர் 23 ஓட்டங்களுடனும், ரென்சொவ் 15 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர்.

33 ஓட்டங்களுடன் வோர்ணரை வீழ்த்தினார் அஸ்வின். சிமித்தை பவிலியனுக்கு அனுப்பினார் ஜடேயா. ஆமை வேகத்தில் நகர்ந்தது ஆஸியின் இன்னிங்ஸ். ரென்சொவ், மார்ஷ் இணை தாக்குப் பிடித்தது. இருவரும் அரைச்சதம் கடந்தனர். 60 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரென்சொவ். ஷோன் மார்ஷை வீழ்த்தினார் யாதவ். ஹான்ட்ஸ்கொம், மிச்செல் மார்ஷ் சிறப்பாகச் செயற்படவில்லை. ஸ்ராக், வேட் தாக்குப்பிடித்தனர். ஆஸ்திரேலியா 237 -6 என்ற நிலையில் இருந்தபோது நாள் முடிவுக்கு வந்தது. வேட் 25 ஓட்டங்களுடனும், ஸ்ராக் 14 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)



# மறுபரிசீலனையில் கோட்டை விடுகிறது இந்தியா

நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்து பார்க்கும் வாய்ப்பை கடந்த ஆட்டங்களைப் போல், ஆஸ்திரேலியாவுக்கு எதிராக தற்போது நடைபெற்றுவரும் இரண்டாவது ஆட்டத்திலும் இந்திய அணி கோட்டை விடுகிறது.

துடுப்பெடுத்தாடும்போது கோக்லி இலக்குக்கு வந்த பந்தை அடித்தாடாமல் விட்டு ஆட்டமிழந்தார். நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்துபார்க்க விண்ணப்பித்து ஓர் வாய்ப்பை வீணடித்துவிட்டுச் சென்றார்.

நேற்று களத்தடுப்பிலும் இந்திய அணி தனது இரு வாய்ப்பையும் வீணாக்கியது. குறிப்பாக மார்ஷ் 12 ஓட்டங்களில் இலக்குக் காப்பாளரிடம் பிடிகொடுத்தார். பந்து கையுறையில் பட்டுச் சென்றது. நடுவர் ஆட்டமிழப்பு வழங்கவில்லை. ஆனால், இந்திய அணி மறுபரிசீலனை செய்துபார்க்க கோரவில்லை. மார்ஷின் காலில் பட்டுச் சென்ற பந்தை பிடியெடுப்புக்கு ஆட்டமிழப்பு கேட்டனர். நடுவர் கொடுக்க மறுக்க மறுபரிசீலனை செய்யும் முடிவுக்குச் சென்று கோட்டை விட்டனர். மறுபரிசீலனை வாய்ப்புக்கள் இல்லாமலேயே இந்திய அணி தற்போது களத்தடுப்பில் ஈடுபட்டு வருகிறது. (ம)



# டுபாய் தொடரில் முர்ரே சம்பியன்

டுபாய்ரென்னிஸ்தொடரில்ஆண்கள்ஒற்றையர் பிரிவில் கிண்ணம் வென்றார் இங்கிலாந்து வீரர் அண்டி முர்ரே.
நேற்றுமுன்தினம்நடைபெற்றஇறுதியாட்டத்தில்பன்னாட்டுத்தரப்படுத்தலில்முதலிடத்தில்உள்ளவரான முர்ரேயைஎதிர்த்து ஸ்பெயின் வீரர் பெர்னான்டோ வெர்டஸ்கோவ் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் இரு செற்களையும் முறையே 6:3, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் முர்ரே சம்பியனானார். 23 ஆண்டுகால டுபாய் ரென்னிஸ் வரலாற்றில்இந்தப் பட்டத்தை இங்கிலாந்து வீரர் ஒருவர் வெல்வது இதுவே முதல் முறையாகும். (ம)

# பார்சிலோனாகழகம் அசத்தலான ஆட்டம்

ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில் நேற்றுமுன்தின ஆட்டமொற்றில் பார்சிலோனா அணி அபார வெற்றிபெற்றது.
பார்சிலோனாவை எதிர்த்து செல்டா மோதியது. பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் மெஸ்ஸி, ஆட்டத்தின் 24 ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவுசெய்தார். 40 ஆவது நிமிடத்தில் நெய்மர் மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்று ஆதிக்கம் செலுத்தியது பார்சிலோனா அணி.
இரண்டாம் பாதியிலும் பார்சிலோனாவின் ஆதிக்கம் நீண்டு சென்றது. இவான் ரக்டிக் 42 ஆவதுநிமிடத்திலும், சாமுவேல் 62 ஆவது நிமிடத்திலும், மெஸ்ஸி 64 ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில்5:0என்றகோல்கணக்கில் வெற்றிபெற்றது பார்சிலோனா. (ம)



# அஸ்வினின் காணொலிகள் நுட்பத்தை வெளிப்படுத்தின

லையன் வெளிப்படை

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நடைபெற்றுவரும்டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில் 189 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. 8 இலக்குகளைக் கைப்பற்றினார் ஆஸியின் சுழல் வீரர் லையன். அஸ்வினின் பந்துவீச்சுக் காணொலிகளே தனக்கு இந்திய ஆடுகளங்கள் தொடர்பிலான நுட்பத்தை கற்றுத்தந்தன என்று லையன் தெரிவித்தார்.
நேற்றுமுன்தின முதல் நாள் ஆட்டம் முடிந்த பின்னர் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே லையன் இவ்வாறு தெரிவித்தார்.
என்னுடைய அபார பந்து வீச்சால், முதல்முறையாக இந்திய மண்ணில் சிரிப்பை வெளிப்படுத்துகிறேன். ஆடுகளத்தின் சில இடங்களில் வெடிப்புக் காணப்பட்டது. அதை நான் சரியாக பயன்படுத்திக் கொண்டேன். அஸ்வினின் ஏராளமான பந்து வீச்சு காணொலிகளைப் பார்த்துள்ளேன். அவை எனக்கு அதிகம் கற்றுத்தந்தன. இந்திய மண்ணில் சிறப்பாகச் செயற்பட அஸ்வினைப் பின்பற்றல் மிகச் சரியானது என்று லையன் மேலும் தெரிவித்தார். (ம)



# நம்பிக்கை!

இந்தியாவுக்கு எதிராக தற்போது நடைபெற்றுவரும்டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையை ஆஸ்திரேலியஅணியின்துடுப்பாட்டவீரர் ஷோன் மார்ஷ் வெளிப்படுத்தினார்.
முதல்இன்னிங்ஸில் 66 ஓட்டங்களைக் குவித்தார் மார்ஷ். அவரது ஆட்டத்தால் ஆஸ்திரேலியாமுன்னிலையில்உள்ளது. இதனையடுத்து நேற்றையநாள்முடிந்த பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்இவ்வாறுதெரிவித்தார். (ம)

# கூடுதல் ரி-20 ஆட்டங்கள்

மேற்கிந்தியத் தீவுகள் - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடரில் மேலும் இரு ஆட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.
பாகிஸ்தான்அணிமேற்கிந்தியத்தீவுகளுக்குசுற்றுப்பயணம் செய்து ரி-20, ஒருநாள் மற்றும் டெஸ்ட் ஆட்டங்களில் விளையாட இருக்கிறது. இரண்டு ஆட்டங்கள் கொண்ட ரி20 தொடர் முதலில்நடைபெறும்என்றிருந்தது. தற்போது4ஆட்டங்களாக இந்தத் தொடர் மாற்றப்பட்டுள்ளது. (ம)

# எந்த இடத்திலும் களமிறங்கத் தயார்; இவ்வாறு தெரிவித்தார் ரோகித் சர்மா

இந்திய டெஸ்ட் அணியில் இடம்பிடிக்கதான் எந்த இடத்திலும்களமிறங்கத்தயார் என்று தெரிவித்தார் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ரோகித் சர்மா.
தொடையில்ஏற்பட்டகாயம்காரணமாக4 மாதங்கள் ஓய்வில் இருந்தார் ரோகித். தற்போது அவர் மீண்டும் அணியில் இடம்பிடிக்க முடியாமல் தவிக்கிறார். ரோகித்தின் இடத்தை ரகானே பிடித்துள்ளார். ரகானேயை அணியில் இருந்து நீக்கும் எண்ணம் இல்லை என்று தலைலைவர் கோக்லி, பயிற்சியாளர்கும்ளே இருவரும் தெரிவித்துவிட்டனர். இந்தநிலையில்எந்த இடத்திலும்களமிறங்கதான்தயாராகஉள்ளேன் என்று தெரிவித்தார் ரோகித்.
தொடையில் ஏற்பட்ட காயத்தில் இருந்து நன்றாக குணமடைந்து விட்டேன். நான் நீண்டநேரம்துடுப்பாட்டப்பயிற்சியில்ஈடுபட்டு வருகிறேன். 4 மாதத்துக்குப் பிறகு திரும்பிவந்துள்ளேன். நான்சிறிதுபதட்டத்துடன் இருக்கிறேன். டெஸ்ட் ஆட்டங்களைப்பொறுத்தவரை எந்த வரிசையிலும் விளையாட நான் தயாராக இருக்கிறேன். அணி நிர்வாகம் தொடக்க வீரராக களமிறங்கச் சொன்னாலும் சந்திப்பேன் என ரோகித் மேலும் தெரிவித்தார். (ம)

காணி விற்பனைக்கு
பலாலி வீதி, ஊரெழுவில் வீதியோரமாக 3 பரப்பு 13 குளி அளவுள்ள காணி விற்பனைக்குண்டு.
077 824 5557

கார் விற்பனைக்கு
யப்பான் சுசுகி அல்ரோ, Automatic Gear KC-xxxx, பெற்றோல் சிக்கனம், 100% பராமரிப்பில் உள்ளது.
077 630 6733, 076 703 0343

காணி விற்பனைக்கு
யாழ். 21ஆம் வட்டாரம் புன்னாலை வீதியில் 11 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
077 058 5766

# கரீம் பென்சிமா மிரட்டல் ஆட்டம் எய்பரை வென்றது ரியல் மட்ரிட்

ஸ்பெய்னின் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையில் நடைபெற்றுவரும் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ரியல் மட்ரிட் கழகம் அபார வெற்றிபெற்றது.
ரியல்மட்ரிட்டைஎதிர்த்து எய்பர் பலப்பரீட்சை நடத்தியது. ஆட்டத்தின் 14 ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவு செய்து மட்ரிட்டுக்கு முன்னிலையைப் பெற்றுக் கொடுத்தார் பென்சிமா. 25ஆவது நிமி டத்திலும் அவர் மற்றுமொருகோலைப் பதிவுசெய்தார். றொட்ரிகாஸ் 29 ஆவது நிமிடத்தில் ஓர் கோலைப் பதிவுசெய்தார். முதல் பாதியின்முடிவில்3:0என்றுஆதிக்கம்செலுத்தியது மட்ரிட்.
60ஆவதுநிமிடத்தில்மட்ரிட்டின்நான்காவது கோலைப் பதிவுசெய்தார் வில்லியம்சன். 72 ஆவது நிமிடத்தில் எய்பரின் முதல் கோலைப் பதிவுசெய்தார் ரூபன் பென்ரா. முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் அபார வெற்றிபெற்றது.
வழக்கமாக மட்ரிட்டின் வெற்றிகளில் றொனால்டோ, பேல், ராமோஸ் கூட்டணியே அதிக கோல்களைப் பதிவுசெய்யும். அந்தக் கூட்டணி யால் அல்லாமல் ஏனைய வீரர்களால்இந்தவெற்றிரியல்மட்ரிட்டுக்குக்கிடைத்தது. (ம)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை O/L,A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், தொழில் தேடுவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
ஆங்கிலத்தில் ஒரெழுத்துத்தெரியாதவர்கள்கூட மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் -11.03.2017
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
1. வாரநாள் பிரிவுகள் : (திங்கள், புதன்) காலை 10-12 மாலை 3-4.30
2. வாரநாள் பிரிவுகள் : (செவ்வாய்,வியாழன்) காலை 10-12 மாலை 3-4.30
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.